பக்கங்கள்: 16

விலை: 30.00

# தீம்புனல்

THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:18 28.08.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



கல்வியும் எங்கள் மூலதனம்

பக்கம் 07



மக்களைத் திணறடிக்கும் வேலையில்லாப் பிரச்சினையும் பொருளாதார நெருக்கடியும்

பக்கம் 04



# தமிழ் மக்கள் சுயமரியாதையுடன் வாழ்வதா? சிதைந்து அழிந்து போவதா?

“தமிழ் மக்கள் இன்று அரசியல் தீர்வு என்ற அடிப்படைப்பிரச்சினை இன அழிப்புக்குச் சர்வதேச நீதிகோரும் பிரச்சினை, ஆக்கிரமிப்புப் பிரச்சினை, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் போனோர் விவகாரம், காணிப்பதிவு விவகாரம் என்கின்ற இயல்பு நிலையைக் கொண்டு வருதல் பிரச்சினை, போரினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பேணுதல் உட்பட மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப்பிரச்சினை என ஐந்து வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.”

சி.அ.யோதிலிங்கம்

கடந்த 22 ஆம் திகதி தமிழ்த்தேசியக் கட்சிகளான விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டனர். சுமார் மூன்றரை மணி நேரம் இக்கலந்துரையாடல் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது. முக்கிய தலைவர்களான மாவை சேனாதிராஜா, சி.வி.விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.எ.சுமந்திரன், என். சிறீகாந்தா, சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் கிழக்கிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கோவிந்தன் கருணாகரனும் இக் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றியிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக் கூடிய விடயங்களை அடையாளம் காணல், ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடருக்கு அறிக்கை ஒன்றைத் தயாரித்து சமர்ப்பித்தல். அரசுடனான பேச்சுவார்த்தை என்பன முக்கிய விடயங்களாகப் பேசப்பட்டன. ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக்கூடிய விடயங்களாக நான்கு விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கையை முன்வைத்தல், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், தாயகத்தில் இடம்பெறும் திட்டமிட்ட காணிப்பறிப்புக்களை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை

▶05





லக்சனா பாலகுமாரன்

# தலிபான்களின் ஆட்சி மீது ஆப்கானிஸ்தான் மக்கள் ஏன் அச்சமடைகிறார்கள்?

“ஆப்கானிஸ்தானில் பொது மக்களுக்கு உத்தரவாதம் அளிப்பதாக தலிபான்கள் உறுதியளித்துள்ள போதும் தங்களின் எதிரிகளை அவர்கள் வீடு வீடாகச் சென்று தேடி வருவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. தங்களுக்கு எதிர்கருத்து கொண்ட ஊடகவியலாளர்கள், நேட்டோ படையில் பணியாற்றியவர்கள், அவர்களுக்கு உதவியவர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை தலிபான்கள் பட்டியல் போட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.”

ஆப்கானிஸ்தான் தலிபான்கள் வசமாகி ஒரு வாரகாலத்தினைக் கடந்துள்ளது. தலிபான்களின் ஆட்சியை மேற்குலக நாடுகள் எதுவும் அங்கீகரிக்காத நிலையில் அந்நாட்டின் நகர்ப் புற மக்களும் தலிபான்களின் ஆட்சியின் கீழ் செயல்பட முடியாதென அந்நாட்டை விட்டு வெளியேற முயற்சித்து வருகின்றனர். ஆப்கானிய மக்கள் தலிபான்களின் ஆட்சி மீது நம்பிக்கை கொள்ளாது அச்சமடைவதற்கும் தலிபான்கள் மாற்றமடையாது இருப்பதற்குமான காரணங்களை தேடுவதாக இக் கட்டுரை அமைந்துள்ளது.

1980 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டிருந்த சோவியத் யூனியனுக்கு எதிராக பல போராட் டக் குழுக்கள் போராடின. எனினும் சோவியத் யூனியனின் வெளியேற்றத்திற்குப் பிறகு இப்போராட்டக் குழுக்கள் ஆப்கானை பல நிர்வாக அலகுகளாக்கி ஆண்டதுடன் ஒருவரையொருவர் மோதிக் கொண்டதுடன் ஊழலும் மலிந்து காணப்பட்டது. இப்பல போராளிக் குழுக்களிலிருந்து ஆப்கானிஸ்தானை மீட்டு ஊழல் அற்ற ஒரு ஆட்சியினை ஆப்கானிஸ்தானில் கொண்டு வருவதற்காக மாணவர்களினை மையமாக கொண்டு ஓமர் என்பவரினால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பே தலிபான் அமைப்பு ஆகும். தலிபான்கள் இக்குழுக்களுக்கு எதிராக போராடி வெற்றி பெற்றமை, 1989 இலிருந்து பல போராளிக் குழுக்களின் பதவி ஆசைகளுக்கும், ஊழலுக்குள்ளும் இருந்த ஆப்கானிய மக்களுக்கு பெறும் மகிழ்ச்சியினை அளித்தது. அம்மகிழ்ச்சியில் ஆப்கானிஸ்தானிய மக்களும் உலக நாடுகளும் தலிபான்களின் கொள்கை தொடர்பில் கவனம் கொள்ளத் தவறினர்.

ஆனால் தலிபான்கள் ஷரியத்தையும் முஹம்மது நபியையும் இணைத்து சட்டங்களை பிரகடனப்படுத்தினார்கள். தலிபான்களின் தளபதியான ஓமரின் பிரிவான பக்தூண் இனத்தவர்கள் பழைமைவாதச்

▶02

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

# தலிபான்களின் ஆட்சி மீது ஆப்கானிஸ்தான் மக்கள் ஏன் அச்சமடைகிறார்கள்?



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டங்களையும் மறுபுறம் பிரகடனப்படுத்திக் கொண்டனர். எனவே ஷரியச் சட்டம் மற்றும் பக்தூண் பழைமைவாதச் சட்டங்கள் ஆகியவற்றையும் இணைத்து தலிபான்கள் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டங்களும் அவற்றின் அமுலாக்கச் செயற்பாடுகளுமே இன்று ஆப்கானிஸ்தானிய மக்களின் அச்ச உணர்வுகளுக்குப் பிரதான காரணங்களாகும்.

அரசியலுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் ஷரியத்தில் இடமில்லை. அதனால் இனி தேர்தல் என்று ஒரு விடயத்தை எதிர்பார்க்காதீர்கள். ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இராணுவ வீரர்களுக்கும் இனி சம்பளம் கிடையாது. தேசப் பணிகளுக்குக் கூலி கேட்பது தகாது. எனினும் அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு அவசியமான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
திரைப்படங்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றிற்கு தடை. காற்பந்து, கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களுக்கு தடை. தொலைக் காட்சி, வானொலி முதலானவற்றுக்கு தடை. என்பன பொதுவான தடைகளாக காணப்பட்டன. இதனைவிட ஆண்கள், பெண்கள் என இருபாலாருக்கும் என தனித்தனித் தடைகள் பல விதிக்கப்பட்டன. மிக முக்கியமாக ஆண்கள் நான்கு அல்லது ஐந்து அங்குலத்திற்கு தாடி வளர்க்க வேண்டும்; தலைப்பாகை கண்டிப்பாக அணிய வேண்டும். பெண்கள் பர்தா அணிய வேண்டும்; அவர்கள் வீட்டை விட்டு வெளி இடங்களுக்கு செல்வதாக இருந்தால் ஆண் துணையுடன் செல்ல வேண்டும்; அழகு சாதனப் பொருட்கள் பயன்படுத்த முடியாது; கூந்தல் வெளியே தெரியாதபடி இருக்க வேண்டும்; வாகனங்கள் ஒட்ட அனுமதி கிடையாது.

இவற்றினை விட ஆப்கானிஸ்தானிய மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் முற்றிலும் மறுக்கப்பட்டது. கொடிகள், கோஷங்கள், கோரிக்கைகள். போராட்டங்கள் போன்றவற்றிற்கு முற்றிலும் அனுமதி மறுக்கப்பட்டன. உலகிலுள்ள வேறெந்த இஸ்லாமிய நாடுகளிலும் இத்தகைய சட்டங்கள் இருந்திருக்கவில்லை. ஆனாலும் தலிபானின் முக்கிய தளபதியான முஹம்மது ஒமர் சில விடயங்களில் மிகவும் தெளிவாக இருந்தார். யார் என்ன சொன்னாலும் தனது சட்டங்களிலிருந்து பின்வாங்குவதில்லை, யாருக்காவும் விட்டுக் கொடுப்பதுமில்லை. எனினும் கலாசார ரீதியில் தலிபான்கள் திணித்த பல சட்ட திட்டங்கள் பெரும்பான்மையான ஆப்கானிஸ்தானியர்களுக்குச் சங்கடம் விளைவிக்கக் கூடியதாக இருந்தது. ஆப்கானிஸ்தானில் சுமார் நாற்பது வீதமானவர்கள் தான் பக்தூண்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார். அப் பக்தூண் இனத்தவர்களினாலேயே சமாளிக்க முடியாத இந்த கெடுடிபிடிச் சட்டங்களை பக்தூண் அல்லாதவர்கள் அடியோடு வெறுக்கத் தொடங்கினார்.

ஆப்கானிஸ்தானிய மக்கள் தலிபான்களின் ஆட்சி மீது கொண்டுள்ள அச்ச உணர்விற்குரிய மற்றைய பிரதான காரணம் தலிபான்கள் மதத் தீவிரவாதத்துடன் இனத் தீவிரவாதத்தினையும் கடைப்பிடித்தமையாகும். தலிபான்கள் பெரும்பாலும் பக்தூண் இனத்தினைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இவ் இனத்தினை ஆப்கானிஸ்தானின் அரசியல் பொருளாதார, கலாசாரம் என சகலவற்றிலும் முதன்மைப்படுத்தவதற்கு அவர்கள் கைக்கொண்ட உத்தி குழு முறைமையினை இல்லாதொழித்தல் எனும் திட்டம் ஆகும். அதாவது ஆப்கானிஸ்தானில் அதுவரை காலம் இருந்துவந்த குழுத் தலைவர் அல்லது குட்டித் தலைமைகளை தலிபான்கள் இல்லாது செய்தார்கள். எந்த குழுவிற்கும் தலைவர் என்று யாரும் கிடையாது. அத்துடன் குழு என்ற கருத்தியலையே தலிபான்கள் முற்றாக நிராகரித்தார்கள். இனக்குழுவாக அல்லது இணையக் குழுவாக இருந்தாலும் அல்லது அனைத்துவிதமான அமைப்புக்களையும் தலிபான்கள் இல்லாமல் செய்தார்கள். ஆப்கானிஸ்தானுக்குத் தேவையான சகலவற்றினையும் தலிபான்கள் அதாவது பாக்தூண் இனத்தவர்கள் மேற்கொள்வார்கள் என கூறியபடியால் ஆப்கானிஸ்தானிய ஏனைய இனத்தவர்கள் நாட்டின் முக்கிய வேலைவாய்ப்புக்களை இழந்தனர். தங்களது உரிமைகள் மறுக்கப்படுகின்றமை குறித்து தலிபான்களினை எதிர்த்து கேள்வி கேட்க முடியாத நிலையும் காணப்பட்டது.

தலிபான்கள் ஆட்சியினை கைப்பற்றும் வரை அரசின் உயர்மட்ட அதிகாரிகளாக இருந்தவர்களில் பக்தூண்கள் மிகவும் குறைந்தவர்களே ஆவார். கல்வியறிவு அதிகமற்ற பக்தூண் இனத்தைச் சேர்ந்தவர்கள் சாதாரணப் பணிகளில் மட்டுமே அமர்த்தப்பட்டிருந்தனர். இந்தக் காலப்பகுதியில் உயர்நிலை பதவிகளினை வகித்தவர்களாக உஸ்பெக்குகள், தஜிக்குகள், ஹஜாரா இனத்தினைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். தலிபான்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இவ் உயர் பதவிகளில் பணியாற்றிய இவ் இனத்தவர்களுக்கெல்லாம் முன்னறிவிப்பு ஏதும் இல்லாமல் உடனடியாக பதவி இறக்கம் அல்லது நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களுக்கு பதில் அப்பதவிகளில் பக்தூண் இனத்தவர்களே நியமிக்கப்பட்டனர். அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட பக்தூண்கள் தகுதி திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படாமல் அவர்களுக்கான தகுதிகளாக பக்தூண் இனத்தினைச் சேர்ந்தவரா, தலிபான்களை ஆதரிக்கிறாரா, இறைவிசுவாசம் கொண்டவரா, சன்னி முஸ்லீமா என்பனவே கருத்தில் கொள்ளப்பட்டது.

இவ்வாறு பதவியில் அமர்த்தப்பட்ட பக்தூண் அதிகாரிகள் கல்வியறிவு அற்றவர்களாக இருந்ததுடன் நிர்வாகத்தினையும் திறம்பட முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமையே காணப்பட்டது. அவர்களுக்கு ஆங்கிலமோ, ஆப்கானிஸ்தானில் அதிக மக்களினால் பேசப்படும் பெர்சியன் உள்ளிட்ட பிற மொழிகளோ தெரியாத காரணத்தினால் மிகவும் சிரமங்களை எதிர்கொண்டனர். ஆப்கானிஸ்தானின் தலைநகர் பகுதிகளிலுள்ள அலுவலகங்களில் அல்லாமல் நகர்புற, கிராமப் புற நிர்வாகங்களிலும் பக்தூண்களே ஆக்கிரமித்தார்கள்.

இந்நிலையில் 2001 ஆம் ஆண்டு உலகத்தினையே புரட்டிப் போட்ட செப்ரெம்பர் தாக்குதலினை அடுத்து ஆப்கானிஸ்தானிற்குள் அமெரிக்காவின் வருகையினை அடுத்து தலிபான்களின் ஆட்சி இல்லாதொழிக்கப்பட்டது. அவ்வாறு தலிபான்களின் ஆட்சி இல்லாது தொழிக்கப்பட்ட பின்னர் ஆப்கானிஸ்தானில் நிறைய விடயங்கள் மாறத் தொடங்கின. குறிப்பாக 2004 க்குப் பின் ஆப்கானிஸ்தான் அரசியலமைப்பில் ஆப்கானிஸ்தான் பெண்களுக்கு அனைத்து வகையான உரிமைகளையும் வழங்கியதுடன் அவை பெண்களின் சமூக - பொருளாதார நிலையைக் கணிசமாக மேம்படுத்தியது. 2003 இல் 10 சதவீதத்திற்கும் குறைவாக, தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 2017 இல் 33 சதவீதமாக உயர்ந்தது. அதே ஆண்டில் இடைநிலைப் பாடசாலைகளில் பதிவு செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை ஆறு முதல் 39 சதவீதமாக உயர்ந்தது. மூன்று மில்லியன் ஆப்கானிஸ்தான் பெண்கள் 100,000 பல்கலைக்கழகங்களில் படிக்கின்றனர். அத்துடன் 2020 க்குள், ஆப்கானிஸ்தான் அரச, ஊழியர்களில் 21 சதவீதம் பெண்களாக காணப்பட்டதுடன் அவர்களில் 16 சதவீதம் பேர் மூத்த நிர்வாகப் பதவிகளில் பணியாற்றியுள்ளனர். ஆப்கானிஸ்தான் பாராளுமன்ற உறுப்பினர்களில் 27சதவீதம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டும் இருந்தது. ஆனால் இம்மாற்றங்கள் பெரும்பாலும் தலைநகர் மற்றும் முக்கிய நகரங்களில் வாழும் பெண்களில் ஏற்பட்டதுடன் தலிபான்களின் செல்வாக்கு மற்றும் கட்டுப்பாட்டுடைய பிரதேசங்களில் இத்தகைய மாற்றங்கள் எதுவும் நிகழாதிருந்தது. இந்த நிலையில் நகர்ப்புற ஆப்கானிஸ்தான் பெண்களின் சாதனைகள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்தது. ஆப்கானிஸ்தான் போன்ற பாரம்பரிய நாட்டில் மாற்றம் என்பது வரலாற்றில் ஒரு மெதுவான செயல்முறை தான்.

இந்நிலையில் தலிபான்கள் தங்கள் இரண்டாவது வருகையில் பெண்கள் மீதான தங்கள் பழமைவாத சிந்தனைகளை மீண்டும் திணிப்பார்கள் என்ற அச்சமும் தலிபான்களின் தீவிர மதவாத, இனவாத கொள்கைகள் சார்ந்த அச்சங்கள் பெரும்பாலான ஆப்கானிய மக்களிடம் காணப்படுகின்றது. எனினும் தலிபான்கள் தங்கள் கொள்கையில் சிறிதளவான மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதை அவதானிக்ககூடியதாகவுள்ளது. அதாவது முதலாவது தலிபான்களின் ஆட்சி கைப்பற்றலின் பின் ஓமர் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு மற்றும் படம் எடுத்தல், பேட்டி கொடுத்தல் ஆகியவற்றினை கடுமையாக எதிர்ந்திருந்தார். ஆனால் தற்போதைய தலிபான்கள் இதற்கு மாறுபட்டவகையில் பத்திரிக்கையாளர் சந்திப்புக்களினை மேற்கொள்வதோடு கேள்விகள் மற்றும் சந்தேகங்களினை தீர்த்துக் கொள்ளுவதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றனர். அதிலும் பெண் ஒருவருக்கு தொலைக்காட்சி வழியாக தலிபான் ஒருவர் தனது நேர்காணல் ஒன்றினை வழங்கியிருப்பது தலிபான்கள் மத்தியில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறியாகவே தென்படுகின்றது.

இதற்கான காரணங்களில் ஒன்றாக “தலிபான்கள் 2001 இற்கு பிறகு கல்விச் செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதாவது 2001 முதல் பல தலிபான் தலைவர்கள் தங்கள் படிப்பினை பூர்த்தி செய்வதற்கான செயல்பாடுகளை முன்னெடுத்ததுடன் உலகளாவிய இஸ்லாமிய சொற்பொழிவுகளில் பங்கேற்று தங்களின் கோட்பாடுகளில் கணிசமான புதிய ஏற்பாடுகளை முன்னெடுத்ததுடன் கணிசமான புதிய மாற்றங்களையும் மேற்கொண்டுள்ளனர் எனக் கூறினர். இதனால் தற்போதைய தலிபான் அமைப்பின் பெண்களின் கல்வி மற்றும் தொலைக்காட்சி பற்றிய பார்வைகள் சற்று மாறியிருப்பதாகவும் தெரிகின்றது. இதனை தலிபான்களின் பல பேட்டிகளிலும் அவதானிக்கக் கூடியதாகவே உள்ளது. அதாவது ஆப்கானிய பெண்கள் கல்வி கற்பதையோ அல்லது வேலை செய்வதையோ நாங்கள் எதிர்க்கவில்லை. பெண்களுக்கென்ற பல பாடசாலைகள் ஆப்கானிஸ்தானில் செயற்படுகின்றன என்பதுடன் கற்பித்தல் மகத்துவம் போன்ற வேலைகள் பெண்களுக்கு மிகவும் பொருத்தமானவை என தலிபான்கள் பரிந்துரைத்துள்ளனர். எனினும் பாடசாலைகள், மருத்துவமனைகள், வேலைத் தளங்கள் பெரும்பாலும் ஆண், பெண்களுக்கு எனத் தனியாக இயங்க வேண்டும் என்பதும், இஸ்லாமிய ஷரியச் சட்டத்தினை மீறும் வகையிலான எந்தவொரு நடவடிக்கைகளையும் தம் ஆட்சியில் இருக்காது எனவும் அதற்கு எதிரான நடவடிக்கையும் தாம் கட்டாயம் மேற்கொள்வோம் எனக் கூறியுள்ளனர்.

ஆகவே பெண்களுக்கு சில மட்டுப்பாடுகளை தலிபான்கள் இன்றும் விதிக்கவே விரும்புகின்றனர் என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. அதாவது அதிகாரத்துவம், வணிக நிறுவனங்கள் மற்றும் பொது மற்றும் அரசியல் செயற்பாடுகளில் பெண்களுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அடுத்து முந்தைய தலிபான் ஆட்சியில் கிரிக்கெட் மற்றும் காற்பந்து ஆகியவற்றுக்கு கடுமையான எதிர்ப்புக்களும் தடைகளும் நிலவிய போதும் தற்போதைய தலிபான் அமைப்பு அதற்கான அனுமதியினை வழங்கியுள்ளது. இலங்கையில் இடம்பெறவுள்ள இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய அணிக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர்களில் ஆப்கானிஸ்தான் அணி விளையாடுவதற்கு தலிபான்கள் அனுமதி வழங்கியுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. தலிபான்களின் நேர்மறையான பதிலினைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் வீரர்கள் காபூலில் தமது பயிற்சியைத் தொடங்கியுள்ளதுடன் எதிர்வரும் 21ம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பாகிஸ்தான் லாகூரில் பயிற்சி முகாம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ள நிலையில், ஆப்கானிஸ்தான் அணி பாகிஸ்தானுடன் 29 ஆம் திகதி இலங்கைக்குப் பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் பொதுமக்களுக்கு உத்தரவாதம் அளிப்பதாக தலிபான்கள் உறுதியளித்துள்ள போதும் தங்களின் எதிரிகளை அவர்கள் வீடு வீடாகச் சென்று தேடி வருவதாக ஐ.நா தெரிவித்துள்ளது. தங்களுக்கு எதிர்கருத்து கொண்ட ஊடகவியலாளர்கள், நேட்டோ படையில் பணியாற்றியவர்கள், அவர்களுக்கு உதவியவர்கள் மற்றும் மொழி பெயர்ப்பாளர்களை தலிபான்கள் பட்டியல் போட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் எனும் செய்தியினை நோக்கும் போது தலிபான்கள் பெரிதளவில் மாற்றங்களை உள்வாங்கவில்லை என்பது தெரிகின்றது. எனவே தலிபான்களின் மாற்றம் என்பது பொருளாதார முதலீடுகளினை வரவேற்கும் முகமான வெளிநாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கும் தங்களை உலக நாடுகள் அங்கீகரிப்பதற்குமானவையாக மட்டும் காணப்படுவதோடு முற்போக்கான மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தியுள்ளதாக தலிபான்களிடமிருந்து இன்னும் அவதானிக்ககூடியதாக இல்லை.

பல நூற்றாண்டுகள் சரித்திரப் பின்னணி கொண்ட தேசம் தான் ஆப்கானிஸ்தான். ஆனால் தலிபான்கள் ஆட்சியிலிருந்த முந்தைய ஐந்து ஆண்டுகளில் நிகழ்ந்த சில விடயங்களின் பாதிப்பு இன்னும் குறைந்தது நூறு வருடங்களுக்காவது அத்தேசத்தின் மக்களுக்கிடையே இருக்கும் என்கின்றார்கள் வரலாற்று ஆசிரியர்கள். எனவே சமூக நீதி, பெண் உரிமை, சட்ட ஒழுங்கு, மனித உரிமைகள், அரசியல் உரிமைகள் குறிப்பாக கல்வி கற்பதற்கும், தொழில் செய்வதற்கான ஆப்கான் பெண்களின் உரிமை ஆகியவற்றினை மதிப்பதன் மூலம் சொல்லொனா துன்பங்களை அனுபவித்த ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இது எங்களுடைய ஆட்சி என்ற நம்பிக்கையை ஏற்படுத்த தலிபான்கள் படிப்படியாக முன்வர வேண்டும். நாட்டை மீண்டும் அடிப்படைவாதத்திற்குள் கொண்டு செல்வது , கடந்த இருபது ஆண்டு கால அமெரிக்க ஆட்சியே பரவாயில்லை என ஆப்கானிஸ்தான் இளைய தலைமுறை தீர்மானிக்கும் நிலைமையை ஏற்படுத்திவிடும். ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# தற்போதைய தேவை, கல்வி நெருக்கடியிலிருந்து மாணவர்களை மீட்கும் செயற்றிட்டமே

இன்றைய இடர்காலச் சூழலில் நாட்டில் வாழுகின்ற பல்வேறு தரப்பினரும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடி, மன நெருக்கடி, தொழில் நெருக்கடி, கல்வி நெருக்கடி இவ்வாறு பல்வேறு நெருக்கடிகளுக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்ற சூழலில். அவர்கள் அவற்றிலிருந்து எவ்வாறு மீண்டு வரப் போகின்றார்கள்? என்ற கேள்வி உலகத்தின் ஒவ்வொரு மக்கள் செயற்பாட்டாளர்களையும் அச்சத்துக்குள்ளாக்கி வருகின்றது. இதில் உலக நாடுகள் தமது வல்லமைக்கு அமைவாக நெருக்கடிகளைச் சமாளித்து மீண்டு வரும் திடசித்தத்தினைக் கொண்டிருந்தாலும் இலங்கை போன்ற நாடுகளின் நிலைமை மோசமானதாக இருக்கபோகின்றது என்பது வெளிப்படை. இன்றைக்கு ஒரு வருடத்தையும் தாண்டி கொரோனா தனது ஆட்டத்தினைக் காட்டிக்கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் தனது வீரியத்தினை அதிகரித்து எல்லோரையும் அச்சத்துக்குள் உறைய வைத்துக் கொண்டே இருக்கின்றது. எப்போது இதன் ஆட்டம் நிறைவடையும் என்று தெரியாத சூழ்நிலையில் தொடர்ந்து என்ன செய்வது என்று யாராலும் தெளிவாகத் திட்டமிட்டு செயற்பட முடியவில்லை. தொழிற்துறைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பொருட் தட்டுப்பாடுகளும் விலையுயர்வுகளும் மக்கள் மீது பெரும் சுமையாக ஏறிக் கொண்டிருக்கின்றது. இதனால் மக்கள் மனதளவில் மிகச்சிக்கலான முரண்நிலையினை எட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இவற்றில் இருந்து மக்களை மீட்டுவரவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்தாலும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கோ, செயற்பாடுகளை முன்வைப்பதற்கோ, உரிய காலச்சூழலை அமைப்பதற்கோ அரசாலும் முடியாமல் இருக்கின்றது. எதிர்காலச் செயற்பாடுகள் பற்றிச் சிந்திக்கக் கூடிய கால அமைப்பு நிலையினை கொரோனா மாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதே இதன் வெளிப்படை.

இந் நிலைமையில்தான் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் கல்வி நெருக்கடியை மிக அவதானமாகக் கையாள வேண்டியிருக்கின்றது. ஒரு நாட்டினுடைய எதிர்கால ஒழுங்கமைப்பினை வடிவமைத்துத் தருவதில் மாணவர்களின் கல்வி பாரிய தாக்கு விசையாக அமைகின்றது. கல்வியறிவு வீதத்தினை வைத்தே அந் நாட்டின் மனிதவள மேம்பாட்டினை அளவிடுவதோடு, நாட்டின் சிறப்புத்தன்மையும் தீர்மானிக்கப்படுகின்றது. இதனால் நிகழ்காலத்தில் ஒழுங்கமைக்கப்படும் கல்வி நாட்டின் எதிர்கால வளர்ச்சியினை வடிவமைத்துத் தருவதில் பெரும் பங்குக்குரியது. ஆனால் இன்றைய நெருக்கடி நிலையில் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கல்விச் செயலொழுங்கை சரியான வகையில் திட்டமிட முடியாத நிலையில் திண்டாடி வருகின்றன. வெறுமனே நிகழ்நிலை வகுப்புக்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் கல்வி அடைவினை மேம்படுத்த முடியாது என்று தெளிவாகத் தெரிந்திருந்தும் வேறு வழியின்றி அதனையே பிரதானமாகக் கொண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை தெளிவானதே. ஆனால் அதற்கான மாற்று ஒழுங்கு அவசியம் என்பதனையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும். ஆனால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட முடியாத நெருக்கடி நிறைந்த காலத்தில் எத்தகைய கற்றல் நிகழ்ச்சி நிரலை வடிவமைப்பது என்பது பெரும் சவால் நிறைந்த ஒன்றுதான். இருந்தாலும் எல்லாவற்றினையும் மீறி அது சார்ந்து சிந்திக்க வேண்டிய தேவையும் உள்ளது. மாணவர்கள் தொடர்ச்சியாக பாடசாலைக் கல்வியை பெற்றுக் கொள்ள முடியாத சூழல் வெறுமனே கல்வி இழப்பை மட்டுமல்ல, குழுமயப்படுதல், சமூகமயப்படுதல், சமூக இசைவாக்கப்படுதல் போன்ற பிற இழப்புக்களையும் வழங்குகின்றது. அதனால் இன்று மேற்கொள்ளப்படும் நிகழ்நிலைக் கற்றல் செயற்பாடுகளை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் அனைத்துவகையான திறன்களையும் பெற்றுக் கொடுக்க முடியாது என்பதனை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்நிலையில் மாணவர்கள் வீட்டில் தொடர்ச்சியாக இருப்பதன் மூலம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள் அத்தகைய நெருக்கடிகள் அவர்களை கல்விமீது தொடர்ச்சியாக கவனம் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளிக் கொண்டிருக்கின்றது. பெரும்பாலான வீடுகளில் மாணவர்கள் கற்றலில் நாட்டமற்று தொலைபேசியில் விளையாட்டுக்களை விளையாடுவதில் அதி தீவிர நாட்டமுடையவராக இருப்பதனை அவதானிக்கும் பெற்றோரும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து வேதனை அடைவதனை அறியக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலையிலிருந்து மாணவர்களை மீட்டு அவர்களை வழிப்படுத்த வேண்டிய தேவை அதிகமாகியிருக்கின்றது. அதற்குரிய நிகழ்ச்சித்திட்டமே இப்போது வடிவமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

மாணவர்களைப் பொறுத்தவரையில் கற்றலுக்குரிய ஏதுவான மனநிலை, பொருத்தமான சூழல் இருக்கும் போதே அவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை விருப்பம் கொள்வர். இதனால் கல்வியியலாளர்கள், கல்வி அதிகாரிகள், கல்விச் செயற்பாட்டாளர்கள் இது தொடர்பில் சிந்தித்து அதற்குரிய நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்து ஒழுங்கமைக்க வேண்டும். தனியே நிகழ்நிலைக் கற்றபித்தல் மூலம் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டினை முன்னெடுக்க முடியும் என்று நம்புவது முட்டாள் தனமான செயற்பாடாகும். மாணவர்களின் தற்காலத்து உளவியல் நிலை அறிந்து அதற்கேற்றாற் போல் அவர்களைக் கையாளுதல் வேண்டும். பாடசாலைச் சமூகம், வலயக் கல்வி, மாகாணக் கல்வி நிர்வாகத் தரப்பினர் இதற்குரிய பொருத்தமான தீர்வினைக் கண்டடைவதற்கு முயற்சிக்க வேண்டும். வெறுமனே கற்பித்தல் செயற்பாடுகளையும் பரீட்சைகளையும் வைப்பது பொறுப்புக் கூறுவதிலிருந்து தப்பிப்பதற்குரிய செயற்பாடு என்பது தெளிவாகத் தெரிகின்ற விடயம். இப்போது மாணவர்களுக்குத் தேவை உளவியல் ரீதியாகக் கற்றலுக்குத் தயார்ப்படுத்தலாகவே அமைகின்றது. அதனால் கல்வி அமைப்புக்களால் முன்னெடுக்கப்படுகின்ற நிகழ்நிலை வகுப்புக்களுக்கு சமாந்தரமாக மாணவர்களுக்கான உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் கற்றல் நாட்டமுள்ளவர்களாக மாற்றியமைக்க முனைப்புக் கொள்ள வேண்டும். இதில் பெற்றோருக்குரிய வகிபங்கின் அவசியத்தினையும் உணர்த்தக் கூடிய நிகழ் ஒழுங்குகளை மேற்கொள்வது பற்றி கல்வியின் அனைத்துத் தரப்பினரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். ■

# சுய கட்டுப்பாடு இல்லாவிடின் கொரோனா உறவுகளற்று இடுகாடு ஏகச் செய்யும்

தந்திரன்

முழு முடக்கம் அறிவிக்கப்பட்டு ஒரு வாரம் கடந்து விட்டது. குறித்த முழு முடக்கம் தனது இலக்கு நிலையை அடைந்துள்ளதா? தற்போது அமுலில் உள்ள இந்த முழு முடக்கம் தேவையானதா? என்ற கேள்விகளும் எழாமல் இல்லை.

உறவுகளும் உரித்துக்களும் தீப்பந்தங்கள் பிடிக்காமல் இடுகாடு போகாமல் கொள்ளிக் குடம் சுமக்காமல் கொள்ளி வைக்காமல் எரியும் பிணங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மின்சார சுடலைகள் கொரோனாத் தொற்றினால் மரணமடைந்தவர்களைச் சுட்டெரிக்க காத்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மின்சாரத்தில் பிணங்களைச் சுடுவதற்கு பணம் கட்டிக் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

இத்தகைய ஒரு புறச்சூழலில் தான் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. பௌத்த பிக்குகளின் வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்கம் அதனை அமுல்படுத்தியுள்ளது. ஆயினும் அது முன்பு நிகழ்ந்தது போல தீவிரம் உடையதாக இல்லை. அது புத்த பிக்குகளையும் மகா நாயக்க தேரர்களையும் திருப்திப்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்ட முடக்கம் ஆகும். இன்று நிலவுகின்ற இப் பொது முடக்கம் தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் காணப்படுகின்றன.

அரசாங்கம் தவிர்க்க முடியாமல் விருப்பற்ற நிலையில் தனது அதிகாரத்தின் கீழ் இந்த முடக்கத்தினை அறிவித்திருக்கின்ற போதும், மக்கள் ஒவ்வொருவரும் அதனைக் கடைப்பிடிக்கின்றார்களா? என்றால் இல்லை. வழமைபோலவே தான்தோன்றித்தனமாக நடமாடித் திரிகின்றார்கள். அரசாங்கம் பொது முடக்கத்தினை அறிவிக்கவில்லை என்று விமர்சித்த பெரும்பாலானவர்கள் அரசின் முடக்கக் கட்டளையைக் கடைப்பிடிக்கவில்லை என்பது கண்கூடு. ஒழுங்கைகளுக்குள்ளாலும் இராணுவம் காவல்துறை அற்ற சந்திகளுக்குள்ளாலும் உலாவித் திரியும் இளுசுகள் ஏதோ சாதித்தது போல வீர வசனங்களைப் பேசிப் பெருமிதம் கொள்கிறார்கள்.



சுரி, அரசு இந்த முடக்கத்தினை அறிவித்து பாராமுகமாக இருக்கின்ற பொழுதும் சிற்சில இடங்களில் நடமாடித் திரிபவர்களைப் பிடித்து அன்ரிஜன் பரிசோதனையைச் செய்கின்றது. அதில் தொற்றாளர்களையும் இனம் கண்டிருக்கிறது. சில இடங்களில் உலாவித் திரிந்தவர்கள் மீது இராணுவமும் பொலிசும் தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். ஆனாலும் மக்கள் இதனையெல்லாம் மீறித் தறிகெட்டுத் திரிந்த வண்ணமே இருக்கின்றார்கள்.

இங்கு பொது முடக்க காலத்தில் வீட்டுக்குள் இருந்து தொற்றின் அபாயத்தினை குறைப்பதற்கு முயலாமல் நடமாடுதல் என்பது எத்தகைய மனநிலை சார்ந்தது. அரசு சர்வாதிகாரமாக செயற்படுகிறது. அது தன்னிச்சையாகச் செயற்படுகின்றது என விமர்சனங்களை முன்வைப்பதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் தகுதியுடையவர்கள் தானா? அல்லது நாங்கள் அனைவரும் அரசினுடைய சர்வாதிகார போக்கினை விரும்புகின்றோமா? அதாவது கொரோனா விதிமுறைகளை மீறுபவர்களை அரசு தண்டிக்க வேண்டும் என மனதளவில் எண்ணுகின்றோமா?

சட்டத்தினை மதிக்காத - மதிக்கத் தெரியாத நாம் தற்கொலைக்கு சமனான காரியத்தில் ஈடுபடுவது மட்டுமின்றி கொரோனாத் தொற்றுடன் நடமாடி மற்றவர்களை கொலை செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றோம். நடமாடித் திரிபவர்கள் இரண்டு விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒன்று, நாடமாடித் திரிகின்ற நாங்கள் அனைவரும் கொரோனாக் காவிகள், மற்றையது, நாங்கள் சந்திக்கின்ற ஒவ்வொருவரும் கொரோனாத் தொற்றுடன்தான் திரிகின்றார்கள் என்பது இவ்விரண்டு விடயங்களையும் குறைந்த பட்சம் எடுகோளாகவேனும் எடுத்துச் செயற்பட முயற்சிக்க வேண்டும். கொரோனாத் தொற்றின் காவியாகவோ அல்லது காவிகளிடம் இருந்து தொற்றுக்குள்ளாகும் நபர்களாகவோ நாங்கள் இருக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் வீடுகளில் இருத்தல் வேண்டும்.

எனவே அரசு விதிக்கின்ற கட்டுப்பாடுகளுக்குத்தான் செயற்பட வேண்டும் என்ற அவசியம் கிடையாது. சுய விழிப்புணர்வுடன் எம்மை நாமே பாதுகாத்தல் அன்றி எம்மை எவராலும் காப்பாற்ற முடியாது. நெஞ்சுக்கு நெருங்கிய உறவுகளின் மரணங்களில் கூட உரித்துக்கள் தீப்பந்தங்கள் பிடிக்காமல் இடுகாடு போகாமல் கொள்ளிக்குடம் சுமக்காமல் கொள்ளி வைக்காமல் எரியும் பிணங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனை தடுக்க முடியவில்லை. இதனை மாற்றுவதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ■

# மக்களைத் திணறடிக்கும் வேலையில்லாப் பிரச்சினையும் பொருளாதார நெருக்கடியும்

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

இலங்கையில் இனப்பிரச்சினையையும் விடப் பெரிய பிரச்சினையாக வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை போன்றவை இப்போது தலையெடுத்துள்ளன. தென்பகுதியில் இவ் வாறான ஒரு புரிதலே நீண்டகாலமாக உண்டு. ஜே.வி.பியின் எழுச்சியும் கிளர்ச்சிகளும் இந்த அடிப்படையிலானவையே. ஆட்சி மாற்றங்கள், ஜே.வி.பிக்கான அன்றைய ஆதரவு போன்றவையெல்லாவற்றுக்கும் இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளே முதற் காரணங்கள்.

ஏன் இப்பொழுது நமது சூழலில் இளைய தலைமுறையினர் அதிகமாகச் சட்டவிரோத மது உற்பத்தி / பாவனை, போதைப்பொருள் பாவனை, வன்முறைகளில் ஈடுபடுவது, கள்ள மண் ஏற்றுவது, களவாக மரம் வெட்டுவது, கொள்ளை, கடத்தல், கொலை உள்ளிட்ட தவறான விடயங்களில் ஈடுபடுவதற்கும் பிரதான காரணம், வேலையில்லாப் பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையுமே.

ஏனெனில் பொருளாதாரப் பிரச்சினை என்பது நேரடியாகவே நிகழ்காலத்தின் மீது நெருப்பையும் எதிர்காலத்தின் மீது இருளையும் ஒரே நேரத்தில் உண்டாக்கக் கூடிய ஒன்றாக உள்ளது. இதனாலே உலகின் அத்தனை நாடுகளும் அத்தனை சமூகங்களும் பொருளாதார அடிப்படைகளில் சரிவு ஏற்படாமல் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் துடிக்கின்றன.

ஆனால் நமது இலங்கையிலோ எதிர்காலத்தின் மீது கனத்த இருள் படிந்து கொண்டிருக்கிறது. இது நாட்டுக்குப் தரக்கூடியது.

பொருளாதார நெருக்கடி என்பது அசமத்துவ நிலையை மக்களிடையே பெரும் அளவில் உண்டாக்கி விடக் கூடிய ஒன்று. வரலாறு முழுவதிலும் பொருளாதாரப் பிரச்சினையினாலேயே மனித குலமும் அதனுடைய வரலாறும் கொந்தளித்திருக்கிறது. இரத்தம் சிந்தியுள்ளது.

ஆகவேதான், நாம் மிகக் கவனமாக இந்தப் பிரச்சினையைக் கையாள வேண்டியுள்ளது. கூடுதல் கவனமெடுக்கவும் வேண்டியுள்ளது.

இப்படிச் சொல்வதன் மூலம் இனங்களுக்கிடையிலான நெருக்கடியையும் இன ஒடுக்குமுறையின் கனதியையும் நாம் குறைத்துப் பேசுகிறோம் என்று அர்த்தமில்லை.

ஆனால், நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை பெரிய அளவுக்குத் தலைதூக்கியுள்ளது. உற்பத்தித்துறை படுத்துவிட்டது. பொருளாதாரம் மிகக் கீழே தாழ்நிலைக்குச் சென்றுள்ளது.

இதெல்லாம் ஏதோ இப்பொழுது இந்தக் கொரோனா நெருக்கடியினால் ஏற்பட்டது என்றில்லை. அதற்கு முன்பே போரினாலும் பொருத்தமற்ற பொருளாதாரக் கொள்கையினாலும் ஏற்பட்ட வீழ்ச்சி இது. இதற்கு ஆட்சியிலிருந்த அத்தனை தரப்புகளுக்கும் பொறுப்புண்டு.

இந்தப் பொறுப்பற்ற தன்மையினால் ஊழல், லஞ்சம் தொடக்கம் சட்ட விரோதத் தொழில் முறைகள் வரையில் நாட்டை நாசமாக்கக் கூடிய தீமைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. கிடைப்பதைச் சுருட்டிக் கொள்வோம் என்றே பலரும் யோசிக்கிறார்கள்.

இதில் வல்லமையுள்ளவர்களும் சாத்தியங்களைக் கொண்டவர்களும் பிழைத்துக் கொள்கிறார்கள். ஏனைய பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்கள் செய்வதறியாமல் திகைத்துப் போயிருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடியினால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு விலைவாசி ஏற்றம் நடந்து கொண்டிருக்கிறது. விலைவாசி ஏற்றத்தினால் செய்வதறியாது மக்கள் திணறிப்போய் நிற்கிறார்கள்.

இப்படி நெருக்கடிகள் ஏற்படும்போது நாடு இயல்பின்மையை நோக்கிச் செல்லும். இந்தச் சந்தர்ப்பத்தில் அதிகம் தாக்கப்படுவது இளைய தலைமுறையினரே. அவர்கள்தான் எதிர்காலத்தைக் குறித்து அதிகமாகச் சிந்திப்போர். தங்களுடைய எதிர்காலம் நெருக்கடியின் இருளில் மூழ்கியிருப்பதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.



இதில் படித்தவர்கள் போராட்டங்களை நடத்தியோ நீண்ட காலக் காத்திருப்புக்கு அப்பால் நின்றோ தமக்கான வேலை வாய்ப்பை அரச நிர்வாகத்துறைகளில் பெற்றுக் கொள்கிறார்கள். அரசும் எப்படியோ இவர்களையாவது சமாளித்துக் கொள்வோம் என்று வேலை வாய்ப்புகளை வழங்குகிறது. இதனால் இன்று நிர்வாகத் துறையில் அதிகப் படியான ஆட்கள் தேவைக்கதிகமாக வேலைக்கு உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். ஏனையோருக்கு வழியுமில்லை, திசையுமில்லை.

இதனால் ஆத்திரமேற்படுகிறது இவர்களுக்கு வேறு வழியில்லாமல் வன்முறையில் ஈடுபடுகிறார்கள். சரியான வழிகாட்டலும் அதற்கேற்ற பொறிமுறையும் தொழில்துறைகளும் இருக்குமானால் இளைஞர்கள் அதில் ஆர்வத்தோடு ஈடுபடுவர். அதில்லாத போது அவர்கள் தெருவில்தானே நிற்பர்? தெருவிலே எத்தனை நாட்களுக்குச் சும்மா நிற்க முடியும்?

> வல்லமையுள்ளவர்களும் சாத்தியங்களைக் கொண்டவர்களும் பிழைத்துக் கொள்கிறார்கள். ஏனைய பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்கள் செய்வதறியாமல் திகைத்துப் போயிருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடியினால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு விலைவாசி ஏற்றம் நடந்து கொண்டிருக்கிறது. விலைவாசி ஏற்றத் தினால் முன்பு மக்கள் திணறிப்போய் நிற்கிறார்கள்.

இந்த எளிய உண்மையை பலரும் அறிய முற்படுவதில்லை. அப்படித் தெரிந்தாலும் அதைப் பொருட்படுத்திக் கொள்வதில்லை. ஏராளம் அரசியல் பகுப்பாய்வாளர்கள் தமது மூச்சிரைக்க இரைக்க எவ்வளவோ அரசியல் வியாக்கியானங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மறந்தும் அவர்கள் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினையைப் பற்றி எழுதுவதே இல்லை. பேசாமல் அதைக் கடந்து சென்று விடுகிறார்கள்.

ஆனால் இந்த அடிப்படைப் பிரச்சினையை விட்டு விட்டு வெறுமனே இளைய தலைமுறையைக் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பார்கள். அல்லது அரசாங்கத்தின் மீது பழியைப் போட்டு விடுவார்கள். இரண்டினாலும் எந்தப் பயனும் கிட்டாது. பதிலாக இடைவெளியும் பாதிப்புமே நமக்கு ஏற்படும்.

இங்கே ஒரு கேள்வியை சிலர் எழுப்பக் கூடும். இதெல்லாவற்றுக்கும் பதிலையும் பரிகாரத்தையும் காண வேண்டியது அரசாங்கம்தானே. நாம் இதற்கு என்ன செய்ய முடியும்? என.



அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்துவதும் இறக்குவதும் மக்களாகிய நாமே. ஏன் நாம் நினைத்தால் அரசாங்கத்தைச் சரியாகவே இயங்க வைக்க முடியும். நமது அறிஞர்கள், துறைசார் வல்லுநர்கள், ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்கங்கள், எதிர்க்கட்சிகள், ஆளும் தரப்பிலுள்ள மக்கள் நேசச் சக்திகள் போன்ற தரப்புகள் சரியாகச் செயற்பட்டால் அரசாங்கம் உச்சவோ - தப்பவோ - முடியாது. எப்படியோ சரியாகச் செயற்பட்டே ஆக வேண்டும். இதற்காகத்தான் இந்தச் சக்திகளுக்கு எப்போதும் சமூக மதிப்புண்டு.

ஆனால் துரதிஸ்டவசமாக நம்முடைய சூழலில் இவற்றிற் பலவும் பொறுப்புடன் செயற்படுவதுமில்லை. பொறுப்பை உணர்வதுமில்லை. பொறுப்பை ஏற்பதுமில்லை. ஆளுமையாக நடந்து கொள்வதுமில்லை. பதிலாக தங்களுடைய தவறுகளையும் பொறுப்பின்மையையும் ஆளுமைக் குறைபாடுகளையும் மறைத்துக்கொள்வதற்காக எழுந்தமானமாக அரசாங்கத்தைக் குறைசொல்லி விட்டுத் தாம் தப்பித்துக்கொள்கிறார்கள். இது எவ்வளவுக்குத் தவறானது. எவ்வளவு அயோக்கியத்தனமானது! பச்சையாகச் சொன்னால், இது படு கேவலமானது.

இன்று நாடு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளும் வேலை வாய்ப்பின்மைக்குள்ளும் சிக்கியுள்ளது. இதற்கு அனைவருமே பொறுப்பாளிகள். எவரும் தப்பி விட முடியாது.

எளிய உதாரணம், இன்று நாட்டில் எத்தனை தொழிற்துறைகள் உள்ளன என்று நீங்களே கணக்கிட்டுக் கொள்ளலாம். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் கூடப் பல தொழிற்துறைகள் இருந்தன. சீமெந்துத் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலைகள், வாளித் தொழிற்சாலை, ஆணித் தொழிற்சாலை, மில்க் வைற் சவர்க்காரத் தொழிற்சாலை, அண்ணா கோப்பித் தொழிற்சாலை, சுப்பிரமணியம் சோடாக் கொம்பனி, பற்பொடித் தொழிற்சாலை, பீடிக் கொம்பனிகள், சுருட்டுத் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலை, கைத்தறி மற்றும் புடவைத் தொழிற்சாலைகள், தோல்கட்டி உணவு பதனிடும் தொழிற்சாலை எனப் பல ஆலைகளும் தொழிற்சாலைகளும் இருந்தன. இவற்றில் பல ஆயிரக்கணக்கானோர் வேலை செய்தனர். அப்பொழுது புலம்பெயர்வு நடக்கவே இல்லை. ஆகவே இங்கே இருந்த இளைய தலைமுறை முடிந்தளவுக்கு தொழில்களில் ஈடுபடக் கூடியதொரு நிலை இருந்தது. சூழல் இருந்தது. பெரும்பாலான நமது தேவைகளையும் இந்த ஆலைகளின் உற்பத்திகளில் இருந்து நாம் பெற்றுக் கொண்டோம்.

ஆனால் இன்று?

இவை எதுவுமே இல்லை.

எல்லாமே அழிந்து விட்டன. அண்ணா கோப்பி போன்ற ஒன்றிரண்டு தொழிற்சாலைகள் மட்டுமே உண்டு. அவையும் முன்னரைப்போல செழிப்பாக இயங்கவில்லை. அதற்கான சமூக ஆதரவுத்தளம் ஒடுங்கிச் சுருங்கி விட்டது.

இதற்கு மூன்று பிரதான காரணங்களைச் சொல்ல முடியும்.

1. அரசின் தெளிவற்ற பொருளாதாரக் கொள்கை.
2. முதலீட்டாளர்களிடையே உள்ள குழப்பம், பதட்டம், தயக்கம் போன்றவை.
3. வெளிப் பொருட்களின் மீதான அளவற்ற மோகம்.

இந்த மூன்று காரணங்களும் இணைந்து சுலபமாகப் பணம் சம்பாதிக்கும் ஒரு எண்ணத்தையும் வழிமுறையையும் நோக்கி இளைய தலைமுறையைத் தள்ளியுள்ளன.

இங்கே இப்படி இந்தப் பிரச்சினையைப் பற்றியும் அதற்கான காரண காரியங்களைப் பற்றியும் ஏராளமான தர்க்க நியாயங்களை எழுதிக் கொண்டிருக்கலாம். அதனால் எந்தப் பயனுமில்லை. பதிலாக என்ன செய்யப்போறோம் என்று சிந்திக்க வேண்டும். அதுவே அவசியமானது. அதுவே பயனுள்ளது. ■

# தமிழ் மக்கள்

## சுயமரியாதையுடன் வாழ்வதா? சிதைந்து அழிந்து போவதா?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்தல், 13 ஆவது திருத்தச்சட்டத்தை முற்றாக நடைமுறைப் படுத்த அரசையும் இந்தியாவையும் கோருதல் என்ப வையே இந் நான்கு விடயங்களுமாகும்.

13 ஆவது திருத்தச்சட்டம் ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட அரசியல் தீர்வை முன்வைப்பதால் அதனை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இருப்பினும் அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற அரசு முன்வருவது நல்லிணக்க நடவடிக்கையாகக் கருத முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட அடையாளப்படுத்தப்பட்ட விடயங்களில் ஒருமித்து செயலாற்றுவதுடன் ஏனைய விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் கட்டம் கட்டமாக நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்றும் இணக்கம் காணப்பட்டது. அரசியல் தீர்வு சம்பந்தமாக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம் என்றும் எனினும் அது தமிழ் மக்களின் நலன்களுக்காக இருக்க வேண்டுமே ஒழிய சர்வதேச அழுத்தங்களிலிருந்து அரசு தரப்பு தப்புவதற்கு இடம் கொடுப்பதாகக் கூடாது. என்றும் முடிவு எட்டப்பட்டது. போருக்கு முன்னும் பின்னும் அரசு திட்டமிட்ட நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவது அவசியமானது. இவ்வாறு முடிவுக்குக் கொண்டு வருதல் பேச்சுக்கான ஒரு நல்லிணக்க நடவடிக்கையாக அமைவதோடு சாதகமான சூழலையும் உருவாக்கும் என்றும் கூறப்பட்டது. எனவே சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் தமிழ்க்கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் உட்பட ஏனைய விடயங்களையும் உள்ளடக்கிய கோரிக்கைகளை முன்வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

செப்ரெம்பரில் வரவிருக்கும் ஐ.நா. கூட்டத்தொடரில் 46/1 பிரேரணை சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. இதன் பொருட்டு தமிழ்த்தரப்பினால் ஒருமித்த அறிக்கை ஒன்றும் தயாரித்து சமர்ப்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் 46/1 பிரேரணையில் உள்ள விடயங்களை அரசு நிறைவேற்றாமலும் அதேவேளை அவற்றிற்கு எதிராகச் செயற்படுவதைச் சுட்டிக்காட்டியும் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசினால் தமிழ் மக்களுக்கெதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் விபரங்களைப் பட்டியலிட்டும் அறிக்கையைத் தயாரிப்பது என்றும் இணக்கம் காணப்பட்டது.

நீண்ட காலத்தின் பின்னர் இரண்டு தமிழத்தேசியக் கூட்டணிகளும் கலந்துரையாடி பல்வேறு விடயங்கள் தொடர்பாக இணக்கத்துக்கு வந்தமை வரவேற்கக் கூடியவையே. தமிழ் மக்கள் இன்று அரசியல் தீர்வு என்ற அடிப்படைப்பிரச்சினை இன அழிப்புக்கு சர்வதேச நீதிகோரும் பிரச்சினை, ஆக்கிரமிப்புப் பிரச்சினை, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் போனோர் விவகாரம், காணிப்பதிவு விவகாரம் என்கின்ற இயல்பு நிலையைக் கொண்டு வருதல் பிரச்சினை, போரினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பேணுதல் உட்பட மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப்பிரச்சினை என ஐந்து வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இவை பற்றி இக் கட்டுரையாளர் முன்னரும் பல தடவை கூறியிருக்கின்றார். இவ் ஐந்து பிரச்சினைகளில் அரசியல் தீர்வு என்கின்ற அடிப்படைப் பிரச்சினையும் இன அழிப்புக்கு சர்வதேச நீதி கோருதல் என்கின்ற பிரச்சினையும் நீண்ட கால அடிப்படையில் தீர்வு காண வேண்டிய விடயங்களாகும். இதனை முன்னெடுப்பதற்கான கால அட்டவணை ஒன்று அவசியம். ஏனைய பிரச்சினைகளான ஆக்கிரமிப்பு பிரச்சினை, இயல்பு நிலையைக் கொண்டு வருதல் பிரச்சினை, அன்றாடப் பிரச்சினை, என்பன உடனடியாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளாகும். இப்பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதன் மூலமே அரசு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நல்லெண்ணத்தைக் காட்டக்கூடியதாக இருக்கும். இது பற்றியும் இக்கட்டுரையாளர் முன்னரும் பல தடவை கூறியிருக்கிறார்.

இவற்றில் சில விடயங்களை கலந்துரையாடலில் பங்குபற்றிய சில தமிழ்த்தேசியக்கட்சிகள் அடையாளம் கண்ட போதும் அவை போதுமானவை எனக்கூற முடியாது. எனவே எதிர்காலத்திலாவது உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளை பட்டியலிட்டு அடையாளப்படுத்தி அரசிடம் கோரிக்கைகளாக முன்வைப்பது அவசியம். இந்த விடயங்களை முழுமையாக நிறைவேற்றும் வரை பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது சர்வதேச அழுத்தங்களில் இருந்து அரசை விடுவிப்பதற்கு பயன்படுமே தவிர தமிழ் மக்களின் நலன்களைப் பேணுவதற்கு எந்தவகையான பயன்பாட்டையும் கொடுக்க மாட்டாது. உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய விபரங்களைப் பின்வருமாறு அடையாளம் காட்டலாம்

1. அரசு மேற்கொள்ளும் பச்சை ஆக்கிரமிப்புக்களை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். குறிப்பாக தொல்லியல் பிரதேசம் எனக்கூறி காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும்.
2. முதலீட்டுத் திட்டங்கள் என்ற பெயரில் தமிழர் தாயகத்தின் கடல் வளங்களும், நில வளங்களும் கனிய வளங்களும் அபகரிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். இவ்வாறான முதலீட்டுத்திட்டங்களை மேற்கொள்ளும் போது தமிழர் தாயகத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளுடன் கலந்தாலோசித்து அவற்றையும் இணைத்துக் கொண்டே மேற்கொள்ளுதல் வேண்டும்.
3. தேசியப் பாடசாலைகள் என்ற பெயரிலும் வைத்திய சாலைகளைத் தரமுயர்த்துதல் என்ற பெயரிலும் மாகாணசபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.
4. நகர அபிவிருத்தி அதிகார சபையானது நகர விரிவாக்கம் என்ற பெயரில் உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.
5. வலிகாமம் வடக்கிலுள்ள காணிகள் உட்பட போர்க் காலத்தில் படையினரால் பறிக்கப்பட்ட அனைத்துக் காணிகளும் உடனடியாக மீள ஒப்படைக்கப்படல் வேண்டும்.
6. தமிழர் தாயகத்தில் கண்ட கண்ட இடமெல்லாம் பௌத்த விகாரைகள் கட்டப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.
7. படையினருக்கென அடாத்தாக காணிகள் பறிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.
8. அரசியல் கைதிகள் அனைவரையும் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் உடனடியாக விடுதலை செய்தல் வேண்டும். அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் உடனடியாக வழங்கப்படல் வேண்டும்.
9. காணாமல் போனோர் விவகாரம் தொடர்பாக உண்மை கண்டறியப்படுவதோடு போதுமான இடைக்கால இழப்பீடு சம்மந்தப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக வழங்கப்படல் வேண்டும்.
10. மாகாணசபைத்தேர்தல் சட்டம் பழைய விகிதாசார முறைப்படி இடம் பெறும் வகையில் திருத்தப்பட்டு உடனடியாகத் தேர்தல் நடத்தப்படல் வேண்டும்.
11. வடமாகாணத்துக்கான மாகாண முதலமைச்சர் நிதியம் உருவாக்கப்படுவதற்கு உடனடியாக அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

ஐ.நா. கூட்டத்தொடர் தொடர்பாக ஒருமித்த அறிக்கையை சமர்ப்பிப்பது என்ற முடிவும் வரவேற்கப்பட வேண்டியது. ஆனால் அந்த அறிக்கையில் 46/1 பிரேரணையில் உள்ள விடயங்களை அரசு நிறைவேற்றாமல் இருப்பதையும் அதற்கு எதிராகச் செயற்படுவதையும் சுட்டிக்காட்டுவது, பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக அரசு முன்னெடுத்த நடவடிக்கைகளை பட்டியலிடுவது என்பவை மட்டும் போதுமானதல்ல. இன அழிப்புத் தொடர்பாகச் சர்வதேச சமூகம் என்ன செய்ய வேண்டும் என்பதை வலுவாக அடையாளமிட்டுக்காட்டுவது மிகவும் அவசியமானதாகும். 46/1 பிரேரணையை சிறீலங்கா அரசு ஏற்கனவே நிராகரித்துவிட்டது. எனவே அதனைப்பற்றிப் பேசுவதில் எந்தப்பயனும் கிடைக்கப்போவதில்லை. அடுத்த கட்டத்துக்கு நகர்வது பற்றியே யோசிக்க வேண்டும். இது தொடர்பாகக் கடந்த கூட்டத்தொடரில் மனித உரிமை ஆணையாளரினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை முன்னாள் மனித உரிமை ஆணையாளர்கள் இணைந்த முன்வைத்த அறிக்கை கடந்த கூட்டத்தொடருக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய அறிக்கையைத் தயாரிப்பதே ஆரோக்கியமாக இருக்கும்

அடுத்த கட்டமென்பது மூன்று வகையான நகர்வுகளாக இருக்கலாம். இன அழிப்பு விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கடமை முடிந்த விட்டது. இதற்கு மேலாக பெரிதாக எதனையும் அதனால் செய்து விட முடியாது. இதனால் அவ்விவகாரத்தை மனித உரிமை பேரவைக்கு அப்பால் நகர்த்தி விட்டு அன்றாடம் இடம் பெறும் மனித உரிமை விவகாரங்களை பேரவையின் கவனத்திற்கு விட்டு விடலாம். இது முதலாவது நகர்வாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவது நகர்வாகச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு விவகாரத்தைப் பாரப்படுத்துவது பற்றி யோசிக்க வேண்டும். இதற்கு ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கும் ஐ.நா. பொதுச்சபைக்கும் விவகாரத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அங்கு சில வேளைகளில் சீனாவும், ரஸ்யாவும் மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைத் தடுத்து நிறுத்தலாம். அவ்வாறு நிறுத்தினாலும் திரும்பத் திரும்ப கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். பாலஸ்தீனப் பிரச்சினையில் பல விவகாரங்கள் ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கு வந்த போது அமெரிக்கா மறுப்பானை அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்த போதும் திரும்பத் திரும்ப கொண்டு வரப்பட்டது. திரும்பத்திரும்ப கொண்டு வருவது இன அழிப்பு விவகாரத்தை சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக்குவதற்கு பெரிதும் உதவிகரமாக அமையும்.

மூன்றாவது நகர்வு சர்வதேச அரசுகள் தங்கள் தங்கள் நாடுகளிலேயே அந்நாடுகளின் சட்டங்களுக்கேற்ப இன அழிப்பு விசாரணையை நடாத்துவதாகும். பிரிட்டன் உட்பட பல நாடுகளில் இதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளன. ஆனால் அந் நாடுகள் அதற்கான விருப்பத்தினைத்தான் இன்னமும் போதியளவு காட்டவில்லை. தமிழ்த்தரப்பு சர்வதேச சிவில் சமூகத்துடன் இணைந்து வலுவான அழுத்தங்களைக் கொடுக்கும் போது இவற்றைச் சாத்தியமாக்க முடியும். சர்வதேச அரசுகள் குறிப்பாக அமெரிக்கா, மேற்குலக நாடுகள் இந்தியா போன்றவை தங்கள் தங்கள் அரசியல் நலன்களுக்கு ஏற்ப தான் செயற்படும் என்பது உண்மையே! ஆனாலும் இன்று இந்த நாடுகளுக்கும் ஒரு தேவை ஏற்பட்டுள்ளது. அதே வேளை தமிழ் மக்களுக்குத் தேவை இருக்கின்றது. இவ்விரண்டு தேவைகளுக்கும் இடையே பொதுப்புள்ளியைக் கண்டுபிடித்து அதனைப் பலப்படுத்துதன் மூலமே இவற்றைச் சாத்தியமாக்க முடியும். கடந்த காலத்தைப் போல வல்லரசுகள் தமிழ் மக்களை பகடைக்காய்களாகப் பயன்படுத்துவதை ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது.

மேற்கூறிய விடயங்களை முன்னெடுப்பதென்றால் அதற்கான நிபந்தனை தமிழ் மக்கள் பலமாக இருப்பதே. ஒருங்கிணைந்த அரசியல் இல்லாமல் தமிழ் மக்களின் பலத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்ட கட்சிகள் கொள்கை நிலைப்பாட்டில் உறுதியானவை எனக் கூறுவதும் கடினம். கடந்த காலத்தில் தங்களது உறுதித் தன்மையை அவை மெய்ப்பிக்கவில்லை. தமிழ்மக்கள் பகடைக்காய்களாக பயன்படுத்தப்படுவதற்கே இக்கட்சிகள் உதவியிருந்தன. எனவே இக் கட்சிகளை மட்டும் நம்பி தமிழ் மக்களின் எதிர்காலத்தை இவற்றிடம் ஒப்படைக்க முடியாது.

தவிர அரசியல் கட்சிகளினால் மட்டும் இவ்விவகாரம் முன்னெடுக்கப்படக்கூடியதல்ல. மக்கள் அமைப்புக்களையும் இணைத்த ஒரு தேசிய அரசியல் இயக்கத்தினாலேயே இதனை முரணின்றி முன்னெடுக்க முடியும். இன்று தமிழ்க்கட்சிகள் எனக் கூறப்படுபவை உண்மையில் அரசியல் கட்சிகளாகவும் இல்லை வெறுமனே தேர்தலில் போட்டியிடும் குழுக்களாகவே இவை உள்ளன. குறைந்த பட்சம் தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளைப் போலக் கூட இவை இல்லை. வெறும் பெயர்ப் பலகைக் கட்சிகளாகவே உள்ளன.

இக் கட்சிகளிலும் தமிழத்தேசிய மக்கள் முன்னணி இக் கலந்துரையாடலில் பங்கு பற்றவில்லை. அதன் பங்களிப்பு இல்லாமல் ஒருங்கிணைந்த கட்சிகளின் குரலை கட்டியெழுப்ப முடியாது. எனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் இது தொடர்பான பேச்சுவார்த்தை நடாத்தப்படல் வேண்டும். இந்த விவகாரத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தீண்டாமையைப் பின்பற்றுவது தமிழ்த் தேசிய அரசியலுக்கும் நல்லதல்ல. அக் கட்சிக்கும் நல்லதல்ல. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மட்டும் தனித்து நின்று தமிழர் விவகாரத்தை ஒரு போதும் முன்னெடுக்க முடியாது. இது ஒருங்கிணைவை வேண்டி நிற்கும் காலம். இதில் மைதானத்தில் வெளியே நின்றுகொண்டு ஆட்டத்திற்கு நான் வரமாட்டேன் எனக் கூறுவது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் எதிர்காலத்திற்கும் நல்லதல்ல. தமிழ் மக்கள் மத்தியிலுள்ள நடுநிலை சக்திகள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு இது தொடர்பாக அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் எண்ணிக்கையில் ஒரு சிறிய தேசிய இனம் அது தன்னுடைய அக ஆற்றலை மட்டும் வைத்துக்கொண்டு முன்னேற முடியாது புற ஆற்றலையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். உலகத் தமிழர்களையும் உலகின் முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் எம்முடன் இணைத்துக் கொண்டு ஒரு பேரியக்கமாக முன்னேறும் போதே இதனைச் சாத்தியமாக்க முடியும். முன்னரே கூறியது போல இவற்றிற்கெல்லாம் முக்கிய நிபந்தனை தாயகத்தில் ஒருங்கிணைந்த அரசியலை முன்னெடுப்பதே. இது பற்றி முன்னெடுக்கும் இக்கட்டுரையாளர் வற்புறுத்தியிருக்கிறார்.

இந்த விவகாரத்தில் சுயமரியாதையுடன் வாழ்வதா? அல்லது சிதைந்து அழிந்துபோவதா? என்பதே தமிழ்த்தரப்புக்கு உள்ள தெரிவு.

■

வியாக்ரன்

# அறிந்தேன்...பகிர்ந்தேன்...



தாய்லாந்தின் பாங்கொக் விமான நிலையத்தில் (Suvarnabhumi Airport) வண்ணமயமான நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. திருமாலின் கூர்ம அவதார நிகழ்வினைக் குறிக்கும், திருப்பாற்கடலைக் கடைந்த வரலாறும் வசீகரமான சிலையாக வடிவமைக் கப்பட்டுள்ளது. வாசுகிப் பாம்பினைக் கயிறாகவும் மந்த ரமலையை மத்தாகவும் கொண்டு தேவர்களும் அசுரர்க ளும் பாற்கடலைக் கடைகின்ற நிகழ்வை அழகான சிலையாக உருவாக்கிக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

கோவலனின் பிரிவிலே வாடுகின்ற மாதவி சாதாரிப் பண்ணிலே “இளை இருள் பரந்ததுவே எல்செய்வான் மறைந்தனனே” எனப்படுகின்றாள். சாதாரிப்பண்தான் பந்துவராளிராகம் என அழைக்கப்படுகின்றது. கருணைச் சுவையினை வெளிப்படுத்துகின்ற ராகமாக அமைகின் றது. எம்.எஸ். விஸ்வநாதன் வாடிக்கை மறந்தது ஏனோ (கல்யாணப்பரிசு) போன்ற பாடல்களில் பயன்படுத்தியுள் ளார். வா வெளியே இளம் பூங்குயிலே (பாடு நிலவே); என் சோகக் கதையை (தூறல் நின்னு போச்சு); விழியின் வழியே நீயா (அர்ச்சனைப் பூக்கள்) முதலான பாடல்களில் இசைஞானி பந்துவராளிராகத்தினைக் கையாண்டுள்ளார்.

குவாண்டம் என்ரங்கிள்மென்றில் (Quantum Entanglement) ஒன்றாக இணைந்திருக்கும் ஜோடித்துகளில் ஒன்றைப் பூமியிலும், மற்றையதைப் பிரபஞ்சத்தின் வேறொரு கோளிலும் வைத்துவிட்டு, வேறு கோளில் வைக் கப்பட்ட துகளை இடம் வலமாகச் சுற்றினால் பூமியிலுள்ள துகளும் இடம் வலமாகச் சுற்றும். பௌதிகவியலானது எதிர்காலத்தில் நிகழ்த்தப்போகும் கண்டுபிடிப்புகள், கற்பனைக்கு அப்பாற்பட்டவையாகவே அமையும்.



தொலைக்காட்சி விளம்பரங்களில் “கற்பனைச் சித்தரிப்பு” எனக் குறிப்பிடுகின்றனர். சித்திரம் என்ற சொல்லின் அடியாகப் பிறந்தால் சித்தரிப்பு என்றே அமைய வேண்டும். இதே போல ஏற்கனவே, கட்டிடம், பரீச்சயம், வம்சாவழி போன்ற சொற்களையும் ஏற்கனவே, கட்டடம், பரிச்சயம், வம்சாவளி எனக் கையாளுதலே ஏற்புடையது.

“முடியும் என்று நினைச்சதாலதான் தோமஸ் அல்வா எடிசன் ‘கரண்டை’ கண்டு பிடிச்சாரு” என்ற வசனம் அமை திப் படை திரைப்படத்தின் திருப்புமுனைக் காட்சி யொன்றிலே இடம் பெறுகின்றது. இவ்வாண்டு வெளி யான “கமலிநடுக்காவேரி” திரைப்படத்தில் அந்த வச னத்தை மீளவும் பயன்படுத்தியுள்ளனர். உண்மையிலே மின்சாரத்தைக் கண்டறிந்தவர் எடிசன் அல்வா. பென்ச மின் பிராங்கிளின்! அமெரிக்காவின் 100 டொலரில் பென்சமின் பிராங்கிளினின் படம் போடப்பட்டுள் ளதை முக்கியமான காட்சி ஒன்றிலே Slumdog millionaire திரைப்படம் (A.R. ரகுமானுக்கு ஒஸ்கார் விருதுக ளைப் பெற்றுக் கொடுத்த படம்) தெளிவுபடுத்தியுள் ளது. பொது அறிவு வினா விடையினை மையப்படுத் திய கமலி நடுக்காவேரியில் இத்தகைய தவறு இடம் பெற்றிருப்பது நெருடலுக்குரியது.

ஈழத்து இலக்கிய விமர்சகர்களில் இ.இராஜேஸ் கண்ணன் தனித்துவ மானவர். கடந்த வருடம் வெளிவந்த “நயம்பட”, “இலக்கியத்தின் சமூகப் பிரதிபலிப்புகள்” என்னும் அவரது இரு நூல்களும் காத்திரமானவை. ஆழமான தேடலுடன் ஆய்வினை முன்னெடுத்துச் சென்றுள்ளார். தீவிரமான விடயங்களைக் கூட எளிய மொழி நடையில் முன்வைக்கின்றார். ஈழத்து இலக்கியப்புலத்திற்கு இ.இராஜேஸ் கண்ணன் கனதி சேர்த்து வருகின்றார். சுந்தர ராமசாமியின் (பசுவய்யா ) கவிதையோடு இவ்வாரப் பதிவினை நிறைவு செய்கிறேன்.

“எங்கிருந்து ஆரம்பிக்கிறது இந்த நிழல்?
பாதத்தின் விளிம்பிலிருந்து தானா?
அல்லது அதன் அடியிலிருந்தா?
பூமியில் காலூன்றி நிற்கும் போது
நிழல் மேல் தான் நிற்கிறோமா?
காலைத் தூக்கிப் பார்க்கலாம் தான்
அந்த யோசனையை நான் ஏற்கவில்லை
பூமியில் நிற்கும் போது
எங்கிருந்து ஆரம்பிக்கிறது இந்த நிழல்
என்பது தான் எனக்குத் தெரிய வேண்டும்.”




ந.குகபரன்

# இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிது

“செய்க பொருளை“ என்று வள்ளுவர் பொருள் செய்யத்தூண்டுகிறார். பொருள் வாழ்வின் இயக்குவிசையாக அமைகிறது. தனிமனிதன் முதல் நாடு ஈறாக உயர்வும் நிறைவும் பெறுவதற்கு செல்வத்தின் இருப்பு அவசியம். வாழ்வு குறித்த நம்பிக்கையை செல்வம் வழங்குகிறது. தினமும் முயற்சியுடையராய் வினைசெய்யத் தூண்டுவது பொருளின் பொருட்டேயாகும். முயற்சியால் வாழ்வு சிறக்கிறது. ஆரோக்கியம் நிலைபெறுகிறது. தேவைகள் தீர்ந்து நிம்மதி ஏற்பட செல்வம் அவசியமாகிறது.

செல்வம் இல்லாதவன் சமூகத்தில் குரலற்றவனாக வாழநேரிடுகிறது. இந்த இயந்திர உலகில் கல்விகற்றவர்களைக் காட்டிலும் செல்வமுள்ளவர்களே செல்வாக்கு மிக்கவர்களாகத் திகழ்கின்றனர். இதனை அன்றே உணர்ந்தவள் ஔவையார்,

“கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்
எல்லோரும் சென்றங்கு எதிர்கொள்வர் -இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லாது அவன்வாயிற் சொல்”

என்றார். கைப்பொருள் உள்ளவன் அனைவராலும் கொண்டாடப்படுகிறான். ஆனால் பொருள் இல்லாவிடில் கட்டிய மனைவியாலும் பெற்றதாயாலும் கூட வெறுக் கப்பட்டு மதிப்பற்றவனாக ஒதுக்கப்படுகிறான். பொருளின்றி ஒருபொழுது வாழஇயலாது. ஒவ்வொ ருவரும் தம்மால் முடிந்தளவு நேர்மையான வழியில் பொருளீட்டுவதே அறமாகும்.

நிலம் மக்களின் தொழிலை நிர்ணயிக்க தொழில் மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்க வாழ்க்கையானது இயற்கையோடு ஒட்டியதாக ஆரம்பகால வாழ்க்கைமுறை அமைந்தது. வாழ்வதற்கு சவால் மிக்க நிலத்தில் வாழ்ந்த எம்மவர் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்ட போதிலும் பொருளீட்டலை முதன்மையாகக் கருதினர் என்பதற்கு சங்கஇலக்கியங்களில் சான்றுகள் உண்டு.

நிலமானது மக்களின் வாழ்வுக்கான வழியைத் திறக்காத மணல் விரவிய பாலை வெளி. தலைவியோடு நேயம் கொண்ட தலைவன் வாழ்தல் நிமித்தம் பொருள் ஈட்ட விழைகிறான். இது தலைவிக்கு எத்தகைய துயரைத் தரும் என்பதை அவன் அறிவான். ஆனால் அவனுக்கு வேறு தெரிவுகள் இல்லை. வாழ்வை மகிழ்ச்சியாகக் களிக்க வேண்டும் எனின் பொருள் அவசியமாகிறது. இதனை அவள் மனம் ஏற்கும் வண்ணம் உரைத்து அவன் விடைபெறவேண்டும். பாதுகாப்பற்ற நெடுவெளியில் அவன் நீண்ட பயணம் செல்லவேண்டும்.

தலைவன் ஒருவாறு விடைபெற்றுச்சென்று விடுகி றான். துயர்கொண்ட தலைவியின் உளம் உடைந்து அழு கிறது. அவள் தனது உணர்வை தோழிக்கு இப்படி உரைக்கிறாள்,

“உள்ளது சிதைப்போர் உளர்எனப்படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிவு எனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி என்றும்
கூற்றத்தன்ன கொலைவேல் மறவர்
ஆற்றிலிருந்து அல்கி வழங்குநர்ச் செகுத்த
படுமுடைப் பருந்து பார்த்திருக்கும்
நெடுமூது இடைய நீரில் ஆறே”

வழிவழியாக வந்த முன்ன வரின் செல்வத்தைச் செலவ ழித்து வாழ்பவர் செல்வம் உள்ளவர் எனக் கொள்ளத் தக்கவரல்லர். அத்தகையவர் வறுமையை எதிர்கொள்ள நேரிடும். வறியவராக வாழ்வது பிச்சையேற்று வாழ்வதைக் காட்டிலும் இழிவானது என முன்னோர் கூறியுள்ளனர். (இரவு- பிச்சைஏற்றல்)

இவ்வாறு தலைவன் தனக்கு உரைத்துச் சென்றதாகத் தலைவி கூறுகிறாள். இருப்பதை அனுபவித்து வாழ்வோம் என் றெண்ணுவதன் தீமை இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. “குந்தித் தின்றால் குன்றும் மாளும்” என்ற பழமொழி இங்கு தொடர்புறுத்தி நோக்கலாம்.

தலைவன் பொருளீட்டலின் முக்கியத்துவத்தைத் தெளியக் காட்டியே புறப்பட்டுள்ளான் என்பது தலைவியின் வாக்கின் ஊடாக வெளிப்படுகிறது. இருந்தும் தலைவி ஏன் துயர் கொண்டுள்ளாள்?

எமனைப் போல் திரிகின்ற வேற்படையை உடைய மறவர்கள் வழியிலே மறைந்திருந்து வழிசெல்வோரைக் கொன்று பொருள் பறிப்பர். அருகே முடைநாற்றத்தை விரும்பும் பருந்துகள் பிணங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும். இந்த பழைய நெடிய வழியி லேயே அவன் பொருள் ஈட்டச் சென்றுள்ளான். இதுவே தலைவியை வருத்துகிறது. தன் உயிரை துச்சமாக மதித்து பொருள் ஈட்டியாகவேண்டும் என்ற உணர்வோடு சென்ற தன் தலைவனை நினைந்து துயரில் மாழ்கிறாள் தலைவி.



நிம்மதியாக வாழ்வதற்கு எத்தகைய சவால்களைத் தாண்டவேண்டியுள்ளமையை இப்பாடல் விளக்குகிறது. ஒவ்வொரு குடும்பமும் சிறப்பாக அமையும்போதே குடும்பங்கள் சேர்ந்த சமூகமும் சிறப்பாக அமையும். அப்பொழுதே நாடும் வளம்பெறும். “நாளின் நாளின் உலகத்து உயர்ந்தோர் பரவ” என்ற வகையில் தினம் தினம் தம் நாட்டுத்தலைவனை மக்கள் போற்றும்படியாக அரசாட்சி செய்வதற்குத் தேசத்தின் பொருளாதாரம் உறுதியாக இருக்கவேண்டும்.

“நோயொடு பசியிகந்து ஒரீஇப்
த்தன்று பெருமநீ காத்த நாடே...” என பதிற்றுப்பத்தில் சேரமன்னனை புலவர் போற்றுகிறார். நாட்டில் நோயில்லை, பசிப்பிணியில்லை, நீ ஆளும் நாடு செல்வம் செழித்து சிறப்பாக உள்ளது என்கிறார் புலவர். குடும்பங்களின் செழிப்பென்பது தேசத்தின் செழிப்பாகிறது.

“ஈந்துவக்கும் இன்பம் பெற்று தம்மையும் சார்ந்தவரையும் காப்பதற்கும் நிறைவாக வாழ்வதற்கும் செல்வம் அவசியம் என்பது காலம் உணர்த்தும் பேருண்மையாகும். அறத்தின் வழியே செல்வத்தைப் பெற்று வாழ்வதே யாவருக்கும் நலம்பயக்கும்.



# கல்வியும் எங்கள் மூலதனம்

வேதநாயகம் தபேந்திரன்

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தென் இந்தியப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பைத் தொடர்ந்த எமது நாட்டைச் சேர்ந்தவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை எனது முகநூல் பக்கத்தில் எழுதி இருந்தேன்.

அந்தப் பதிவைச் சிலநூறு பேர் பகிர்ந்து இருந்தார்கள். பகிர்ந்தோரை அவதானித்துப் பார்த்தேன். அதில் மிகப் பெரும்பான்மையானோர் முஸ்லீம் சகோதரர்களாக இருந்தார்கள்.

இலங்கைத் தீவில் சிறுபான்மை இனங்களது கல்வி வளர்ச்சியை, நாட்டத்தை எடுத்துக் கொண்டால் இன்று முஸ்லீம் சகோதரர்களது கல்வி வளர்ச்சி ஒரு ஆர்முடுகல் ( வளர்ச்சி ) நிலையில் அதாவது உயரிய வளர்ச்சி நிலையில் போய்க் கொண்டிருப்பதாகவே கூறலாம்.

கிழக்கு மாகாணத்தில் உயரதிகாரியாக உள்ள எனது நண்பர் கூறினார். “தனது திணைக்களத்தில் இரவு நேரக் காவலாளியாகப் பணியாற்றும் முஸ்லீம் ஒருவரது மகன் உயர்தரத்தில் நல்ல பெறுபேறை எடுத்தார். அந்தக் காவலாளி சற்ஸ் கோர் ( Z Score ) முறையைக் கூறி என்னென்ன கற்கை நெறிகள், எப்படி விண்ணப்பிக்க வேண்டும், எந்தெந்தப் பல்கலைக்கழகங்களில் கிடைக்குமெனத் தண்ணீர்பட்ட பாடமாகக் கூறினார்.”

தனது மகனும் உயர்தரம் படிக்கிறார். ஆனால் உயரதிகாரியான தனக்கு சற்ஸ்கோர் தொடர்பாக இவ்வளவு தெளிவாகக் கூறத் தெரியவில்லை. ஆனால் தனது அலுவலக இரவு நேரக் காவலாளி யான முஸ்லீம் நபர் மிகத் தெளிவாகக் கூறுகிறாரெனக் கூறி வெட்கப்பட்டார்.

1970 ஆம் ஆண்டுக்கு முதல் யாழ்ப்பாண மாவட்டமே கல்வியில் மிக முதன்மை இடத்தை வகித்தது. தரப்படுத்தல் 70 ஆம் ஆண்டில் வந்த போது பல்கலைக்கழக அனுமதியில் மொழிவாரியாகத் தரப்படுத்தல் நடைமுறைக்கு வந்தது. தமிழ் மொழி மூலமாகப் பரீட்சைக்குத் தோற்றியோரது வாய்ப்புகள் பறிக்கப்பட்டது.

பின்னர் தரப்படுத்தல் மாவட்ட அடிப்படையில் சீரமைக்கப்பட்ட போது உயர் கல்வி வாய்ப்புகள் பின்தங்கிய மாவட்டங்களுக்குப் பகிரப்பட்டன.

1980 களின் முற்பகுதியில் போர் தீவிரம் பெற்ற போது வடக்குக் கிழக்கின் கல்வி நிலையில் பெரும் சரிவு ஏற்பட்டது. 1990, 1991 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சையை விசேடமாக நடத்துமளவுக்குப் போரின் அழிவுகள் இருந்தன.

இஸ்லாமிய சகோதரர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் தமது பொருளாதாரத்தை உயர்த்துவதில் முதலில் கவனம் செலுத்தினார்கள். வியாபாரத்தின் மூலமாகப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பினார்கள். பின்பாகக் கல்வியைக் கட்டி எழுப்புவதில் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். பணவளம் இருந்தால் தான் கல்வி வளம் உறுதியாக இருக்குமென்ற அவர்களது நம்பிக்கை தற்போது சரியான அறுவடைகளைத் தருவதை உணர முடிகிறது.

வடக்கில் போர் நடைபெற்ற போது கல்வி ஆர்வம் உயர்வாக இருந்தது. ஆனால் போர் முடிந்த பின்பாக கல்வி ஆர்வத்தின் அளவு வீழ்ச்சிப் போக்கைத் தான் காட்டுகிறது.

இஸ்லாமிய சகோதரர்களைப் பொறுத்தவரையில் தெரியாததைத் தெரியாது என்று சொல்வதில் ஒரு நாளும் வெட்கப்பட மாட்டார்கள். அதனால் முன்னேறுகின்றனர். தென் பகுதிப் பல்க லைக்கழகங்களில் பட்டப்படிப்புகளுக்கு வரும் இஸ்லாமிய மாணவர்கள் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் ஆர்வம் கொண்டு கதைக்க எழுத வாசிக்கப் பழகுவார்கள். தமக்குப் பரீட்சயமில்லாத அந்த மொழிகளைப் பிழை வருமெனத் தயங்காமல் கதைக்கத் தொடங்குவார்கள்.

> **“தனது மகனும் உயர்தரம் படிக்கிறார். ஆனால் உயரதிகாரியான தனக்கு சற்ஸ்கோர் தொடர்பாக இவ்வளவு தெளிவாகக் கூறத் தெரியவில்லை. ஆனால் தனது அலுவலக இரவு நேரக் காவலாளியான முஸ்லீம் நபர் மிகத் தெளிவாகக் கூறுகிறாரெனக் கூறி வெட்கப்பட்டார்.”**

தாம் கதைக்கும் போது வரும் ஒவ்வொரு பிழை களையும் கண்டுபிடித்துத் திருத்தித் திருத்தி மிக விரைவில் மிக நன்றாகக் கதைக்கப் பழகி விடுவார்கள்.

அவர்களது சக இஸ்லாமிய மாணவர்கள் ஒரு போதுமே அவர்களது உரையாடலில் வரும் பிழைகளைக் கேலி செய்து ஆர்வத்தைக் குறைய விட மாட்டார்கள். மாறாகச் சொல்லிக் கொடுத்து மொழி வளத்தை, திறமையை உயர்த்திக் கொள்வார்கள்.

தமிழ் மாணவர்களில் பெரும்பான்மையோரைப் பொறுத்த வரையில் சக தமிழ் மாணவர் பகிடி பண்ணுவார்களே என்ற தயக்கத்தால் கூச்ச சுபாவம் உள்ளவர்களாக இருப்பார்கள். பிறமொழி பழக விரும்பும் சக தமிழர்களது சின்னச் சின்னப் பிழைகளை யும் எள்ளல்,ஏளனங்கள் செய்து சில வேளையில் கைகொட்டிச் சிரித்து வளர விடாமல் தடுத்து விடுவார்கள்.

போர் நடைபெற்ற காலங்களில் வடக்குக் கிழக்கு மலையகத் தமிழர்களைக் கொழும்பிலுள்ள அரசாங்கத் திணைக்களங்கள் சந்தேகக் கண் கொண்டு பார்த்தன.

அரச துறை மட்டுமல்ல தனியார் துறை யினரும் இதே நிலைப்பாடு தான் பரவலாக இருந்தது. அதே வேளை தமிழ் மொழியில் கருமம் ஆற்ற வேண்டும். இதற்காக முஸ்லீம்களைப் பணிக்குச் சேர்த்துக் கொண்டார்கள். முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சர்களாக இருந்தமையும் அதிக வேலை வாய்ப்புகள் கிடைக்கக் காரணமாகியது.

உத்தியோகம் பார்க்கும் முஸ்லீம் பெற்றோர் தமது பிள்ளைகளையும் உயர்கல்வி நிலையில் உயர வைத்தார்கள். கல்வி வளர்ச்சிக்காகப் பல அமைப்புகளை உருவாக்கினார்கள். கிழக்கின் அம்பாறைப் பிரதேசத்தில் பரவலாக இதனை அவதானிக்கலாம். இதனால் அவர்களது கல்வியின் அடைவு மட்டம் மேலும் அதிகரித்தது.

வடக்கைப் பொறுத்தவரையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் “பிச்சை எடுத்தும் பிள்ளைகளைப் படிப்பித்து ஆளாக்குவோம்” என்ற ஒரு பெரும்தொகைப் பெற்றோர்கள் பரம்பரை பரம்பரையாக இருந்தார்கள். தற்போதும் இருக்கிறார்கள். வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி பிள்ளைகளை வளர்த்துக் கல்வியில் ஆளாக்கினார்கள்.

முதலில் பொருளாதாரத்தை உயர்த்துவோம். பின்னர் கல்வியை உயர்த்துவோம் என்ற சிந்தனை இவர்களிடம் இல்லை. கல்வியின் மூலமே பொருளாதாரத்தை உயர்த்தலாம். வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம் என்ற நம்பிக்கை கொண்டனர். அதனைச் செயலிலும் சாதித்துக் காட்டினார்கள்.

காசு இல்லாததால் எங்களால் படிக்க முடியவில்லை என ஒரு காலம் சொன்னார்கள். காசு கூடிப் பிள்ளைகள் பொழுது போக்கு அம்சங்களில் நேரத்தைச் செலவிட்டுப் படிக்கின்றார்கள் இல்லை என ஒரு சாரார் இன்று சொல்கிறார்கள்.

புலம்பெயர் தேசப் பயணக் கனவுடன் கல்வியைப் பாழாக்கும் குறித்த சில வீதத்தினர் வடக்கில் உள்ளனர். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகுவதற்காக 3 முறை உயர்தரப் பரீட்சை எழுதிய ஆர்வம் குறைந்து போய் விட்டது. வெளிவாரியான தெரிவுகள் பல உள்ளமை ஒரு காரணம்.

முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரையில் வசதி படைத்த முதலாளிகள் தமது சமூகம் முன்னேற வேண்டுமென்பதற்காக திறமை வாய்ந்த ஆசிரியர்களுக்கு அதிக பணம் கொடுத்து வரவழைக்கின்றனர். கல்வியை வழங்குகின்றனர். வாகனத்தில் மாணவர்களை அனுப்பிக் கூடக் கல்வியை வழங்குகின்றனர்.

தொழில்துறைக் கல்வியை வளர்த்தெடுத்து மாற்றுத் தெரிவுகளை உருவாக்கும் வரையில் ஏட்டுக் கல்வி தான் முதன்மைப் பாத்திரத்தை வகிக்கப் போகிறது.அதற்கேற்ற தயார்படுத்தல்களைத் திறமை யான முறையில் செய்வது காலத்தின் தேவை தான். ■



# தொடரும் அநீதி
## நீதி மறுப்பும் கோரலும்

கருணாகரன்

இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களிலேயே (வடக்கிலேயே) புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வாகம் தொடக்கம் வளப்பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இந்த அநீதி தொடர்கிறது. இந்த மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையிலும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் திறக்க முற்படுகிறது.

- ஆசிரியர்

“துயரத்தின் வழி என்பது அநீதியின் பாதையே. அநீதியின் முகமோ இருண்டது, முட்கள் நிறைந்தது, மேடும் பள்ளமுமானது, நீரற்றது. நீரில்லா வழியில் நடந்தோம். நீங்கள் பார்த்துக் கொண்டேயிருந்தீர்கள்.”

*(08)*

கடந்து வந்த வாழ்க்கையைப் பேசுவது வேறு. அதிலுள்ள துயரத்தைப் பேசுவது வேறு. பலருக்கும் கடந்து வந்த வாழ்க்கையை நினைவு கூர்வது என்பது ஏதோ ஒரு வகையில் அவர்களுக்கு மகிழ்ச்சியையோ மன நிறைவையோ தரக் கூடும். இத்தனையையும் கடந்து வந்திருக்கிறோமே என்ற ஆச்சரியமான இனிமையை அது அளிக்கும். ஆனால், துயரத்தையே காவிக் கொண்டு நடந்தவர்களுக்கு இது சற்று வேறு விதமான உளநிலையை உருவாக்குவது. மறுபடியும் அந்த வேதனைப் பரப்பில் கொண்டு சென்று சேர்த்து விடக் கூடியது. காயங்களைப் புதுப்பிப்பதைப்போல. ஆனாலும் வரலாற்றுக்கு எப்போதும் உண்மைகளே தேவை. அது கண்டிப்பான கிழவியல்லவா! அந்தக் கண்டிப்பு சில வேளைகளில் இரக்கமற்ற விதமாக உண்மைகளை அடியாழத்திலிருந்து தோண்டி எடுத்து விடுகிறது. இதில் மீள்வலி நிகழ்வது என்பது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் சுகப்படுத்துவதற்கான ஒரு வழியே. எப்படியென்றால், முள் தைக்கும்போது ஒரு வலி. அதை எடுக்கும்போது இன்னொரு வலி. இந்த இரண்டாவது வலியைத் தாங்கிக் கொண்டாலே முள்ளை எடுத்துக் காலைப் பாதுகாக்க முடியும். வலியைப் போக்கிக் கொள்ளவும் முடியும். அந்த மாதிரியே இதுவும்.

ஆகவே உண்மைகளைப் பேசாதவரையில், ஆழ்மனதில் புதையுண்டிருக்கும் துயரத்தை எடுத்து வெளியே போடாத வரையில் பாரச்சிலுவை நம்மை அழுத்திக் கொண்டேயிருக்கும். என்பதால்தான் இதையெல்லாம் பேச வேண்டியுள்ளது. இதில் மாற்றுப் பார்வைகள் நிறைய இருக்கலாம். அது இயல்பே. ஆனால் எல்லாவற்றுக்கும் அப்பால் இவையெல்லாம் உண்மை என்பதில் ஒரே கருத்தே இருக்க முடியும். ஏனென்றால் இது உண்மையின் ஆதாரமல்லவா.

இந்த உண்மைக்கு மேலும் ஒரு சாட்சியாக இருக்கும் கனகராயன்குளத்தைச் சேர்ந்த முத்தையா நல்லு (77) மேலும் சொல்கிறார், “நமக்கு அப்ப வாக்குரிமையெல்லாம் கெடயாது. அதனால நம்மள யாரும் கண்டுக்கல்ல. அவங்களுக்கு எதுக்குத்தான் நாங்க வேணும்? வேணும்னா கூலிக்கு ஆளிருந்தாப் போதும். அதுக்கு மேல என்ன வேண்டிக் கெடக்கு? அதனாலே நாங்கதான் நம்மை காவிக் கொண்டு போக வேண்டியிருந்திச்சு. எவ்வளவு பெரிய கஸ்டம் அது தெரியுமா? காட்ட வெட்டினாக் கூட அதுக்க தண்ணியக் காண்றதுக்குப் பெரியபாடப்பா. தண்ணியுள்ள பக்கமெல்லாத்தையும் மத்தவங்க எடுத்துக் கிட்டாங்க. நமக்கு தண்ணியில்லாக் காடுதான் மிச்சம். அதுக்கதான் திரவியத்தைத் தேடிக்கணும். ஆனால், நம்மட சில ஆட்களுக்கு தண்ணிப் பக்கமா காணி வாய்ச்சது. வவுனியாப் பக்கமா அது கெடச்சிரிச்சி. ஆனா ரொம்ப எல்லாம் இல்லை. மத்தப்படி எல்லாருக்கும் இந்த வரண்ட காடுதான். எங்கட ரத்தத்தை ஊத்தித்தான் இதையெல்லாம் இப்பிடி ஆக்கியிருக்கிறம்” என்று தன்னுடைய வளவையும் தோட்டத்தையும் காண்பித்தார் அவர்.

இன்று நல்லுவின் வளவும் தோட்டமும் மிக அழகாகவும் வளமாகவும் இருக்கிறது. அக்கம் பக்கத்தில் உள்ள காணிகளும் செழித்துக் கிடக்கின்றன. ஆனால் இடையிடையே சில காணிகள் தரிசு பத்திப்போயுள்ளன. விசாரித்தால், அவற்றில் உள்ளவர்கள் வேறு இடங்களை நோக்கிப் போய் விட்டனர் என்று சொல்கின்றனர் அயலவர்கள். இதற்கு முக்கிய காரணம், நடந்த போராகும். போரிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இவர்கள் வெளியேறிப்போய் வவுனியா நகர்ப்பகுதியில் வாழ்கின்றனர்.



> **ஆகவே உண்மைகளைப் பேசாதவரையில், ஆழ்மனதில் புதையுண்டிருக்கும் துயரத்தை எடுத்து வெளியே போடாத வரையில் பாரச்சிலுவை நம்மை அழுத்திக் கொண்டேயிருக்கும். என்பதால்தான் இதையெல்லாம் பேச வேண்டியுள்ளது. இதில் மாற்றுப் பார்வைகள் நிறைய இருக்கலாம். அது இயல்பே. ஆனால் எல்லாவற்றுக்கும் அப்பால் இவையெல்லாம் உண்மை என்பதில் ஒரே கருத்தே இருக்க முடியும்.**

மிகக் கஸ்டப்பட்டு வெட்டித் துப்புரவாக்கி, யானைக் காவல், பாம்புக்கடி போன்ற நெருக்கடிகளுக்குள்ளால் எல்லாம் தாக்குப் பிடித்திருந்தவர்களைப் போர் விரட்டிக் கலைத்தது. இந்த மக்களின் வாழ்க்கை இப்படித்தான் தொடர்ந்தும் இருந்திருக்கிறது. வேர்கொள்ள முடியாத தொடர் நெருக்கடிகளாக.

ஒரு நெருக்கடியிலிருந்து மீள இன்னொரு நெருக்கடி என. பாருங்கள். முதலில் வன்முறையினால் தென்பகுதியிலிருந்து வெளியேற்றம். பிறகு இங்கே (வடக்கே) வந்தும் நிலையாக, நிம்மதியாக ஒரு இடத்தில் இருக்க முடியாது என்ற நிலை. இப்படி பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அங்குமிங்குமாக அலைய வேண்டியிருந்தது. இதனால் இவர்களுடைய பிள்ளைகளின் கல்வியில் பெரும் பாதிப்பேற்பட்டது. தொழில்களை நிரந்தரமாகத் தக்க வைப்பதற்கும் சிரமமாக இருந்தது. இருக்குமிடத்தை - நிலத்தைப் பெற்றுக் கொள்வதிலும் இந்த நிலைமை பிரச்சினைகளைக் கொடுத்தது. மிகக் கஸ்ரப்பட்டு வெட்டித் துப்புரவு செய்த காணிகளை விட்டுப் போவதென்பது, அதுவரையான உழைப்பை எந்தப் பெறுமதியுமில்லாமல் இழந்து போவதாகும். ஆனால் வேறு வழியிருக்கவில்லை.



இந்தச் சிரமத்தையும் இழப்பையும் அதிகமாகச் சந்தித்தவர்கள் வவுனியா மாவட்டத்தில் குடியேறியோரே. முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் குடியேறியோர் அநேகமாக உள்ளூருக்குள்ளேயே இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். அது ஏனையோரைப்போல எல்லோருக்கும் பொதுவானதாக இருந்ததால் இழப்புகளும் பொதுநிலைப்பட்டன வாகவே இருந்தன. ஆனால், இங்கிருந்தெல்லாம் வெளியேறி இன்னொரு தொகுதியினர் இந்தியாவுக்குப் படகுகளின் மூலம் சென்றனர். அப்படிச் சென்றவர்கள் அங்கே அகதிகள் முகாம்களில் அடைபட்டனர். இது இன்னொரு பெரிய துயரக் கதை.

எப்படியோ இவர்களெல்லாம் ஊரை விட்டுப் போனோராகவே கருதப்பட்டனர். இதனால் இவர்களுடைய காணிகளை அக்கம் பக்கத்திலிருந்தவர்களும் வேறு இடங்களில் இருந்தவர்களும் குறைந்த விலையில் எடுத்துக் கொண்டனர். சில காணிகள் மட்டுமே உறவுகளாலும் ஊரவர்களாலும் காப்பாற்றப்பட்டன. ஆகவே இழப்புகளின் மத்தியிலேயே ஒரு சாராரின் வாழ்க்கை நீண்டது.

இழப்புகளைச் சந்தித்து அதிலிருந்து மீண்டு வாழ்வது வேறு. அதையே வாழ்க்கை முழுவதும் கண்டு கொண்டு வாழ்வது வேறு. வாழ்க்கை முழுவதும் இழப்புகளோடு வாழ்ந்த வாழ்க்கையைச் சொல்லுகின்றார் இராஜரத்தினம் (87).

“நா திகணவுக்கும் பல்லேகலவுக்கும் இடையில இருக்கிற கெந்தெல்லல இருந்து வந்தன். நா மட்டும் தனியாவ வந்துக்கல்ல. இருவத்தஞ்சு குடும்பமா சேர்ந்து வந்தம். அங்கன இருந்து வரும்போது ஏகப்பட்ட பிரச்சினைகள். வெளிக்கிடும்போதே பல பிரச்சினைகள். அங்க கண்டில இருந்த அகதி முகாமில இருந்து ஆட்களை தனித்தனியாப் பேசித்தான் எல்லோருமே கெளம்பினோம். அதுக்கே ஏகப்பட்ட தொல்லைகள். பயம் வேற. அந்த நேரத்தில யார் கிட்டயும் எதையும் நம்பிப் பேசிட முடியாது. எவன் காதில எந்தப் பேய் குடியிருக்குமோ, யாரு கண்டா. அப்பிடி அங்க இருந்து தப்பி இங்க வந்தா, இது என்னடா சட்டீல இருந்து நெருப்புக்குள்ள விழுந்திட்டமா அப்பிடீங்கிற மாதிரி ஒண்ணுமே தெரியாத இடத்தில கொண்டாந்து எறக்கிட்டாங்க. கண்ணைக் கட்டி விட்ட மாதிரி ஒரே இருட்டு. ஒரே கொழப்பம். என்ன பண்றது எண்ணு ஒண்ணுமே புரியேல்ல. எதுக்கு இப்படி அவசரப்பட்டுக் கிட்டோம்? அப்படீங்கிற மாதிரித் தோணிச்சு. பேசாம வாரது வரட்டுமுன்னு அங்கனயே கெடந்திருக்கலாம். இதுக்குள்ள அவனவன் நம்ம தலையெப் பிச்சுக்கிற அளவுக்கு திட்டிறான். எதுக்கப்பா எல்லாத்தையும் இங்க இழுத்துக் கிட்டு வந்த? இங்க என்ன மசிரு கெடக் கெண்டு வந்த? பேசாம அங்கனயே கெடந்திருக்கலாம் எண்ணு பொம்பளங்களே திட்டத் தொடங்கீட்டாங்க. அவங்களக் கோவிச்சுக்க முடியுமா? அவங்க நெலமையில அவங்க அப்பிடித்தான் இருப்பாய்ங்க. வயித்துப் பிள்ளையோட நிக்கிறவங்க, கையில ஏந்திக் கிட்டு நிக்கிறவங்க.. இப்பிடி எத்தனை கோலம்.

எல்லாத்துக்கயும் சமாளிச்சுக்கிறதுக்கு ரொம்பத் தான் ஆயிட்டுது. வேற வழியென்ன? இனி அங்க திரும்பிப் போயிட முடியுமா என்ன? அது தாயோட வயித்துக்க மறுபடி போற மாதிரில்லா. நம்மளப்போல வந்தவங்க ஆயிரமாயிரம்பேர். அவங்கள எல்லாம் அங்கங்க எண்டு ஒவ்வொரு மாவட்டங்களாகப் பிரிச்சு வெச்சு அனுப்பினாங்க. நமக்கு இங்க (கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஜெயபுரம் என்ற இடத்துக்கு) வரக் கெடச்சிச்சி. இந்தப் பக்கம் அப்ப பெரிய யானைக் காடு. இந்தக் காட்டுக்கு வரவே முடியாது. வழியில அக்கராயன், வன்னேரி அந்தப்பக்கத்திலேயே யானை நிக்கும். மாலையாகீட்டா ஒரு ஆள் தலை காட்ட முடியாது. கொம்பன்தான் றோட்ல ஏறி நிக்கும். கொம்பன் நிண்டா நாம ஊருக்க படுத்துக்க வேண்டியதுதான்.”

(தொடரும்)

அவதானி



# ஊருக்கு ஊர் மீட்பர்கள் தேவை

கடந்த இருபது மாதங்களுக்கும் மேலாக முழு உலகையும் அச்சுறுத்தி, இலட்சக்கணக்கானோரைப் பலியெடுத்து வந்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத எதிரியான கொரோனா, தற்போது தனது குடும்பத்திலிருந்து டெல்டா என்ற மற்றும் ஒரு திரிபடைந்த வைரசுடன் கோரத்தாண்டவமாடிக் கொண்டிருக்கி றது.

இனிவருங் காலங்களில் இந்த வைரஸ்களுடன் போராடும் வாழ்வுக்கு எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையையே அவை எமக்கு உணர்த்தியுள்ளன.

அணுவாயுதங்களுக்காகவும் எறிகணைகளுக்காகவும் கொடிய உயிர்கொல்லிகளான ஆயுதங்களுக்காகவும் பல வல்லரசுகள் தமது வருடாந்த பாதுகாப்புச் செலவீனங்களுக்குப் பெருந்தொகையான நிதியை ஒதுக்கி வந்தன.

அந்த வல்லரசுகளிலிருந்த ஆயுதத்தரகர்கள், அடுத்த வேளைக்குக் கையேந்தும் ஏழை நாடுகள் உட்பட மூன்றாம் உலக நாடுகளுக்கும் ஆயுதங்களை விநியோகித்து வந்தனர்.

அதனால், உள்நாட்டுக் கலவரங்கள் வீச்சுடன் வளர்ந்து அகதிகளின் எண்ணிக்கையைத்தான் பெருக்கினவேயன்றி, வேறு எந்த உருப்படியான சேவையையும் மக்களுக்கு வழங்கவில்லை.

இன்று ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியிருக்கும் அமெரிக்கப்படைகளுக்காக, அமெரிக்கா அங்கு செலவிட்டுள்ள மில்லியன் கணக்கான டொலர்கள் பற்றி ஊடகங்கள் பேசுகின்றன.

கடந்த ஒன்றரை வருடத்திற்கும் மேலாக இந்தக் கொரோனாத் தொற்றினால் அதிகளவான மரணங்கள் நேர்ந்திருப்பதும் அமெரிக்காவில்தான் என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

வறிய நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் முன்னர் ஆயுதங்களை விநியோகித்து வந்த வல்லரசுகள் தற்போது வெவ்வேறு பெயர்களில், மக்களை மீட்பதற்காக தடுப்பூசி மருந்துகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றன.

அங்கும் பூகோள அரசியல்தான் துலாம்பரமாகியுள்ளது.

இலங்கையில் கடந்த ஆண்டின் முற்பகுதியில் கட்டுப்பாடு வெற்றிகரமாக நிலவிய சூழலில், மீண்டும் திரிபடைந்த வைரஸின் தாக்கம் வரும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால், அபாயம் வந்தேவிட்டது. இந்தப்பதிவு எழுதும்போது இதுவரையில் இலங்கையில் இந்தத் தொற்றினால் 7 ஆயிரத்து 560 பேர் பலியாகியுள்ளனர் எனவும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை நான்கு இலட்சத்திற்கும் அதிகம் எனவும் அறியப்படுகிறது.

இலங்கையின் மக்கள் தொகையிலிருந்து பார்க்கும் போது எங்கள் தேசம் அபாய வலயத்திற்குள் சிக்குண்டிருப்பதையே இது உணர்த்துகிறது.

இந்தப் பேரவலத்திலிருந்து எவ்வாறு மீளமுடியும் என்று அரசு தொடக்கம், எதிரணி வரையில் மட்டுமன்றி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் சமூக நலன்பேணும் அமைப்புகளும் அரசியல் கட்சிகளுக்கும் பாதுகாப்புத்துறை மற்றும் சுகாதார நலத்துறை - அரச அதிபர்கள், ஆளுநர்கள் மட்டத்திலான அதிகாரிகளும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

சமூக இடைவெளி பேணுமாறு கேட்கப்பட்டாலும், மக்கள் அதனைக்கேட்டு நடப்பதாகத் தெரியவில்லை. இரவில் ஊரடங்கு அமுலுக்கு வந்தால், பேய்கள் நடமாடும் அகால வேளையில் எதற்கு ஊரடங்கு என்று கேட்கும் அதிமேதாவிகளைத்தான் நாம் பார்க்கின்றோம்.

தலைநகரத்தில் நடு இரவும் கடந்த நிலையில் இயங்கிவரும் உல்லாச விடுதிகள் பற்றியோ, போதைவஸ்து கடத்தல் உட்பட பல சமூக விரோதச்செயல்களுக்கு இந்த நடு இரவுவேளை சாதகமாக இருப்பது பற்றியோ, அவர்களுக்கு எள்ளளவும் கவலை இல்லை.

பல தரப்பினரதும் கடும் அழுத்தத்தையடுத்து இலங்கை அரசு நாட்டையும் முடக்கி, ஊரடங்கு உத்தரவையும் அமுல்படுத்தியிருக்கிறது. இதனை வெள்ளம் வருமுன்பே அணைகட்டும் செயலாக நடைமுறைப்படுத்தியிருக்கலாம்.

அன்றாடத் தொழில் செய்து குடும்பங்களைக் காப்பாற்றுபவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படும் எனச்சொன்ன அரசு, தற்போது நாட்டை முடக்கியிருக்கும் வேளையில், அதனால் நாளொன்றுக்கு ஆயிரத்து ஐநூறு கோடி ரூபா நட்டம் என்று சொல்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால்.

கொவிட் தொற்றின் காரணமாக நாட்டை முடக்கியதனால் மாத்திரமே பொருளாதார நெருக்கடி வந்துள்ளது என்பதை ஏற்கமுடியாது என்றும் அரசிடம் இந்த விடயத்தில் முறையான தீர்க்கதரிசனக் கண்ணோட்டத்துடன் கூடிய வேலைத்திட்டம் இல்லாமல்போனதே பிரதான காரணம் என்றும் எதிரணியைச் சேர்ந்த திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கிறார்.

நாட்டை முடக்குவது தொடர்பாகக் கடந்த காலங்களில் ஆளும் தரப்பு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாதுகாப்புத்துறையினர், மற்றும் நோயாளர்களுக்காக அல்லும் பகலும் தமது உயிரையும் மதிக்காமல் போராடிவரும் அரச மருத்துவர்கள் - தாதியர்களும் ஆளுக்கொரு கருத்துக்களை வெளியிட்டு வந்தனர்.

இந்தப் பின்னணிகளுடன் வெளிநாடுகளிலிருந்து அடுத்தடுத்துத் தடுப்பூசிகள் விதம் விதமான பெயர்களில் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் வடபிரதேசத்திற்குத் தடுப்பூசிகளை வழங்கும் நிகழ்வை ஒரு திருவிழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தார், பிரதமரின் புத்திரன் நாமல் ராஜபக்‌ஷ.

இப்போது 12 வயது பிள்ளைகளுக்கும் தடுப்பூசி செலுத்தவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது.

வறுமைக்கோட்டின் கீழே வாழும் மக்களின் நிலை பற்றி, அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், மற்றும் கிராமசேவையாளர்கள் நன்கு அறிந்தவர்கள். அத்துடன் சமுர்த்திப் பயனாளர்கள் யார் யார் என்பதும் அவர்கள் அறியாததல்ல.

அன்றாடங்காய்ச்சிகளின் குடும்பங்களுக்கு ஒரு மாத காலத்திற்குத் தேவையானதை இவர்கள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து விட்டு, நாட்டை சில வாரங்களுக்கு அரசு முடக்கியிருக்கலாம்.

நிலைமை கட்டு மீறியபின்னர், தேசத்தின் பொருளாதாரத்தை மீட்க வந்தவர்கள் போன்று ஆளும் தரப்பு - எதிர்த் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மாதச்சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளார்கள்.

இவர்கள், தத்தமது தொகுதிகளுக்கு இறுதியாக எப்போது சென்றார்கள்..? அங்கே தமக்கு வாக்களித்த மக்களின் தற்போதைய ( அதாவது கடந்த 2020 ஜனவரி முதல் 2021 ஓகஸ்ட் வரையில் ) நிலை எப்படி இருக்கிறது? என்று ஆராய்ந்தார்களா..?

அடிக்கடி நாடாளுமன்றம் சென்று கையொப்பம் இட்டு , வரவேட்டில் பதிவு செய்து அதற்கான வேதனம் பெற்றுக்கொண்ட இவர்கள் தேர்தலுக்குப் பின்னர் எத்தனை தடவை தத்தம் தொகுதிகளுக்குச் சென்றார்கள்.

> **“தலைநகரத்தில் நடு இரவும் கடந்த நிலையில் இயங்கிவரும் உல்லாச விடுதிகள் பற்றியோ, போதைவஸ்து கடத்தல் உட்பட பல சமூக விரோதச் செயல்களுக்கு இந்த நடு இரவு வேளை சாதகமாக இருப்பது பற்றியோ, அவர்களுக்கு எள்ளளவும் கவலை இல்லை.”**

இவர்கள் ஒவ்வொருவருக்கும் வருடாந்தம் வரவு - செலவு நிதியறிக்கை நாடாளுமன்றத்திற்கு வரும் போது கிடைக்கப்பெறும் தொகுதி அபிவிருத்திக்கான நிதித் தொகை எவ்வளவு..? இதுபற்றி அவர்களுக்கு வாக்களித்த மக்களும் கேட்பதில்லை.!

இன்று அபாயம் சூழ்ந்துள்ள வேளையில் மக்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்வதைத்தவிர வேறு மார்க்கம் இல்லை.


ஆலயங்களில் திருவிழா நடத்த முடியவில்லையே திருமண, பிறந்த தின ஒன்றுகூடல்களை கொண்டாட முடியவில்லையே என்று கலங்காதிரு மனமே என்று தான் மக்களைப் பார்த்துச் சொல்லத் தோன்றுகிறது.

இறைவன் கோபிக்கமாட்டார். சொந்த பந்தங்கள் உங்களை வெறுக்கப்போவதில்லை. இறைவன் உட்பட அனைவருக்கும் நிலைமை தெரியும்.

மக்கள்தான் ஒருவருக்கு ஒருவர் உதவும் மனப்பான்மையை வளர்த்துக்கொண்டு ஒருவரை ஒருவர் மீட்கும் மீட்பர்களாக மாறவேண்டும்.

இன்று இலங்கையில் ஊருக்கு ஊர் தன்னலம் கருதாத மீட்பர்கள்தான் தேவை. அந்த மீட்பர்கள் மக்களிடம் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

■



# கொரோனாவும் சித்த மருத்துவ உளச் சுக வாழ்வும்

**டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்**
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc

சித்த மருத்துவம் பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் அமையக் கூடிய புராதன விஞ்ஞானமாகவும் (Ancient science), சித்தர்களின் புராதன அறிவியல் ஞானமாகவும் (Ancient Scientific Wisdom) அமைவதால், இன்று கொரோனா நோய்க்கு உலக அரங்கில் விஞ்ஞானிகளும் ஆய்வறிஞர்களும் மூலிகை மருத்துவத் தீர்வுகளை நோக்கி தமது ஆய்வுப் பயணங்களை முனைப்புடன் நகர்த்திச் செல்வதைக் காணலாம்.

பாரம்பரிய சுகவாழ்வு முறைகளையும் (Traditional models of well being), புராதன புலமைத்துவத்தையும் (Ancient expertise),பாரம்பரிய அறிவையும் (Traditional Knowledge), பாரம்பரிய மருத்துவத்தையும் (Traditional Medicine), பாரம்பரிய வாழ்வியலையும் (Old ways of living), புதிய சிந்தனைகளுடன் (Innovative ideas), பகுப்பாய்வுத் திறன்கள் (Analytical Skills), புத்தாக்க சிந்தனைகளுடன் இணைந்த நலன் ஆய்தல் சிந்தனைகளுடன் (Creative thinking and critical thinking), சித்த மருத்துவ செவ்வியல் அல்லது தொல்சீர் நூல்களிலுள்ள (Classical texts) உளச் சுகவாழ்வுக் கருத்துகளை ஆராய்வது நெருக்கடியான இக்கால கட்டத்தில் அவசியமான அவசரமானதேவையாக அமைந்துள்ளதுடன் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதும், மக்களின் மனங்களுக்கு தைரியம், உற்சாகம் ஊட்டுவதும் சித்த மருத்துவர்களின் அவசரமான, அவசியமான பணியாக அமைந்துள்ளது.

சித்த மருத்துவ உளச் சிகிச்சை முறையில் சாத்வீகக் குணம், இரஜோ குணம், தமோ குணம் என்பவற்றைக் குறிப்பிட்டு, உணவுக்கும் மன சுக வாழ்வுக்கும் தொடர்பு இருப்பதை வெளிப்படுத்துகின்றது. அதிக காரமான உணவுகளைச் சாப்பிடும் போது கோபம் அதிகரிப்பதையும் தயிர்ச்சாதம் உட்கொள்ளும் போது சோர்வுத் தன்மை காணப்படுவதும் உணவுக்கும் மனதிற்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றது. கீரை, பச்சிலை மூலிகைகள், பழங்கள், மரக்கறிகள், பால், தேன் என்பன சாத்வீக உணவுகளாக அமைவதுடன் அவை சாத்வீகக் குணத்தை அதிகரித்துக் கொரோனாக் காலத்தில் ஏற்படும் பயம் (Fear psychosis of COVID - 19) பதற்றம், பதகளிப்பு (Anxiety) நிலையில் மன அமைதியை ஏற்படுத்துவதுடன் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்.

கொரோனா எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கு இரஜோ குணத்தை அதிகரிக்கும் உணவுகளான சுக்கு, உள்ளி, வெங்காயம் போன்ற நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் உணவுகளையும் சிறிதளவு உட்கொள்ள வேண்டும். மேலும் தானியங்கள், சிறு தானியங்களையும் உட்கொள்வதுடன் பயறு, கடலை, பருப்பு, போன்றவையும் உட்கொள்ளலாம். புளி எண்ணெய், பருத்தி இலைச் சாற்றெண்ணை, நெல்லிக்காய் எண்ணெய், பிரமி அல்லது வல்லாரை நெய், அமுக்கரா சூரணம், மல்லிச்சூரணம் போன்ற உளச் சீராக்கும் மருந்துகளை சித்த மருத்துவ உள நிபுணர்களின் ஆலோசனைப்படி கொடுக்க வேண்டும். சித்தர்களின் மனம் எனும் ஆய்வு கூடத்தில் (Mental labs of minds of sages or seers) முகிழ்த்தெழுந்த உளச் சுகவாழ்வு சிந்தனைகள், மூலிகை மருத்துவம், யோக உளச்சிகிச்சையுடன் (Integrated therapy based on Yoga and herbal medicine), யோகவுடன் இணைந்த வாழ்வியல் முறைகளையும் (Yoga based lifestyle) உள ரீதியான தரமான வாழ்வையும் (Psychological quality of life), உளத் தடுப்பு முறைகளையும், உளச் சிகிச்சை முறைகளையும் (Prophylactic and therapeutic), முழுமையான உடல், மனம், ஆத்மிக, சமூக இணைந்த (Holistic principles of body, mind, Soul and social) அதி உன்னத ஆழமான அறிவியலாக (Extremely deep science) காணப்படுகின்றது.

சித்த மருத்துவ உளச் சிகிச்சை மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் அறிவியல் துறை (Siddha Psycho neuro immunology) அறிவு மூலம் ஆழ்ந்த தியாகத்தில் இருந்து மனக் கண்ணில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் வெண்குழியங்கள் நுண்ணுயிர்களுடன் போரிடும் காட்சியை மனப்படமாக (Visualisation) செய்யும் மனவளப் பயிற்சிகள் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யலாம். ஆத்மிகப் பயிற்சிகளுடன் (Spiritual practices) தியானம் (Meditation), மன அலைகளைச் சீர்படுத்தும் மந்திர ஒலிகள் (Chanting of Rhythmic sacred words) மூலம் வாழ்வியல் மாற்றங்களை (life style modification) ஏற்படுத்தி உளச் சுகவாழ்வை மேம்படுத்தலாம்.

பிரணாயாமம், தியானம், சூரிய நமஸ்காரம், உடல் தளர்த்தும் பயிற்சிகள், நாடிச் சோதனம், கபாலத்தி கிரிகை, அர்த்தஹலாசனம், பவன் முத்தாசனம், அர்த உஸ்ராசன, சவாசன (Relaxation technique), யோக நித்திரை (Yogic sleep) இவை செய்யப்படும் போது உளச் சுகவாழ்வுடன் கூடிய நோய் எதிர்ப்புத்திறனும் கிடைக்கும். இப்பயிற்சிகள் தகுந்த சித்த மருத்துவ நிபுணர்களின் வழிகாட்டலின் கீழ் நோய்நிலைக்கு ஏற்றவாறு செய்யப்பட வேண்டும்.

மூச்சுப் பயிற்சி பல்வேறு உடல் நிலைகளில் வைத்துச் செய்யப்பட வேண்டும். மூச்சுப்பயிற்சியில் பிராண (The vital life force),மன அழுத்தம், பய பதகளிப்பு (Stress and anxiety) சீர்படுத்தும் உளப் பயிற்சிகளாகும். சித்த மருத்துவ யோக உளச் சிகிச்சை முறைகள். மன அமைதியையும் (Mental peace and calmness), பண்புசார் ஆத்மிகப் பலத்தையும் (Moral and Spiritual Strength), உளத் தெளிவையும் (Clarity) மன சுக வளத்தையும் (Mental Health), உணர்வுசார் (Emotional), உளம்சார் (Psychological), உடல் சார் (Physical), ஆத்மிகம் சார் (Spiritual), அதீதமான குணமாக்கும் சக்தியையும் (Tremendous healing power), உளரீதியான தன்னம்பிக்கையை (self confidence) வழங்கி உள ரீதியான நேர்முகச் சிந்தனையை (Positive Thinking) கொடுத்து, எமது உளச் சக்தியை ஆத்மிக ரீதியான



இறைசக்தியுடன் (Divine forces) இணைக்கச் செய்து உள ரீதியான பேராற்றலுடன் கொரோனா இடர் காலத்தில் உளநோய் ஏற்படாமல் தடுப்பதுடன் (Preventive), கொரோனாக் கால உளப்பிரச்சினைகளை குணப்படுத்தும் (Curative) உளச் சிகிச்சை முறையை சித்த மருத்துவ உள நிபுணத்துவ சிறப்புச் சிகிச்சை முறையாக முனைப்புடன் செயற்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

(வளரும்.....)

**மூலிகை சுக வாழ்வு நிறுவனம்**
**கிளவ் வீதி, தெல்லிப்பளை.**

# குண்டு துளைக்காத சங்கிலிக் கவசம்!



ஹாலிவுட்டின் பேட்மேன் பிகின்ஸ் படத்தில், பேட்மேன் அணிந்து வரும் உடை தொள தொளவென இருக்கும். அவர் மாடியிலிருந்து குதிக்கையில், அதே துணி திடீரென விரிந்து, விறைப்பாகி இறக்கை போல மாறிவிடும். இது போலவே ஒரு துணியைத் தயாரித்து அசத்தியுள்ளனர் இரு நாட்டு விஞ்ஞானிகள். சிங்கப்பூரின் நான்யாங் பல்கலை மற்றும் அமெரிக்காவின் கலிபோர்னியா தொழில்நுட்பப் பல்கலை விஞ்ஞானிகள் தான் அதை சாதித்தவர்கள். அந்தக் காலத்தில் போரில் தற்காத்துக் கொள்ள சங்கிலி உடைக் கவசம் பயன்பட்டது. அதை இந்த கால முப்பரிமாண அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் இந்த வினோதமான உடையை நெய்துள்ளனர். முதலில் நைலானில் சிறிய சங்கிலிகள் செய்து அவற்றை ஒரு துணி போல பின்னி, ஒரு பிளாஸ்டிக் பையில் வைத்து வெற்றிடத்தை உருவாக்கினர். இந்த சங்கிலித் துணி மீது அதிக அழுத்தத்தை உண்டாக்கும் போது, இளக்கமான நைலான் சங்கிலிகள், விறைப்படைந்து, பல மடங்கு எடையைத் தாங்கும் அளவுக்குப் பலம் பெற்றன.இதே போல, முப்பரிமாண அச்சு இயந்திரத்தில் அலுமினியச் சங்கிலித் துணியை விஞ்ஞானிகள் உருவாக்கினர். இந்த சங்கிலித் துணியும் அழுத்தத்திற்கு ஆளானபோது, இளகிய நிலையிலிருந்து இறுகிய நிலைக்கு மாறிவிடும். இளகிய நிலையிலிருந்து இறுக்கத்திற்கு, வேண்டியபோது மாறும் துணி வகை, பல பயன்களைத் தரும். விண்வெளி, மருத்துவம், பாலங்கள் என பல துறைகளில் இந்தத் துணிக்கு தேவை உள்ளதாக ‘நேச்சர்’ இதழ் தெரிவித்துள்ளது.



# உணவு தரும் நுண்ணுயிரிகள்

சுற்றுச் சூழலுக்குப் பெருத்த சேதத்தை ஏற்படுத்தாமல், மனித உடல் நலத்திற்கு தேவையான புரதங்களை தயாரிக்க முடியுமா? முடியும், என்கின்றனர் ஜெர்மனியிலுள்ள கோட்டிங்கென் பல்கலைக்கழக ஆய்வாளர்கள். எப்படி? நல்ல புரதங்களைத் தயாரிக்க, நுண்ணுயிரிப் பண்ணைகளை அமைக்கலாம் என, ஜேர்மனிய விஞ்ஞானிகள் பரிந்துரைத்து உள்ளனர்.

சூழல் மாசுபாடுகளைக் குறைக்கவும் இந்த நவீன முறை உதவும். பயிர்கள் மூலம் கிடைக்கும் தாவர புரதங்களும், பண்ணைகள் மூலம் கிடைக்கும் இறைச்சி புரதங்களும், நீர், நிலம், உரம் போன்ற பெரும் செலவுக்குப் பிறகே கிடைக்கின்றன.

ஆனால், மாற்று எரிசக்தி முறைகள் மூலம், மிகக் குறைந்த செலவில் நுண்ணுயிரிகளை, உயிரிக்கலன்களில் வைத்து வளர்க்க முடியும். அவை, குறைந்த இடத்தில் அதிக அளவில் புரதங்கள் மற்றும் விற்றமின்கள் போன்ற இதரச் சத்துக்களையும் தயாரித்துத் தரவல்லவை.

வேளாண் பயிர்களில், அதிக புரதம் தரக்கூடியது சோயா. இப்பயிர் - கிலோ புரதத்தைத் தருவதற்கு தேவையான நீர், நிலம், உரம் போன்ற இடுபொருட்களில், 10 சதவீதத்தை வைத்தே, நுண்ணுயிரிகளால் புரதங்களைத் தயாரித்துவிட முடியும்.

நுண்ணுயிரிப் பண்ணைகளில் தயாரிக்கப்படும் புரதங்கள் மற்றும் சத்துக்களைப் பொடிகளாக்கி, தீவனமாக ஆடு, மாடு, கோழிகளுக்கும் போடலாம் அல்லது நேரடியாக மனிதர்களுக்கு உணவாகவும் ஆக்கலாம் என்கின்றனர், கோட்டிங்கென் விஞ்ஞானிகள்.

தமிழ்க்கவி

# என்ன உலகமடா பரமானந்தா?



18

“ஏது இந்தக் கந்தப்பன் மற்றவனிட்டப் போய் கைகழுவ..ஹஹ. அது நடக்காது. டேய். ‘மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொப்பிழக் கப்பாயாது’”
“அப்பிடிப் பாஞ்சிட்டா”
“பாஞ்சா அதை மற்ற மந்தியள் தங்கட கூட்டத்தில சேர்க்கமாட்டுதுகள்.”
“கஸ்டந்தான் அப்பு. இப்ப உங்களையும் கூட்டத்தில சேர்க்க மாட்டாங்கள். ஏனெண்டா இப்ப கைகழுவுறதெண்டாலே அதின்ர அர்த்தம் வேற, எங்க போனாலும் கை கழுவித்தான் ஆகோணும்.”
எடேய் அந்த நாளையில ஒருத்தன் எல்லை மீறி நடந்திட்டானெண்டா ஊரே அவனைக் கைகழுவிப் போடும். பொறுப்பைச் செய்யாம விட்டா கைகழுவிட்டான். எண்டு சொல்லுவினம். உதென்ன புது நாகரீகம். ங.. போன கிழமை மன்னாருக்குப் போனன். எல்லாரும் என்ன கைகழுவிப்போட்டே வசுவில ஏறுகினம். சும்மா விடடா..பங்க பப்பிளிக்கு வசுவில இடிச்சுப்பிடிச்சு மோதி நெரிச்சுத்தானேடா சனம் போகுது.”
“ சரியப்பு எல்லாச் சனமும் போக ரெண்டொரு வசுத் தானே பத்துமே.”
“டேய் பத்தாட்டி லாம்பெண்ணைய ஊத்திப் பத்த வையன்,...ங.. உந்தக் கொரோனா உந்தப்போடு போடுது. உதுக்கயும் உழைச்சுப்போட அந்தரப்படுறியள். சட்டமெண்டு ஒண்டிருக்குத்தானேயடா..இனி தேத்தண்ணிக் கடையள், சாப்பாட்டுக் கடையள். என்ன கோலாகலமா நடக்குதெண்ணுறாய். பின்ன இந்தியாக் கடையள் மாதிரி என்ன ஒருக்கா குடிச்சிட்டு எறியிற கப்பே? ச்சைக் எத்தின பேர் சூப்பிக் குடிச்ச கிளாசை அப்பிடி அலாக்கா தண்ணியில போட்டு ரெண்டு ஆட்டாட்டிப்போட்டு பேந்தும் அதுக்கானேடா மற்றாக்களுக்கும் குடுக்கிறாங்கள். பங்க எங்க பக்கத்தில ஒரு குடும்பம் இருக்கு புரியனுக்கும் சமைக்கத் தெரியாதாம், பெண்டிலுக்கும் சமைக்க வராதாம், பிள்ளையளும் ரெண்டு. சதா சர்வ காலமும் கடையிலதான்ரா சாப்பாடு. கதையக்கேள், உந்த பாண்காரனும் ரோட்டால வரயில்லயோ கொலைப்பட்டினி.” “ரெண்டு வரியமா சமையல் பழகாம இருக்கினமே நீ சும்மா வெடிக்காத” “வெடியோ, ஆரடா சமையல் பழக்கிறது. இவை லவ்விக் கொண்டு வந்தவையாம் ரெண்டு பகுதியும் கை கழுவி விட்டுட்டாங்கள். அப்ப”
“அதைவிடப்பூ ஆர் என்ன சொன்னாலும் நீ கொஞ்சம் கவனமா திரி.. இல்ல இப்ப எதுக்கு வெளியில திரியிறாய் வீட்டோட கிடந்தா என்ன”
“வெளியில எங்கடா நான் போறன். உவன் செல்லனிட்ட இடைசுகம் போனனில்ல எட இப்ப அவனுமெங்கடா.. முன்ன மாதிரி இதம்பதமில்ல, எனக்குப் பிடிச்ச கெடுகாலம். மோன் தன்னோட வந்து இருக்கச் சொன்னவன்தானே. நான் ஒருக்காலும் நடவாதெண்டிட்டன்.. ஏனோ? பேயா அங்க போத்தல் கள்ளுக்கிடக்கே .ஹ என்ன பொறின் சரக்கெண்டாலும் எங்கட ஒத்தப்பனைக் கள்ளுக்கு கிட்ட நிக்கேலுமே. போயிருப்பன் கடசி உந்த போத்தல்களெண்டாலும் இருந்திருக்க.

> **இந்தக் குடிமக்கள் இருக்கப்போய் தான் பல நாடுகளிலயும் அரசாங்கம் திறமா ஓடுது. எங்க இதை நிப்பாட்டிப்பாக்கட்டன். ஹே.. அங்கால அரசாங்கம் நிம்மிலதான் ஓடோணும். காத்துப் போயிடும் கண்டியோ**

ஆரடா சொன்னது குடி குடியக் கெடுக்குமெண்டு ங.. குடிக்காம நாங்கள் இருந்தா.. எத்தினை குடி கெடும் எண்டு தெரியுமோ சொல்லு பாப்பம். எடேய் ஏதோ இந்தக் குடிமக்கள் இருக்கப்போய்தான் பல நாடுகளிலயும் அரசாங்கம் திறமா ஓடுது. எங்க இதை நிப்பாட்டிப்பாக்கட்டன். ஹே.. அங்கால அரசாங்கம் நிம்மிலதான் ஓடோணும். காத்துப் போயிடும் கண்டியோ. மெய்யே பொடியா இப்பத்தையில் சினிமாக்கள பாக்கயில்லயே - குடிச்சாத்தான்டா ஹீரோ. சும்மா போடா குடிக்கிறதாலதான் புற்று நோய் வருதெண்டா எத்தின குழந்தையளுக்கு புற்று நோய் அப்ப தாய்ப்பாலை நிப்பாட்டுவமே. எங்கயோ பிழை நடக்குதடா.. தனக்கணைஞ்சவனுக்கு வேலை செய்யிறவை பெருகிப்போச்சினம். என்ன இல்லையெண்ணப்போறியோ. போடா போடா உந்த மேல்நாடுகளின்ர தில்லுமுல்லுகள விளங்காம கதைக்கிறாய். எட அவன் சண்டை நடக்கயுக்க என்னெயிறவன். முதல் கப்பலில ஆயுதத்தை அனுப்புவான். அடுத்த கப்பலில நிவாரணத்தோட மருந்தையும் கொண்டு வருவான்.

இல்ல இப்ப என்ன நடந்தது கொரோனாவ முதல் அனுப்பினான் பின்னால மருந்துகளையும் தடுப்பூசியளையும் அனுப்பிறான். இனி மெள்ள மெள்ள இன்னொண்டும் நடக்குது. உள்ளூர் உற்பத்தியாளரை பெருக்கிறமாம் பேர்வளியெண்டு மனிசர் திங்கிற சாப்பாட்டில மண் விழுத்திறாங்களடா ங... மஞ்சள் போச்சா இனி வெந்தயம், கடுகு, கருவாடு எண்டு போகுது என்ன நேரம் போகுதோ அதுக்கு.. “அப்பு. போய்ப்படணை உனக்கு உடம்பு சுகமில்லை விடியக் கதைப்பம்..” என்ன எனக்கு உடம்பு சுகமில்லையோ.. ஹஹ.. எது இந்தக் கந்தப்பனுக்கு, ஏன்ரா இது கூப்பன் மாவில வளத்த உடம்பே போடா முத்துச்சம்பா, சீனட்டி, குரக்கன், தினை, சாமையெண்டு திண்டு வளந்த உடம்பெடா. வெறுவாய்க்கில கெடுவார் இப்ப வாற அரிசியிலயும் பேர்வைக்க மாட்டாம நம்பரெல்லே போடுறாங்கள். டேய் இஞ்ச விடு எனக்கென்ன வெறியேசிக் எட அங்கின அவனிட்ட ஒரு அரைப்போத்தில் கள்ளடிச்சு சிசிக் அது வாய்க்கயில்லயடா.. இஞ்ச விடடா நான் போய்ப் படுத்தா என்ர நாளைய வாழ்க்கைக்கு ஆரடா உத்தரவாதம்.. விடியக்கு முன்னம் என்னென்ன சாமான் பரணில ஏறுதோ காத்தில பறக்குதோ. பின்ன படுக்கப் போகேக்க நூறுரூவா வித்த சீனி விடியக்காத்தால நூத்தி அறுவது ரூவா. பால்மா பெட்டியளக் காணேல்ல. சனத்தை நித்திரையாக்கிப் போட்டு இன்னும் என்னத்தை துலைச்சுக் கட்டப் போறாங்களோ செய்யப் போறாங்களோ நெஞ்சு நடுங்குதடா..நீ போய்ப் படெண்ணுறாய். அவனாரோ வேட்டி கட்டுற ஆசையில நிக்க கோவணமும் களவு போச்சுதாம்
நான் போய்ப் படுத்தா உதுகளை ஆர் கேக்கிறது? ஆர் பாக்கிறது? இப்ப போனா சின்னவன்ர பெண்டில் சோறும் போடாள். பெரியவனும் ஊரில இல்ல மாமியார் வீட்ட போனாப் போல லொக்டவுண் போட் டிட்டாங்கள். இஞ்ச விடு நான் ஒருக்கா செல்லனிட்ட போட்டு வாறன். அஅஅ... பத்து மணியெண்டா என்ன கொஞ்சம் அங்கால எட்டி நடந்தா கதிர்வேலன்ர காவல் கொட்டிலுக்கு போகலாந்தானே. “அப்பு உந்த மதுவில் வச்ச ஆசையால நீ இப்ப லொக்டவுணுக்க ராராவா திரிஞ்சு மாட்டப் போறாய்”. அட போடா நீயொரு பக்கம் விவசாயிக்கு என்னடா லொக்டவுண். உந்த மம்பட்டிய எடு தோள்ள வச்சுக் கொண்டு நான் யாழ்ப்பாணங் காண போய்க்காட்டுறன். எடேய் நாங்கள் கழுவுற மீனில நழுவுற மீனுகளெடா. கள்ளு முடிஞ்சா என்னடா கதிர்வேலன்ர வடி முடியாதுடா. எங்காலயப்பு உனக்கு காசு எண்டோ கேக்கிறாய் ஹஹ..ஆட்டைவித்தால்.. யாரொருவர் ஆடாதாரே கண்ணா ஆசையெனும் தொட்டிலிலே..சவுந்தரராசன்ர பாட்டு எனக்கெண்டுதான் எழுதினவர் கண்ணதாசன். ‘அப்பு ஆட்டைவித்தாலோ ஆட்டுவித்தாலோ’ என்ன நாசமோ. அதெடா கள்ள வேலி பாயுதடா நெடுகிலும் மாலாவின்ர வேலிக்க பூருதாம் சத்தம் போட்டாள். அதான் வித்துப் போட்டன்..வாய மூடிக் கொண்டிரு அவை வந்து ஆட்டைத்தேடினா அதைக் காணேல்ல யெண்டு சொல்லிப் போடுவன் நீ வாய் திறந்தியோ.. பிறகு உன்னோட எனக்குக் கதையில்ல. ஆனா தம்பீ நீ மாலாட பெடிச்சிக்குக் கடலை போட்டதை மறைக்காம வெளியில கொட்டிப்போடுவன். ‘அப்பு நானொண்டும் சொல்லயில்ல நீ போணை’
‘அது அந்தப்பயம் இருக்கோணும். சுண்டைக்காய்ப் பொடியன் என்னைக் கண்டிக்கிறார். கேடு கேடெண்ணுறியள். மது குடிச்சாத்தான்ரா போதை. மாது நினைச்சாலும் போதை. அந்தப் பெடிச்சியின்ர நெப்பில் இவர் இருக்கும் வரைக்கும் என்ர கப்பலும் ஓட்டலாம். ■

## குளிர்ச்சி தரும் வெள்ளைக் காகிதம்!

சாதாரண வெள்ளைக் காகிதம், ஏர்கண்டிஷனருக்கு போட்டியாக வர முடியுமா? முடியும் என்கிறது, அமெரிக்காவில், மாசாசூசெட்சில் உள்ள நார்த் ஈஸ்டர்ன் பல்கலைக்கழக ஆய்வு. இங்குள்ள ஆராய்ச்சியாளர்கள், வெள்ளைக் காகிதத்திற்கு, டெப்ளான் படலம் பூசி அதை கட்டிடத்தின் கூரை முழுவதும் விரித்து ஒட்டிவிட்டனர். வெள்ளைக் காகிதம் சூரியக் கதிர்களைப் பெரும்பாலும் எதிரொளித்து திருப்பி அனுப்பி விடுகிறது.



இதனால் கட்டிடத்தின் மீது வெப்பம் ஏறுவது வெகுவாக குறைக்கப்படுகிறது. எந்த அளவுக்கு? வெளியே உள்ள வெப்பத்தைவிட, கட்டிடத்திற்கு உள்ளே இருக்கும் வெப்ப நிலை 10 டிகிரி பாரன்ஹைட் அளவுக்குக் குறைவாக உள்ளது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். காகிதத்தின் மீது பூசப்பட்டுள்ள டெப்ளான் பூச்சு, காகிதத்திற்கு விரைப்பையும், ஒட்டுவதற்குத் தேவையான பிடிப்பையும் தருகிறது.

இருந்தாலும், இந்தக் காகிதத்தை மறுசுழற்சி செய்வதில் எந்த தடையும் இல்லை என்ற நார்த் ஈஸ்டர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். நம்ம ஊர் வெள்ளை சுண்ணாம்புக்கு அடுத்து, இப்போது வெள்ளைக் காகிதம்!

## சூழலைக் காக்கும் அட்டை பெட்டிகள்!


ஆப்பிளின் வருகைக்குப் பின், சற்று பின் தங்கினாலும், சோனி இன்றும் கருவிகள் உலகில் கெத்தான போட்டியாளர் தான். எனவே, ஜப்பானின் சோனி, ஆண்டுதோறும் பல லட்சம் கருவிகளைப் பெட்டிகளில் அடைத்து நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கிறது. பல்லாயிரம் டன் எடை கொண்ட ஸ்டைரோபோம், அட்டை மற்றும் காகிதப் பெட்டிகள், சுற்றுச்சூழலுக்கு சேதம் விளைவிக்காதவையாக இருக்க வேண்டும் என்று சோனியின் தலைமை கருதுகிறது.

அதற்கென தனிப் பிரிவை அமைத்து, முழுதும் சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாகவும், மறுசுழற்சி செய்யப்பட்டதாகவும் இருக்கும்படி புதிய ‘பேக்கேஜிங்’ முறையை சோனியே உருவாக்கி இருக்கிறது. மறுசுழற்சி செய்த காகிதங்களுடன், கரும்பு சக்கை மற்றும் மூங்கில் நார் போன்றவற்றை கலந்து சோனியின் ஆராய்ச்சியாளர்கள் புதுவிதமான பேக்கேஜிங் பெட்டிகளை உருவாக்கி உள்ளனர்.




இந்த முறையில் உருவான வெளி அட்டைகள் மற்றும் கருவிகளைச் சுற்றிலும் அடிபடாமல் தடுக்கும் உள் அட்டைகள் மிகவும் இலகுவாக, அதே சமயம் வலுவாக இருப்பதாகச் சோனியின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இப்படி ஒவ்வொரு பெரிய நுகர்பொருள் நிறுவனங்களும் சுற்றுச்சூழலைக் காக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால், பூமி அழிவில் இருந்து பிழைத்துக் கொள்ளும்.

சி.ரமேஷ்



# விடையில்லாக் கேள்விகள்

பண்டிதர் கூறிய வார்த்தைகள் மின்னலாய் வந்து நெஞ்சில் நிழலாடியது. “தம்பி ஒருக்கா பெரியதம்பிரான் கோயிலுக்குப் போயிட்டு வாருமன். நெஞ்சில் அழுத்தும் பாரமெல்லாம் அங்கொருக்கா போயிட்டு வந்தா இல்லாமப் போகும்”.

அதற்கு நேரிடையாய் நான் பதில் சொல்லாவிட்டாலும் மனதுக்குள் சிரித்துக் கொண்டேன். நான் கோயிலுக்குச் செல்வதில்லை என்று அவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தும் இதை ஏன் என்னிடம் கூறினார். இற்றைவரை நினைத்துப் பார்க்கிறேன் எனக்கு அது விளங்கவே இல்லை.

பண்டிதர் இறந்து ஏழு வருடம் ஆகிறது. எனக்கு கோயிலுக்குப் போகவேண்டுமென்று தோன்றவே இல்லை. ஆனால் இன்று ஏன் திடீரென்று இந்த நினைப்பு வந்தது என்று எனக்குப் புரியவே இல்லை. என்னதான் மனதில் இருந்து அந்த நினைப்பை அகற்ற முனைந்தாலும் அதிலிருந்து என்னால் விடுபடமுடியவில்லை. திடீரென ஒரு முடிவுக்கு வந்த நான் மனைவியிடம் கூறினேன் “இஞ்சாருமப்பா வர்ற புதன் கிழமை ஒருக்கா நாங்க பெரியதம்பிரான் கோயிலுக்குப் போயிட்டு வருவமா?” என்னை விநோத விலங்கொன்றைப் பார்ப்பது போல் பார்த்தாள் மனைவி. அவளைப் புரிந்து கொண்டவனாய் “உண்மையாத்தான் சொல்றன் ஒருக்கா கோயிலுக்குப் போயிட்டு வருவம்.” நான் நக்கலுக்குச் சொல்கிறேனோ என்று எண்ணியபடி என்னைப் பார்த்தாள் மனைவி. சலனமின்றி காணப்பட்ட என் முகத்திலிருந்து அவளால் ஒன்றுமே கண்டுபிடிக்க முடியாமல் போகவே “மெய்யாத்தானா சொல்லுறியள்?” என மறுபடியும் கேட்க நான் “ஏனப்பா உம்மளிட்ட பொய் சொல்லப் போறன். உண்மையாத்தான் சொல்றன்” என்றபடி அங்கிருந்து நகர்ந்தேன்.

அவளால் இன்னும் கூட நம்ப முடியவில்லை. திருமணமாகிப் பத்தொன்பது வருடங்கள் ஆகின்றன. ஒரு நாட்கூடக் கோயிலுக்குப் போவம் என கேட்டதில்ல. முதல் முறையாய் நான் கேட்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. சும்மாதான் கேட்டிருப்பன் என்று நினைத்தபடி அவள் சமையலறைக்குள் நுழைந்தாள். அன்றைய நாள் அத்தோடு சென்றது.

நாட்கள் நகர நகரப் புதன்கிழமையும் வந்தது. கம்பியூட்டரில் கட்டுரை ஒன்றைத் தட்டச்சு செய்து கொண்டிருந்த என்னிடம் வந்த மனைவி தேநீரை மேசையில் வைத்தபடி “என்னப்பா இண்டைக்கு என்ன கிழமை என்று உங்களுக்குத் தெரியுமோ?” என்றாள்.

நான் சிரித்தபடி “ஏன்? இண்டைக்குப் புதன் கிழமை என்று தெரியாமலா நான் இருக்கிறன்” என்றேன். “ஏன் கேட்டனியள்” என்று அவளிடம் நான் வினாவ “அப்ப பெரியதம்பிரான் கோயிலுக்குப் போகத்தான் போறியளோ?” என்று கேட்டாள். நான் யோசிச்சுச் சொல்றன் அப்பா எனக் கூறியபடி என் கட்டுரையில் கவனமாக இருந்தேன். என்னை நோக்கி சற்று அருகில் வந்த அவள் கேட்டாள். “அப்ப நான் இண்டைக்கு உங்களுக்கு மச்சம் சமைக்கத் தேவையில்லையா?” கட்டுரையில் கவனமாக இருந்த எனக்கு சற்று எரிச்சல் மேலிட இல்ல மரக்கறியே சமையும் எனக் கூறினேன். என்னை நன்கு புரிந்து கொண்ட அவள் அவ்விடத்தை விட்டு சற்று நகர்ந்தாள்.

“பின்னேரம் மூன்று மணியாக மனுசி கேட்டாள். நான் வெளியில ஒரு வேலையாப் போகவேண்டும். நீங்கள் கோயிலுக்குப் போகையில்லை என்றால் நான் ஒருக்கா டவுனுக்குப் போட்டு வரட்டே” என்றாள்

“நான் உம்மட்ட அண்டைக்குச் சொன்னமாதிரி கோயிலுக்கு போட்டு வருவம் வாரும்” என்று கூறிவிட்டு வேட்டியைக் கட்டத் தொடங்கினேன். எனது செய்கை அவளுக்கு உலக அதிசயமாய் இருந்தது. மனத்தில் இனம் புரியாத உவகையோடு அவளும் வெளிக்கிடத் தொடங்கினாள்.

கோயிலை அண்மிக்க அண்மிக்க எனக்கே வியப்பாய் இருந்தது. இயற்கை கொட்டிக் கிடக்க மாடங்களற்று அலங்காரமற்று அமைதியாய் காட்சியளித்தது. சுற்றிவர நின்ற மருதமரங்கள் கோயிலுக்குப் புதுப்பொலிவை அளித்தன. ஆலமரத்தின் நிழலின் கீழ் எவ்வித ஒப்பனையும் அற்று அப்பழுக்கில்லாத அழகுடன் காட்சியளித்த கோயிலுக்கு அருகில் இருந்த குளத்தடியில் நாரைகள் எதையோ கொத்தியபடி அங்கும் இங்கும் திரிந்தபடியிருந்தன. ஆங்காங்கு சனங்கள் தென்பட கோயில் இயற்கை எழிலுடன் அழகாகவே தென்பட்டது. கோயிலில் என்ன வேண்டுவது என்று கூடத் தெரியாமல் மனைவி கூறியபடி பழங் கிணற்றில் நீரை மொண்டு கால்களைக் கழுவிக் கொண்டு கோயிலை நோக்கினேன்.

கடவுளைச் சுற்றி ஏற்றி வைக்கப்பட்ட தீபங்களில் இருந்த வெளிச்சம் கண்ணைக் கூசச் செய்தது. பூசாரியார் அச்சரம் கீறி அதற்குப் பூசை செய்து கொண்டிருந்தார். இயற்கை அழகில் மனம் இயைய வந்த நோக்கத்தை மறந்து கோயிலையும் மக்களையும் அவதானிக்கத் தொடங்கினேன். பூசாரியார் பின்னர் நாகதம்பிரானுக்குப் பூசையைத் தொடங்க பக்தர் கூட்டம் அங்கு அலைமோதியது. காட்டப்பட்ட தீபத்தை வெளியில் வைக்க அனைவரும் தொட்டுக் கும்பிட்டனர். எனக்கருகில் நின்ற மனைவி “இஞ்சாருங்கோ ஏன் பார்த்துக் கொண்டு நிக்கிறியள் தொட்டுக் கும்பிடுங்கோ” என்றாள். அவளை உதாசீனம் செய்யாது கற்பூரத்தட்டைத் தொட்டுக் கும்பிட்டேன். தெய்வதீர்த்தத்தை மூன்றுமுறை எத்தி நீறை மந்திரித்து தேசிக்காயை வெட்டி கலை ஆடியபடி கட்டுச் சொல்ல ஆரம்பித்தது. அமைதியாக கோயிலின் ஒரு மூலையில் குந்தியபடி நடப்பதை அவதானிக்கத் தொடங்கினேன்.

குறை தீர்க்க வந்த அநாதரட்சகனான பூசாரியிடம் தம் குறைகளைக் கூறி பலன்களை வேண்டி நிற்க அவரும் புரிந்தும் புரியாத் தமிழில் நாவை இழுத்து எதை எதையோ கூற மக்களும் அப்பதிலால் திருப்தி கொண்டவர்களாய் ஒருவர் பின் ஒருவராக நகரத் தொடங்கினர். “என்னப்பா வீட்டுக்குப் போவமே” என மனுசியிடம் கேட்க அவளும் “கட்டுக் கேட்டுக் கொண்டு போவமேயப்பா” என்றாள். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவளின் சொல்லையும் தட்டத் தெரியவில்லை. கூட்டம் நகர நகர நாமும் கூட்டத்துடன் கூட்டமாக நகரத் தொடங்கினோம். சனங்களைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. சனங்களுக்குத்தான் எவ்வளவு பக்தி. அவர்களுக்குத்தான் எத்தனை நம்பிக்கை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறை தம் குறைகளைக் கூறினால் அவை தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை. அதனால்தானோ என்னவோ பூசாரியிடம் தம் குறைகளைக் கூறத் தொடங்கினர்.

நோயாளிகள் தம் நோய்களைக் கூறி அதனை ஆற்ற முனைந்தனர். பூசாரியாரும் மக்களின் குறையறிந்து அதற்குப் பரிகாரமும் கூறினார். பாவம் மக்களின் அர்த்தமற்ற வாழ்க்கையை எண்ணியபடி இருந்த என் மனதில் லேசாய் அந்தக் கேள்வி மாட்டிக் கொண்டது? எனக்கு என்ன துன்பம்? விடைதெரியா புதிர்களுடன் மனைவியைத் தொடர்ந்த வண்ணம் இருந்தேன். சிலருக்குக் கட்டுக்களைக் கூறிய தெய்வம் அவர்களிடம் பெருங்குறை இருக்கும் பட்சத்தில் தேசிக்காய் வெட்டி கழிப்பும் கழித்தது.

கூட்டம் மெதுவாக நகர நகர என் பொறுமை குறித்து ஏலவே அறிந்திருந்த மனைவி என்னிடம் “முன்னால் சென்று நிற்போமோ” என வினாவினாள். நான் சிரித்தபடி “தேவையில்லை வரிசையிலே செல்வோம்” எனக் கூறிக் கொண்டு நகர்ந்தேன். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. ஏன் அப்படிச் சொன்னேன் என்று. வரிசை நகர நகர எனக்குள் எழுந்த கேள்விகள், மீண்டும் என்னைப் பின்தொடரத் தொடங்கின. இங்கு ஏன் வந்தேன்?... இப்போது எதற்காக ஏன் நகர்ந்து கொண்டிருக்கிறேன். பூசாரியிடம் என்னத்தைக் கேட்பது, அவர் எனக்கு என்னத்தைச் சொல்லப் போகிறார்? விடையின்றி வெறுமனே எழும் வினாக்களுடன் நகர ஆரம்பித்தேன். ஈற்றில் ஒரு வழியாக என் முறை வர பூசாரியார் என்னைக் கூப்பிட்டார். பலிக்குச் செல்லும் ஆட்டைப் போல அவரை நோக்கி நடந்தேன். கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். என் நெற்றியில் அள்ளிய விபூதியைச் சாத்தினார். கண்களால் என்னை ஆழ ஊடுருவினார். வாயைத் திறக்கச் சொன்னார். நான் ஆக்காட்ட விபூதியை அள்ளி எறிந்தார். சயன்ஸ் படித்த எனக்கு சாணம் என்ற எண்ணம் மின்னலெனத் தோன்றி மறைந்தது. கையாலாகாத என் குணத்தை நொந்து கொண்டேன். என் தலையை அழுத்தமாகப் பற்றியபடி ஏதோ சொன்னவர். பின்னர் ஆலயத்தின் தாய்ப்பீடத்தை நோக்கி அழைத்துச் சென்றார். சுவாமிக்குக் கிட்டே வந்தவுடன் தலையை அழுத்தமாக பிடித்தபடி ஏதேதோ மந்திரங்களைச் சொன்னபடி என்னிடம் கேட்டார்.

“இப்போது என்ன செய்கிறது...”

நான் அவரின் கண்களை உற்று நோக்கியபடி “எனக்கு ஒன்றுமே செய்யவில்லை” என்றேன்.

என்னிடம் பூசாரியார் என்னத்தை எதிர்பார்த்தாரோ தெரியாது. என்னை ஒரு தரம் ஆழமாக உற்று நோக்கி

> **“கண்களால் என்னை ஆழ ஊடுருவினார். வாயைத் திறக்கச் சொன்னார். நான் ஆக்காட்ட விபூதியை அள்ளி எறிந்தார். சயன்ஸ் படித்த எனக்கு சாணம் என்ற எண்ணம் மின்னலெனத் தோன்றி மறைந்தது. கையாலாகாத என் குணத்தை நொந்து கொண்டேன்.”**

விட்டுச் செம்பில் இருந்த நீரை, என் முகத்தை நோக்கி அறைந்தார். புரியாத பார்வையுடன் அவரை நோக்கி மலங்க மலங்க விழித்தேன்.

பின்னர் என் நெற்றியில் திருநீறை அழுத்திச் சாத்த, நான் சுயநினைவுக்கு வந்தேன். “போ” என அவர் கூற அதிபரின் கட்டளைக்குக் கீழ் படியும் அப்பாவி மாணாக்கர்களைப் போல் அவ்விடத்தை விட்டு நகர என் மனதில் மீண்டும் அதே கேள்விகள்.

“பூசாரியார் ஏன் என்னிடம் அவ்வாறு கேட்டார்? நான் ஏன் அவருக்கு அவ்வாறான மறுமொழியைக் கூறினேன்.” பதிலில்லா வினாக்களுடன் மனைவியை நோக்க பூசாரியாரிடம் கட்டுக் கேட்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்த அவள் என்னைப் பார்த்து லேசாய் முறுவலித்தாள். அதில் ஆயிரம் அர்த்தங்கள் ஒளிந்திருந்தன. ■

# எழுத்தின் இயங்கியல்

## இலக்கியத் தன்மையை கண்டடைதல்

ந.மயூரரூபன்



ஒரு பிரதியை அணுகுகின்ற போது அதன் இலக்கியத்தன்மையை உணர்ந்து கொள்ள முடிகிறது. ஒரு பிரதி; அது புனைவு சார் பிரதியாக உள்ள போது அதற்குரிய இலக்கியத் தன்மையை நாம் இயல்பாகக் கண்டடைந்து கொள்கிறோம். அந்த இலக்கியத் தன்மையை நாங்கள் வகை பிரித்து அறிவதுமில்லை அதற்கான தேவையுமில்லை. எனினும் கருத்துருவ அறிக்கையை கூறாக்க விளக்க முறை அவசியமாகும். பொதுவாக புனைவு சார் எழுத்துகளில் நாம் பொதுவாக இலக்கியத் தன்மையை கண்டடைய முனைகின்ற போதும் புனைவு சார் பிரதிகளிலும் இலக்கியத் தன்மையின் கூறுகள் அடையாளங் காட்டப்படக் கூடியன. அதனை இவ்வாறான நுண் கூறாக்க அணுகுமுறையினூடாக நாம் அறிந்து கொள்ளலாம்.

அந்த வகையில் ஒரு பிரதியின் இலக்கியத் தன்மையை புரிந்து கொள்வதற்கு பின்வரும் கூறுகள் துணை செய்வதாக அமைகின்றது.

புரிந்து கொள்கின்ற தன்மை, அமைப்பு, மொழி-உணர் நிலை, வாசிப்பு

இங்கு புரிந்து கொள்கின்ற தன்மை என்பது மிக எளிமையான ஒரு பிரதியை நாம் புரிந்து கொள்கிறோம், புரிந்து கொள்ளவில்லை என்கிற இரண்டு எதிரிடைப் புள்ளிகளாலானது மட்டுமே. ஆயினும் இங்கு ஐந்தாவதாக குறிப்பிட்ட வாசிப்பு என்கிற நுண்கூறு இதனுடன் தொடர்புபட்டது. வாசிப்புச் செயற்பாட்டின் புரிந்து கொள்கின்ற தன்மை என்பது புரிந்து கொள்ளாத தன்மையிலிருந்து அந்தப் புரிதல் நோக்கிய தன்மையை நோக்கிய பயணமாகவே அடையாளப்படுத்த முடியும். அதாவது புரிந்து கொள்ளல், புரிந்து கொள்ளாமை என்கிற இரண்டும் அப்படியே நறுக்கி எடுக்கக் கூடிய நிலையான புள்ளிகள் அல்ல. இரண்டு எதிரந்தங்களுக்கிடையான அணுவே வாசிப்பின் செயற்பாடாக அமைய முடியும். இங்கு புரிந்து கொள்ளலுமில்லை புரிந்து கொள்ளாமையுமில்லை. இது சற்று குழப்பகரமாகத்தான் தெரியும். எனின் வாசிப்பனுபவம் இந்தத் தன்மையை அனைவரையும் உணர வைக்கக் கூடியது.

ஒரு பிரதியை எழுதியவனின் (பிரதிக்கான கருத்துருவம், சிந்தனை, மொழி, காலம், அரசியல், பண்பாடு, கோட்பாடு என்கிற தளங்கள் அச்சொட்டாக வாசிப்பவனின் அனுபவத்திற்குள் அகப்படுவதில்லை. இன்னொருவிதமாகக் கூறினால் அகப்படாமல் போவதுமில்லை. பொதுவாகவே நாங்கள் எல்லாவற்றையும் ஏற்கனவே கொடுக்கப்பட்ட வடிவம், அர்த்தம் என்பவற்றுக்குள்ளாலேயே பெற்றுக் கொள்கிறோம். அதனையே விரும்புகிறோம்.

எங்களுக்கு ‘வடை’ தெரியும், மரக்கறி சாப்பாடு தெரியும், சன்லைட் சவர்க்காரம் தெரியும், அரச சபை? அதுவும் தெரியும் அதற்கான மனப்படம் எங்களிடமுண்டு; மார்க்சிசமும் தெரியும். இப்படி

**இது முதல் குறிப்பிட்டது போன்று இருக்காது. ஆரம்பம் ஆரம்பமாகவே இருக்காது. சில வேளைகளில் கதை முடிவிலிருந்து தொடங்கும். அத்தியாயங்கள் கலைத்துப் போட்டவையாக இருக்கும். இதற்கு இராஜேஸ்குமாரின் துப்பறியும் நாவல்கள் மிக எளிமையான எடுத்துக்காட்டு இங்கு இரண்டு வெவ்வேறு கால இடக் கதைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்று நகர்ந்து ஒன்றாகும் பண்பும் உண்டு. இதை விட முற்று முழுதாக வடிவ மாற்றம் பெற்ற பிரதிகள் உண்டு.**

எங்களுக்கு ‘தெரிந்தவை’ என்கிற களஞ்சியப்படுத்தல்களிலிருந்தே புரிந்து கொள்கின்ற தன்மையைப் பெறுகிறோம். இங்கு புரிந்து கொள்வதற்கு அர்த்தம் தருவதுதான் கதை என்கிற எண்ணமும் எங்களிடம் உண்டு. ஒரு உதாரணத்திற்கே கதை எனக் குறிப்பிடுகிறேன். அது பிரதி ஒன்றிற்குப் பொருந்தும் ஒரு வகையில் புரிந்து கொள்கின்ற தன்மை என்பது எதிர்பார்ப்புகளாலும் அடையாளப் படுத்தபட்டவையாலும் ஆனவையாகவே இங்கு காணப்படுகின்றது.

ஒரு வரலாற்றை, கதையை, கருத்துருவத்தை, உணர்வை புரிந்து கொள்ளுதல் என்பது குறித்த பிரதி அல்லது கதையமைப்பு / கவிதை தருகின்ற அர்த்தம் எனப் பொதுவாக நாம் சொல்லிக் கொள்ளலாம். இங்கு நாம் எதிர்பார்க்கின்ற வகையில் வரலாறு, கதை, கருத்து, என்பன ஒன்றிணைந்து நிற்பதிலிருந்து அதற்கான இலக்கியத் தன்மையை அடையாளப்படுத்துகிறோம். இவை ஒன்றிணைந்து ஒரு குறித்த மையத்தை நோக்கி நகரும் பண்பு இலக்கியத் தன்மையாக நோக்கப்படுகிறது. இங்கு கதை ஒன்று, முடிவுறுவதாகவும் அமையலாம் தொடர்தலாகவும் அமையப் பெறலாம். இன்னொரு விதத்தில் குறித்த பிரதி பன்மை பொருளுரைப்பதாகவும் அமையலாம். அல்லது பொருளைக் கரைக்கின்ற பிரதியாகவும் அமையப்பெறலாம்.

இவ்வாறான புரிந்து கொள்ளுகின்ற அடிப்படைகளிலிருந்து அதன் இலக்கியத் தன்மை அடையாளப்படுத்துகின்ற இயக்கம் வாசகனிடத்திலே உண்டு.

ஒரு பிரதியின் அமைப்பு என்பது, அதன் உருவமைப்பாக கொள்ள முடியும். அந்த உருவமைப்பின் தன்மையும் இலக்கியத் தன்மையை அடையாளங் காட்டுவதாக அமைகிறது. இங்கு உருவமைப்பினை இரண்டு வகைகளில் நாம் பார்க்கலாம்.

ஒரு நேர்கோட்டு வடிவிலான அமைப்பு

இது எங்களுக்குத் தெரிந்தது. எந்தவித சிக்கலான அமைப்புகளுமின்றி ஆரம்பம், நடு, உச்சம், முடிவு என்கிற பண்பமைப்புகளை கொண்டது. ஒரு எதிர்பார்த்த உணர்வுத் தொற்றலையும் பொதுவான புரிந்து கொள்ளும் தன்மையினையும் உருவாக்கவல்லது. முதலில் குறிபிட்டது போன்று ஒரு குறித்த மையம் நோக்கிய பயணத்தை இந்த வகையான பிரதிகள் தரவல்லன. வாசிப்பவர்களில் மிக பெரும்பாலோனோர் ஒரே வகையான உணர்வையும் கருத்தையும் பெறத்தக்க வகையில் இப்பிரதிகள் அமைந்திருக்கும்.

அமைப்பில், தகர்ப்பு செய்த வடிவங்கள்.

இது முதல் குறிப்பிட்டது போன்று இருக்காது. ஆரம்பம் ஆரம்பமாகவே இருக்காது. சில வேளைகளில் கதை முடிவிலிருந்து தொடங்கும். அத்தியாயங்கள் கலைத்துப் போட்டவையாக இருக்கும். இதற்கு இராஜேஸ்குமாரின் துப்பறியும் நாவல்கள் மிக எளிமையான எடுத்துக்காட்டு. இங்கு இரண்டு வெவ்வேறு கால இடக் கதைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்று நகர்ந்து ஒன்றாகும் பண்பும் உண்டு. இதை விட முற்று முழுதாக வடிவ மாற்றம் பெற்ற பிரதிகள் உண்டு. ஏற்கனவே வெவ்வேறு நோக்கத்திற்காக அறியப்பட்ட வடிவங்களில் இலக்கியப் பிரதிகளை வெளிப்படுத்துகின்ற இயல்பு. இதற்கு எம்மத்தியில் சமகாலத்தில் எழுதிக் கொண்டிருக்கின்ற ச. இராகவன், இ.சு முரளிதரன் ஆகியோரின் சிறுகதைகளை எடுத்துக்காட்டலாம்.

இவ்வகையான பிரதிகள் முதலில் குறிப்பிட்ட புரிந்து கொள்ளுகின்ற தன்மைக்கு சற்று சவால் கொடுக்கக்கூடியன . எம்முடைய stock material ஐ சோதிப்பன.

பிரதிகளின் அமைப்பு சார்ந்த பண்புகளும் பிரதிக்கான இலக்கியத் தன்மையை உருவாக்குவதில் துணைநிற்கின்றன. இங்கு நாம் ஒரு விடயத்தைக் கவனத்தில் இருத்தித் தொடர வேண்டிய தேவையுண்டு. அதுவென்னவெனில் தனியாக புரிந்து கொள்ளுகின்ற தன்மையோ அல்லது தனியாக பிரதியின் அமைப்பு சார் வடிவமோ அதன் இலக்கியத் தன்மைக்கு காலாக அமைய முடியாது அல்லது இலக்கியத்தன்மையைத் தந்துவிட முடியாது.

இங்கு மொழியும் மிக முக்கியமானது. இலக்கியத் தன்மையை கண்டடைவதில் இதன் பாத்திரம் மிகப் பிரதானமானது. ஒரு பிரதி கண்டடைந்த மொழி ஒன்றுண்டு. பிரதியில் கண்டடைந்த மொழி வாசிப்பில் கண்டடையும் மொழியாக மாறுகின்ற இயல்பினைக் கொண்டது. ஒரு பிரதியின் சமூக மொழி, இனத்துவ மொழி, கலாசார பண்பாட்டு மொழி, பால் நிலை மொழி எனப் பலவகைகளில் கூறுகின்ற இயல்புண்டு. இங்கு சமூக மொழி என்பது ஒரு குறித்த சமூகக்குழுவின் பயன்பாட்டுக்குள்ளிருந்து வருவது. பிரதேச வழக்காகவும், சாதி வழக்காகவும் வருகின்ற மொழிகளை, அதன் பண்புகளை நாம் சொல்லிக் கொள்ளலாம். இனத்துவ மொழி என்பது இனத்துவ அடையாளங்களை முன் மொழிவதாக அமையும். அங்குள்ள அரசியல் பிரச்சினைகள், அடையாளங்கள் வெளிப்படும். ஈழத்தமிழர்கள், முஸ்லிம்கள் எழுதுகின்ற பிரதிகளின் இவ்வாறான கூறுகள் இனங்காணப்படலாம். இதே போல் கலாசார - பண்பாட்டு மொழி என்பது குறித்த ஒரு குழு மக்களின் தொடர்ச்சியான வாழ்க்கை அடையாளங்களை, சமயங்களை, ஆன்மாக்களை, உணவு-உடை-தொழில்-வாழ்க்கை தொடர்ச்சியை மாற்றங்களை, கலைகளை உள்ளிருத்துகின்ற மொழியாகும். பால், இன, மொழி என்பது ஆண், பெண் மொழி என வகைப்படுத்தலாம். சமூக நிலையில் ஆண், பெண் வேறுபடுத்தல் வாழ்க்கைத் தெரிவிலும் வேறுபடுத்தலிலும் அதனால் வெளிப்படுத்துகின்ற மொழி பெண்ணால் வெளிப்படுத்துகின்ற மொழி என நாம் வகைப்படுத்திப் பார்க்கக்கூடிய அடிப்படைகளைக் கொண்டுள்ள மொழி. இங்கு மொழி இவ்வாறு தனித்தனிக்கூறுகளாக வெளிப்படுவதற்கான சாத்தியங்கள் எப்போதும் இல்லை. மொழியில் சமூக நிலை, இனம், பண்பாடு, ஆண் என அனைத்தும் இணைந்திருப்பதற்கான வாய்ப்புகளே உண்டு. இப்படி நாங்கள் கூறினாலும் எங்களிடமுள்ள மொழி ஒருபிரதான வகைப்பாட்டிற்குள் அடையளப்படுத்தக் கூடியது. அது ஆதிக்கமொழி, புரட்சி மொழி /விடுதலை மொழி, அப்பாவித்தனமான மொழி, நடிக்கும் மொழி / ஏமாற்றும் மொழி, ஐதார்த்த மொழி எனவும் சில வகைப்பாடுகளை கூற முடியும் இவை அந்தப் பிரதி கொண்டிருக்கக்கூடிய பாத்திரத்தின் இயல்புகளால் ஆனது. ஆதிக்க மொழி எம்மிடம் அதிகமுண்டு. சாதி வேறுபாடுகளைக் கொண்டு, இன அரசியலைக் கொண்டு, சமயத்தைக் கொண்டு, மையத்தைக் கொண்டு என அதிகாரத்தை மொழிக் கூறுகளில், வெளிப்படும் இயல்புகளில் தக்கவைத்துள்ள மொழியாக இதனை நாம் கூறலாம். இதற்கு எடுத்துக்காட்டாக பெருவாரியான பிரதிகள் எம்மிடம் உண்டு. இவ்வாறான மொழிப் பண்புகளின் கூட்டிணைவு பிரதிக்கான இலக்கியத் தன்மையை உருவாக்கித் தருகிறது.

ஒரு பிரதி தருகின்ற உணர்வு நிலை என்பது மிக முக்கியமானது. மகிழ்ச்சி, துன்பம், கோபம், விடுதலை, பெருமிதம், தாழ்வுணர்ச்சி என வேறுபட்ட உணர்வு வகைகளை ஒரு பிரதி தரக்கூடியது. ஒரு பிரதி தனித்து உணர்வு வகைமைகளால் மட்டும் அடையாளப்படுத்த முடியாது. அவ்வாறெனில் அது இலக்கியத் தன்மைக்குரியதல்ல.

இங்கு குறிப்பிட்ட ஐந்து விடயங்களும் இணைந்து ஒரு பிரதிக்கான இலக்கியத் தன்மையை உருவாக்கி விடுகின்றன. அல்லது இலக்கியத் தன்மையை இழக்கச் செய்துவிடுகின்றன. இந்தப் பண்புகளை உணருகின்ற பாத்திரம் வாசகனிடத்திலேயே உண்டு. அடையாளப்படுத்துகின்ற பணி விமசர்களிடம் உண்டு. ஒரு பிரதியின் அல்லது எழுத்தின் இயங்கியல் என்பது இவ்வாறான அனைத்துக் கூறுகளின் சேர்க்கைகளிலுமே உண்டு. ■


புலோலியூர் வேல்நந்தன்

## புதுப்புனல் - 06

# ஆசிகந்தராஜாவின்
## பணச்சடங்கு (புனைகதைத் தொகுதி)

தீம்புனலின் புதுப்புனல் பகுதியில் இவ்வாரம் அறிமுகம் காண்பது ஆசிகந்தராஜா எழுதிய பணச் சடங்கு என்ற புனைகதைகளின் தொகுப்பாகும். எங்கட புத்தகங்கள் வெளியீடாக மிக அண்மையில் வெளியீடு கண்டுள்ள இத் தொகுப்பில் 15 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றைக் கள அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தி நோக்கலாம். முதலாவது யாழ்ப் பாணத்தைக் களமாகக் கொண்டவை. இவ் வகையில் சாதுமிரண்டால், இந்துமதியாகிய நான், நரசிம்மம் ஆகிய மூன்று கதைகளைச் சொல்லலாம். இரண்டாவது ஈழத் தையும் புலம்பெயர்ந்த அவுஸ்ரேலியாவையும் களமாகக் கொண்டவை. இவை புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்க்கை அனுபவத்தை பேசுவன. இத்தகைய ஆறு கதைகள் இத் தொகுப்பில் உள்ளன. மூன்றாவது பிற நாட்டு அரசியல் பண்பாட்டுப் பின்னணியில் அமைந் தவை. இவை பெரும்பாலும் ஜோர்த்தான், லெபனான், ஜெருசேலம், ஈரான் நாட்டு வாழ்க்கை பற்றியவை. இத் தகைய ஆறு கதைகள் இத் தொகுப்பில் உள்ளன.

இக் கதைகள் எல்லாமே மனிதர்கள் எதிர்நோக்கும் சமூக, அரசியல், தனிமனித, பண்பாட்டுச் சிக்கல்களையும், இன்னல்களையும், நெருக்கடிகளையும் உணர்வுபூர்வமாகச் சித்தரிப்பவை இத் தொகுப்பில் உள்ள சாதுமிரண்டால், இந்துமதுயாகிய நான் என்ற இரண்டு கதைகளும் சற்று வித்தியாசமான கதைகள். நமது அன்றாட வாழ்க்கை அனுபவங்களுக்குள் பொதுவாக அகப்படாத ஆனால் அகப்படக் கூடிய நிகழ்வுகளின் புனைவுகள் திருமண உறவையும் பாலியல் சிக்கல்களையும் பேசுபவை என்கிறார் இந் நூலிற்கு மிகச் சிறப்பானதொரு முன்னுரையை வழங்கி இருக்கக் கூடிய பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்கள். தற்போது அவுஸ்ரேலியாவில் வசித்து வரும் இந் நூலாசிரியரான ஆ.சி. கந்தராஜா அவர்கள் ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய உலகில் தனது புனைவுகள் மூலமும், புனைவுக் கட்டுரைகள் மூலமும் நன்கு அறியப்பட்ட ஒருவர். ஞானம் சஞ்சிகையில் அவர் எழுதிய புனைவுக் கட்டுரைத் தொடர்கள் அத்துறையில் முன்னோடி முயற்சிகளாய் அமைந்தன. பின்னர் அவை “கறுத்தக் கொழும்பான்” , “செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய்” ஆகிய பெயர்களில் நூல்களாக வெளிவந்துள்ளன. யாழ்ப்பாணம் கைதடியை பிறப்பிடமாகக் கொண்ட ஆ.சி. கந்தராஜா அவர்கள் தற்போது அவுஸ்ரேலியாவில் வசித்து வருகிறார். பூங்கனியியல் உயிரியல் தொழில்நுட்பத்துறைப் பேராசியர். ஜேர்மன், யப்பான், அவுஸ்ரேலியப் பல்கலைக்கழகங்களில் பயின்று விரிவுரையாளராக, பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர். இந்தந் தாவரவியல் அறிவே இவரது புனைவுக் கட்டுரைகளின் அடித்தளமாய் விளங்கின. இலக்கிய உலகில் தலைமுறை கடந்து தற்பெருமையில்லாது பழகிடும் ஒருவர். பணச்சடங்கு என்ற இச் சிறுகதைத் தொகுதி இவரது நான்காவது சிறுகதைத் தொகுதியாகும் . ஏற்கனவே “பாவனை பேசலன்றி” , “உயரப் பறக்கும்காகங்கள்” , “கள்ளக் கணக்கு” ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். “கீதையடி நீயெனக்கு” என்பது இவரது குறுநாவல். இதன் முன்னுரையில் எம்.ஏ. நுஃமான் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் இவரது புனைவுக் கட்டுரைகளுக்கும் புனைக் கதைகளுக்கும் இடையே உள்ள எல்லைக் கோடு மெல்லியது தான். இவரது புனைவுக் கட்டுரைகளில் அனுபவச் சித்தரிப்புகள் ஊடாக அறிவியல் விளக்கம் முனைப்பாக இருக்கும் அதே வேளை அவரது புனைகதைகளில் அனுபவச் சித்தரிப்பின் ஊடாக மனித உறவுச் சிக்கல்களும் மனித உணர்வு நெருக்கடிகளும் முனைப்பாக வெளிப்படும். ஆயினும் இருவகை எழுத்துக்களிலும் சொல்லும் முறையிலும் மொழிநடையிலும் பெரும்பாலும் ஒன்றாகவே இருக்கும். இது அவரின் எழுத்தின் பொதுப் பண்பு என்கிறார்.




மொழிச் சடங்கு என்ற பெயரில் இத் தொகுப்பிற்கு ஒரு அணிந்துரையைத் தந்துள்ள தமிழ் நாட்டின் மூத்த படைப்பாளியான நாஞ்சில் நாடன் அவர்கள் பணச் சடங்கு என்ற இத் தொகுப்பில் இடம்பெறும் சில கதைகளை அதன் சிறப்புக்களை எடுத்துக்காட்டியும் அ. முத்துலிங்கத்தோடு, நூலாசிரியரை ஒப்பிட்டும் பல விடயங்களை எடுத்துக் கூறியுள்ளார். இவ் வகைக் கதைகள் தமிழிற்கு புதியன புனைவும் அறிவுயலும் இயற்கையும் பண்பாட்டுக் கூறுகளும் சுவைபட விரவப்பட்டு வாசிப்பு அனுபவத்தை மேம்படுத்துகின்றன என்கிறார்.

இவரது கதைத் தொகுதிவழி பயணிக்கும் போது “அந்திமம்” என்ற கதை கல்கி தீபாவளி மலரில் வெளிவந்த கதை இதில் தன்னோடு இறுதிக் காலத்தில் சிட்னியில் வாழ்ந்த தன் தாயார் குறித்த நினைவுகளையும் அவர் வைத்திருந்த கொட்டைப் பெட்டி பற்றிய விடயங்களையும் சிறப்பாக பதிவு செய்துள்ளார். காலச் சுவட்டில் வெளிவந்த “முகமூடி மனிதர்கள்” என்ற கதையில் ஒரு மனிதனைச் சுற்றி நடக்கும் உறவுப் போராட்டங்களும், சுயத்தின் மீதான தேடலும் வெளிப்படுவதுடன் முகமூடி மனிதர்களின் பல நிஜமுகத்திரைகள் தோலுரித்துக் காட்டப்படுகின்றன. ஆண் குழந்தை என்ற கதையில் நீனா என்ற பாத்திரத்தை மையப்படுத்தியதாக மேலைத்தேசப் பின்புலத்திலும் ஆண் குழந்தையை பெறமுடியாமல் போனால் அதனை சமூகம் எவ்வாறு பார்க்கும் என்பதைக் காட்டுகிறார். இந்துமதியாகிய நான் என்ற கதை இந்துமதியே கதை சொல்வது போன்ற பாணியில் அமைக்கப்பட்டு அவனது கட்டுப்பாடான வாழ்வு, திருமண வாழ்வு, தாம்பத்திய வாழ்வு போன்ற தளங்களிலே இந்துமதியின் வாழ்வில் ஏற்பட்ட பல மாற்றங்களினூடு சமூக விமர்சனத்தை முன்வைக்கும் கதையாக அமைகிறது.

நரசிம்மம் என்ற கதை போர்ச் சூழலை மையப்படுத்தியதாகப் பெண்களுக்கு எதிராக நடந்த வன்கொடுமைகளைப் பேசுகிறது. “கையது கொண்டு மெய்யது பொத்தி” என்ற கதை சத்திமுற்றப் புலவரின் பாடல் வரிகளில் அமைந்துள்ளது. லெபானில் தஞ்சமடைந்த சிரிய நாட்டு அகதிச் சிறுவன், சிறுமி பற்றிய கதை அது. கதைக்குள் தாம் கருதும் கலை ஒன்றை மட்டும் தேடுபவர்களின் கண்களிலும் நீர் சுரக்க வைக்கும் கதையாக அது அமைந்துள்ளது. ஆண் சுகம் என்ற கதை, மேரி, ரோனி, லீசா போன்ற பாத்திரங்கள் வழி அதீத காதலுக்கும் அடங்காக் காமத்துக்கும் இடையிலான போராட்டங்களை மேலைப் புலப் பின்னணியில் எடுத்துக் காட்டுகிறது. சாதுமிரண்டல் என்ற கதை பாலியல் நோய் அதன் விளைவுகள் அத்தகையோருக்கு பிறந்த பிள்ளைகளின் நிலை என்பவற்றைப் பேசும் ஒரு கதையாக அமைந்துள்ளது. பணச்சடங்கு என்ற கதை தென்னிந்திய மொய் விருந்து என்பதை ஞாபகமூட்டுகிறது. நாகலிங்கம் மாஸ்டர் நடத்திய திருமண நிகழ்வை மையப்படுத்தியதாக குறிப்பாக புலம்பெயர் சூழலில் இத்தகைய திருமண நிகழ்வுகளை பலர் பணச்சடங்குகளாகவே நடத்தும் போலிக் கௌரவங்கள் தோலுரித்துக் காட்டும் ஒரு கதையாக இது அமைந்துள்ளது.

ஒட்டு மொத்தத்தில் இத் தொகுதி தரும் அனுபவம் தமிழ், புலம்பெயர்வு, உலக அனுபவத் தளங்களில் புதிய புதிய கதை சொல் களங்களை திறந்து விடுவதாக உள்ளதுடன் ஆசிரியர் ஊர் நினைவுகளையும் ஊரின்பேச்சு மொழியையும் உயிர்ப்புடன் இணைத்து இக் கதைகளை அமைத்துள்ள பாங்கும் சிறப்புக்குரியதாக உள்ளது. ஏற்கனவே குறுநாவலை எழுதியுள்ள இவரிடம் இருந்து இன்னும் வாழ்பனுபவம் மிகுந்த கதைகளை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம். தற்போது ஞாயிறு தினக்குரலில் ஒரு அகதியின் பேர்லின்வாசல் என்ற தொடர்கதை வெளிவந்து கொண்டிருக்கின்றது. இத்தகையதொரு படைப்பாளுமையின் படைப்பை புதுப்புனலில் அறிமுகம் செய்வதையிட்டு அக மகிழ்கிறேன்.

---

# நிலைக்கண்ணாடி

தரிசனன்




## கணவன் மனைவி என்னும் இருவர்

மனிதகுலம் நாகரிமடைந்து மனிதன் தனது வாழ்க் கையை தனித்த கட்டமைப்புக்களுக்கு உட்படுத்திக் கொள்ளல் ஒரு அவசியமாக உணரப்பட்டதன் எதிரொலி யாக அமைந்த பலவகை மாறுதல்களிலொன்றே ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் என்ற பெயரில் ஒன்றுபட்டு கணவன் மனைவியாய் வாழ்கின்ற ஏற்பாடு. ஆண்குறித்துப் பெண்ணிடமும் பெண் குறித்து ஆணிடமும் இருக்கின்ற இயற்கைத் தேவை நாட்டம் மிக அழகான ஒரு கட்டமைப்புக்குள் வகைப்படுத்தப்பட்டு ஒரு சடங்காகச் சமூக அங்கீகாரத்தோடு வாழத் தொடங்கும் ஒழுங்கு முறையானது சமுகப் பண்பாட்டியல் நடவடிக்கையாகச் சட்டபூர்வ உறவு முறையாகப் பிரகடனப்படுத்தப்படும். விவாக நடவடிக்கை இன்று ஒரு சமூகக் கட்டாயமாகவும் ஒழுக்கமாகவும் பின்பற்றப்பட்டு வருகிறதென்பதை யாவருமறிந்த விடயம்தான்.

மனிதகுல அறிவு வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சி தேவைகள் குறித்ததான புரிதல் போன்றவற்றின் செல்வாக்கினால் இவ்வாறான சமூக ஒழுங்கு பல பல மாற்றங்கள் திருத்தங்களுக்கு உட்பட்டு வருகின்றது.

எது எவ்வாறாயினும் ஆண்,பெண் கணவன் மனைவி என்றும் காலங்காலமாய் தொடர்ந்து வருகின்ற தனிமனித மற்றும் சமூகத் தேவையாக நிலைபெற்று விளங்குகிறது. இந்தக் குறைந்தபட்சக் கூட்டு வாழ்க்கையின் உள் மற்றும் புற மாறுதல்கள் அவ்வப் போது நிகழ்ந்தபடியே இருப்பது அவதானிக்கப்படக் கூடிய ஒரு இயல்பாகியுள்ளது.

திருமணத்தின் பெயரால் கணவன் மனைவியராக இணைகின்ற இருவர் அடிப்படையில் இரண்டு தனிமனிதர்கள் என்பதை ஒரு அவசியமான புரிதலாக அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பரஸ்பர இணக்கப்பாடு, பரஸ்பர நாட்டம், அன்பு, காதல் மற்றும் இயல்புகள் இந்த இருவரிடமும் சரியான முறையில் தொழிற்படும் விதத்தில் தான் ஒரு தாம்பத்திய வாழ்க்கையின் மலர்ச்சி மற்றும் வெற்றி என்பன தங்கியிருக்கின்றன. கணவன் மனைவி இருவரும் தெளிவான புரிதலோடு அன்பையும் பரஸ்பர விட்டுக் கொடுப்பையும் வெளிப் படுத்தும் போது அவர்களது வாழ்வு சிறந்த முறையில் கட்டமைக்கப்படும். அது ஒரு சந்தோசமான தாம்பத்தியமாய் அமைவது சாத்தியமாகிறது.

இந்த இருவரையும் ஒரு ஆணாகவும் பெண்ணாகவும் கருத்திலெடுத்து நோக்கும் போது இயற்கைத் தேவை யின் அவசியமே அதைத் தீர்மானிக்கும் அடிப்படையாக அமைகிறது. இந்த இருவரிடையிலான தேவை உடல் சார்ந்த நாட்டத்தின் வலுவே நாளாந்த பிடிப்பாகவும் அன்பாகவும் காதலாகவும் பரிமாறிக் கொள்ள முடியும்.

துரதிஸ்டவசமாக எமது சமூக அமைப்பில் இவ்வாறான ஆண் - பெண் ஈர்ப்பினைச் சம்பந்தப்பட்ட இருவரைக் காட்டிலும் மரபு சார்ந்த கொள்கைகள் வகுப்பு நிலை மாறிய பிரக்ஞை - இதனை வெளிப்படையாகக் கூறினால் பிரிவு, சாதி, பிரதேச பாகுபாடுகள் மற்றும் அந்த இருவரினதும் குடும்பத்தின் பிரதான உறுப்பினர்கள் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற கருத்துகள் மற்றும் கொள்கைகள் இவையே. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமான திறமான பந்தத்தை தீர்மானிக்க உதவுகின்றன. இன்று இவையனைத்தையும் தாண்டி சீதனம், சொத்துரிமை வலு என்பன ஒரு திருமணத்திற்கான முடிவு செய்ய உதவும் காரணிகளாகிவிட்டன.

இவற்றை எல்லாம் கவனித்து கணித்து முடிவு செய்யப்படும் திருமண உறவுகளெல்லாம் வெற்றிகரமான மகிழ்ச்சி பூர்வமான குடும்பங்களாக கணவன் மனைவியர்களாக வாழ்கிறார்களா என்று கவனிப்போமெனில் இல்லை என்பதையே துக்கத்துடன் கூறிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதுதான் நிலைமையெனில் இத்தகைய உறவுகள் உடைவதில் / பிரிதலின் பங்களிக்கும் காரணிகள் எவையாக இருக்கும் என்பதனை யோசிக்க வேண்டிய விடயம்.

(தொடரும்)

## அவற்றோரன்ன இவற்றோரன்ன

# தமிழர்களின் வாரக் கடைசிகள்: வெகுமக்கள் மனநிலையும் ஊடகக் கருத்துருவாக்கமும்



பேராசிரியர் அ.ராமசாமி

உலகத் தமிழர்களின் பொழுதுபோக்குகளில் முதலிடத்தில் இருப்பவை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள். அவற்றுள் வாரக்கடைசிக்கான நிகழ்ச்சிகளைக் கலவையாகத் தருவதின் மூலம் பார்வையாளத்திரளைத் தன் வசப்படுத்தியுள்ள அலைவரிசை ஸ்டார் விஜய். இவற்றைப் பார்வையாளர்களாகப் பார்த்துவிட்டு நகர்பவர்களாக இருந்துவிடக்கூடாது. அவற்றின் நோக்கங்களின் பின்னணிகளை அறிந்துகொள்வது நிகழ்காலத்தைப் புரிந்து கொள்வதாகும்.

போட்டிகள், போட்டிகளின் வழியாக ஒருவரைத் தேர்வு செய்தல், அதன் மூலம் கிடைக்கும் பிரபல்யம் என்பது விஜய் அலைவரிசையின் வாரக்கடைசி நிகழ்ச்சிகளின் பொது இயல்பு. “ஜோடி நம்பர் ஒன், சூப்பர் சிங்கர், கலக்கப்போவது யாரு” போன்றன நீண்டகாலத் தொடர் நிகழ்வுகள். ஒவ்வொன்றும் பல ‘சீசன்’களைத் தாண்டி வெற்றி நடைபோடுகின்றன. அந்த வரிசையில்




அண்மைய ஆண்டுகளில் இணைந்தவை ‘குக் வித் கோமாளி’ , ‘பிக்பாஸ்’ ஆகியன.

எல்லாவற்றையும் பேச்சாக மாற்றிவிடுவதில் விருப்பம் உடையவர்கள் தமிழர்கள். பேச்சுக் கலையின் வழித் தங்களின் அறிவை வளர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை தமிழர்களின் பொதுக் குணம் என்று கூடச் சொல்லலாம். அதனாலேயே பேச்சுக்கலையின் பலவடிவங்கள் தமிழர்களிடையே செல்வாக்கோடு இருக்கின்றன. தனிப்பேச்சு, கதாகாலட்சேபம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் போன்றன அவற்றுள் சில. இவற்றின் தொடர்ச்சியாகவே செய்தி அலைவரிசைகளின் விவாத மேடைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

தனிப்பேச்சுகள் என்பனவும் நடுவர் ஒருவரைக் கொண்டு அணி பிரிந்து விவாதிப்பதாகப் பாவனை செய்யும் பட்டிமன்றமும் பார்வையாளனின் சிந்தனைக்கு இடம் தராத நிகழ்ச்சிகள். அரட்டை அரங்கம் பாணியில் நடக்கும் பேச்சுக் கச்சேரிகளும் கூடப் பார்வையாளர்களுக்குச் சிந்தனையைத் தூண்டாமல்-யோசிப்பதற்கான வாய்ப்பைத் தராமல், நிகழ்ச்சியை நடத்தும் பிரபலங்களின் கருத்தை ஏற்கச் செய்யும் நோக்கம் கொண்டவையே. சன் குழுமமும், ஜெயா குழுமமும் இத்தகைய பேச்சுக் கச்சேரிகளிலேயே அதிகம் கவனம் செலுத்துகின்றன.

நீயா நானா? என்னும் கருத்துருவாக்கி மற்ற அலைவரிசைகளின் பேச்சுக் கச்சேரிகளிலிருந்தும், இடைவெளி விட்டுப் புதுப்புது சீசன்களாக அறிமுகமாகும் சொந்த அலைவரிசை நிகழ்ச்சிகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டது நீயா? நானா? 2016 இல் தொடங்கிக் கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒளிபரப்பாகும் பேச்சு நிகழ்ச்சி. அதன் இயக்குநர்கள் கூட மாறியிருக்கிறார்கள். ஆனால் முன்வைப்பாளராக இருக்கும் கோபிநாத் மாறவில்லை. அந்நிகழ்ச்சியொன்றின் வழியாகவே அவரொரு ஆளுமையாக மாறியிருக்கிறார். அந்நிகழ்ச்சியில் விவாதிக்கப்பட்ட பல தலைப்புகள் திரள் மனிதர்களின் பொதுப் புத்தியில் கேள்வியாக மட்டும் இருப்பவை. பெற்றோர்கள் பிள்ளைகளிடம் பாரபட்சம் காட்டுகிறார்களா? இல்லையா? என்ற கேள்வியைக் கேட்ட உடனேயே நமது பதிலைச் சொல்லிப் பார்ப்போம். ஆனால், ஆண்களும், பெண்களுமாக அணி பிரிந்து விவாதித்து முடிக்கும்போது நமது மனத்திற்குள் இருந்த பதில் மாறிப் போகும் வாய்ப்புகள் இந்த விவாத மேடையில் இருக்கிறது.

ஒரு கருத்துநிலையை முன்வைத்து, படிக்காதவர்கள் - படித்தவர்கள் / ஒல்லியானவர்கள் - குண்டானவர்கள் / மாமியார்கள் -மருமகள்கள் /தனியார் - அரசு / ஆண் - பெண் / இளையோர் - முதியோர் என ஒரு இரட்டை எதிர்வை முன் வைத்து உருவாக்கப்படும் இந்த விவாத மேடை அடிப்படையில் இத்தகைய இரட்டை எதிர்வுகளின் அபத்தத்தைக் கலைத்துப் போடும் வேலையைச் செய்கிறது. நீயா? நானா? நிகழ்ச்சிக்குக் கருத்துருவாக்கமே முதன்மையான நோக்கம். கட்டுப்பெட்டியான அமைப்போடு தன்னை இணைத்துக் கொண்டு பேசா மடந்தைகளாக இருக்கும் தமிழர்களைப் பேசுபவர்களாக- பேசுபவர்களோடு சேர்ந்து சிந்திப்பவர்களாக ஆக்குவது அந்த நோக்கத்தின் விரிந்த தளம். அந்த நோக்கம் நமது மரபான நம்பிக்கைகள் மீதும், பண்பாடு எனக் கருதிய ஒழுக்க விதிகள் மீதும் கூட மூர்க்கமான தாக்குதலைத் தொடுத்திருக்கிறது.

இம்முதன்மை நோக்கத்தைத் தாண்டி இன்னொரு நோக்கமும் அதற்கு உண்டு. அந்நோக்கம் வெளிப்படையானதல்ல மறைமுகமானவை. நாகரீகப் பண்பாட்டை நோக்கி நகரும் மாதச் சம்பளக்காரர்களை நுகர்வோராக மாற்றுவது. நடுத்தர மற்றும் உயர்நடுத்த வர்க்க வாழ்க்கைக்குள் நுழையும் புதிய மனிதர்களே முதலாளியச்சந்தைப் பொருளாதாரத்திற்குத் தேவையானவர்கள். அவர்களை இலக்குப் பார்வையாளர்களாக வைத்துத் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளே தொலைக்காட்சிகளின் வாரக்கடைசி நிகழ்ச்சிகள். தமிழில் முன்னணி அலைவரிசைகளாக இருக்கும் சன், கலைஞர், ஜெயா, புதிய தலைமுறைக் குழும அலைவரிசைகள் என ஒவ்வொன்றும் இப்போட்டியில் இருக்கின்றன என்றாலும் நீண்ட அனுபவத்தோடு வாரக்கடைசிகளைத் தனதாக்கிக் கொண்ட அலைவரிசை ஸ்டார் விஜய் அலைவரிசையே என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

நிகழ்ச்சி என்பது 30, 60, 90 நிமிடங்களாகப் பிரிக்கப்பட்டு வியாபாரக் குழுமங்களின் நிதியுதவியோடு பார்வையாளர்களுக்கு வந்து சேருகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முதன்நிலை நிதிநல்கைக் (Sponsor)குழுமமும், துணைநிலை வணிகக்குழுமங்களும் உண்டு. அவற்றின் தயாரிப்புப் பொருட்களும் விற்பனைப் பொருட்களும் விளம்பரங்களாகவும் நிகழ்ச்சிகளோடு இணைந்தே பார்வையாளர்களுக்குப் பார்க்கக் கிடைக்கின்றன. வாரவிடுமுறை நாட்களில் நிகழ்ச்சிகளை இலவசமாகப் பார்க்கும் பார்வையாளத்திரள், நிகழ்ச்சிகளுக்கிடையே வரும் விளம்பரிக்கப்பட்ட - சந்தையில் வந்து குவியும் நுகர்பொருட்களை வாங்கியடுக்கும் மனநிலைக்குத் தாவச்செய்யும் நோக்கமும் அதற்கு இருக்கிறது.

நீயா? நானா? வின் அமைப்பிலேயே நிகழ்காலத் தன்மை உண்டு. விவாதங்களை முன்வைக்கும் (கோபிநாத்) நடுவில் நிற்க, ஏற்புநிலைப் பங்கேற்பாளர்கள் ஒருபுறம், மறுத்துரைக்கும் கூட்டம் இன்னொரு புறம் என்பது அதன் மாறாவடிவம். அவ்வடிவத்திற்குள் ஒருவிதத் தொடக்கம், சிக்கலை முன்வைத்தல், அதன் தளங்களை விளக்குதலும் விவரித்தலும் என்பதான எளிய வேலைகளை முன்வைத்து விவாதம் முன்னெடுக்கப்படும். அவ் வளர்த்தெடுப்பில் நிகழ்காலத் தன்மை இருக்கும்படி பார்த்துக் கொள்வதே கோபிநாத்தின் திறமை. அவரது வெளிப்பாட்டிற்கு உதவுபவர் நிகழ்ச்சியின் இயக்குநர்.



இப்பொதுப்போக்கிலிருந்து அவ்வப்போது சில நிகழ்ச்சிகள் கருத்துருவாக்கத்தைக் கைவிட்டு, கருத்துநிலையை நிறுவும் நோக்கம் கொண்டனவாக அமைவதும் உண்டு. அண்மையில் அப்படியொரு நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்ட து. கடந்த ஆகஸ்ட் 15 (இந்திய விடுதலை நாள் சிறப்புநிகழ்ச்சி) அன்று ஒளிபரப்பான நீயா? நானா? அப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு எடுத்துக் காட்டு. சமகாலத்தை விவாதிக்கும் அதன் வழக்கமான முறைமைக்கு மாறாகப் பார்வையாளர்களைக் கடந்த காலத்திற்குள் அழைத்துச் சென்றது. “கிடைத்த பொருளை / நகைகளைத் திருப்பிக் கொடுத்தவர்கள் பொதுமக்கள்” என்று முரண்நிலைத் தலைப்பு வைக்கப்பட்டிருந்தாலும், விவாதம் அப்படி அமையவில்லை. பதிலாக முழுமையும் ஒருபக்க உரைகளாகவே அமைந்திருந்தன.

யாரோ தவறவிட்ட பொருட்களை எடுத்துத் தாங்களே வைத்துக்கொள்ளாமல், தொலைத்தவர்களிடம் ஒப்படைத்தவர்களின் நேர்மையும், பிறர் பொருளைத் தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாக நினைக்காத மனநிலையையும் அந்த நிகழ்ச்சி பார்வையாளர்களுக்குக் கடத்தியது. அதன் மூலம் அறம் சார்ந்த சொந்த வாழ்க்கையை வாழும் எளிய மனிதர்களைப் பார்வையாளர்களின் முன்னால் நேர்நிலையாக நிறுத்தியது. நேர்நிலை முன்வைப்பாக மனிதர்களின் நிலைப்பாட்டை வைப்பதின் மூலம், அறம்பிறழும் மனிதர்களுக்கு குற்றவுணர்வு உருவாக்கமுடியும் என்பது எளிய கலையியல் பார்வை.

பொருளைத் தொலைத்துத் திரும்பக் கிடைத்தவர்களும் பொதுமக்களும் அமர்ந்திருந்த பக்கமிருந்து அதிகமாகப் பேசவில்லை. அந்தப் பக்கத்து முகங்களைக் காட் டியபோது எதிர்வரிசைப் பேச்சுகளை ஆச்சரியம் கலந்த உணர்வுகளுடன் கவனித்த நிலையையே பார்க்க முடிந்தது. ஒரேயொருவர் மட்டும் தனக்குக் கிடைத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் வைத்துக்கொண்டதை விவரித்தார். அதன் மூலம் தனது குற்றமனத்தைத் திறந்துகாட்டித் தன்னை நிறுவிக் கொண்டார். பொருள்களைத் திருப்பிக் கொடுத்தவர்கள் ஒவ்வொருவரின் விவரிப்பும் அதன் வழியாக அவர்கள் செய்த செயலும் ஆச்சரியமான நேர்மையைக் காட்டின. அவர்களின் சொந்த வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார நிலையில் இருப்பவர்கள் என்று அவர்களைச் சொல்ல முடியாது. அன்றாட வாழ்க்கையைத் தள்ளுவதற்குத் தேவையான வேலைகள் இருந்தாலும் குறைந்த வருவாய் கிடைக்கும் தொழில்கள் தான் அவர்களுடையவை. சலவைத் தொழிலாளிகள், துப்புரவுப் பணியில் இருப்பவர்கள், வீட்டு வேலைசெய்து குடும்பத்தைக் காப்பாற்றுபவர்களென இருப்பவர்கள். அவர்களுக்குக் கிடைத்த பணத்தை, நகைகளை, செல்போன் போன்ற விலை உயர்ந்த பொருட்களைத் தாங்களே உரியவர்களிடம் ஒப்படைத்ததையும், காவல்துறை மூலமாகத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்ததையும் சொன்னார்கள்.

இந்நிகழ்ச்சி முன்வைத்ததுபோல எளிய மனிதர்கள் மட்டுமே நேர்மையானவர்களாகவும் அறம்சார்ந்த வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது உண்மையல்ல. அஃதொரு நம்பிக்கை பொதுப்புத்தி. இப்பொதுப்புத்திக்கு மாறாக தனிநபர் ஒழுக்கத்தையும் நேர்மையையும் கடைப்பிடிக்கும் பணக்காரர்களையும் அதிகாரிகளையும் சந்தித்த அனுபவங்கள் பலருக்கும் இருக்கும். எனக்கும் உண்டு. 15 ஆண்டுகளுக்கு முன்பு மகளின் திருமணத்தையொட்டி, சென்னை, தி.நகர் நகைக்கடையொன்றில் நகைகள் வாங்கினோம். நகைப்பெட்டிகளை வைத்த பையோடு நடுத்தரமான உணவு விடுதியொன்றில் சாப்பிட்டோம். சாப்பிட்டு முடித்த நாங்கள் பையை எடுக்கவில்லை. மறந்து கிளம்பி வந்தவர்கள் ஓரிடத்தில் நினைவுவரத் திரும்பிச் சென்றோம்.

நகைகள் கிடைக்குமா? கிடைக்காதா? என்ற பதற்றத்துடன் நுழைந்தவர்களை ஆசுவாசப்படுத்தி, நகைகள் இருந்த பையை அப்படியே எடுத்துக்கொடுத்தார் அதன் உரிமையாளர். சாப்பிட வருபவர்கள் விட்டுச் செல்லும் எந்தப் பொருளையும் கல்லாவில் தரவேண்டும் என்பதை ஊழியர்களுக்குக் கற்பித்து நடைமுறைப்படுத்தி வருவதாக அவர் சொன்னார். சொல்லிவிட்டு அவருக்குப் பின்னால் இருக்கும் படங்களைக் காட்டினார். சாமி படங்களோடு எம்.ஜி. ஆரின் படமும் இருந்தது. ‘அடுத்தவர் பொருள்களுக்கு ஆசைப்படாத புரட்சித்தலைவரின் தொண்டன் நான்’ என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் அவர். அவரது நேர்மைக்கு எம்.ஜிஆர் தான் காரணம் என்ற நம்பிக்கை அவருக்கு. அது பிடித்திருந்தது. ஆனால் அவர் நம்பிக்கையின் மீது சிரிப்பும் வந்தது. ■



செல்வழகன்

# உயிரா? பொருளாதாரமா?

# அரசாங்கத்தின் முன்னுரிமை எதற்கு?

நாட்டின் முக்கிய தரப்புக்கள் எல்லாம் குரலெழுப்பிய போதும் கேளாச் செவியராக இருந்த ஜனாதிபதி கடைசியில் இரண்டு பௌத்த உயர்பீடங்களின் மகாநாயக்கர்களது கடிதத்தைத் தொடர்ந்து நாட்டை முடக்க முயன்றுள்ளார். புறநிலை யதார்த்தம் நாட்டை மூடுவதைத் தவிர்க்க அரசாங்கத்துக்கு வேறு வழியில்லை என்ற நிலையில் விழுந்தும் மீசையில் மண் படா வண்ணம் மகாநாயக்கர்களின் கடிதம் அரசாங்கத்திற்கு உதவியிருக்கிறது. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்ட போதிலும் சாராம்சத்தில் அது முழு முடக்கமல்ல. பல அரச சேவைகள் அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அவை பகுதியளவில் இயங்குகின்றன. விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் துறைகள், ஆடைத் தொழிற்சாலைகள் சுகாதார வழிமுறைகளுக்கு உட்பட்டு இயங்குகின்றன. அத்தியாவசிய தேவைகளுக்கும் அனுமதி. ஆக, இத்தனை செயற்பாட்டிலும் இலட்சக்கணக்கானோர் வீதிக்கு வந்துள்ள சூழலில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு ஒரு கண் துடைப்புச் செயற்பாடென்றே பலரும் கருதுகின்றனர்.

> **‘நாட்டில் பணமில்லை என்கிறார்கள். ஆனால் 36 கோடிகளைச் செலவழித்து வாகனங்களை இறக்குமதி செய்கிறார் பசில். நூறு நகரங்களை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்துள்ளார்கள், புதிய பாதைகளை அமைக்கிறார்கள்’ என்று ஆதங்கப்பட்டுள்ள பிக்கு ஒருவர், தான் வாக்களித்தமைக்காக ஆயிரம் முறை கவலைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.**

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அறிவிப்போடு ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இதன் போது கொரோனாவை எதிர்கொள்வதற்கான ஒரே வழி தடுப்பூசி போடுவதுதான் என்பதை வலியுறுத்தி, அதற்காக மேற்கொண்ட முயற்சிகளை விபரித்தார். அத்துடன் நாடு முடங்குவதால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளை விபரித்தார். கடந்த பத்தியில் இது தொடர்பில் தெரிவித்திருந்த விடயங்கள் ஜனாதிபதியின் உரையிலும் பிரதிபலித்தன.

நாட்டை முடக்குவதால் ஏற்படக் கூடிய பொருளாதார நெருக்கடிகளை அரசாங்கத்தினால் சமாளிக்க முடியாது என்பது இங்கு முக்கியமானது. பொது முடக்கத்தைத் தொடர்ந்து அமுல்படுத்த வேண்டுமானால் மக்கள் சில அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டும் என்பதை அவர் இந்த உரையில் பிரஸ்தாபித்தார். அதற்கு கட்டியம் கூறுவது போல அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நாட்டை முடக்குவதானால் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச ஊழியர்கள் தமது சம்பளப் பணத்தில் 50 வீதத்தினை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும் எனக் கூறியிருந்தார். அதை வழிமொழிந்து பேசிய இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தும் அதுதான் என்றார்.

இதற்கு எதிர்க் கட்சிகள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன. சீனிக்கு 25 சதம் வரியை விதித்ததன் மூலம் தமக்கு வேண்டியவர்கள் மில்லியன் கணக்கில் கொள்ளை இலாபம் பெற உதவினீர்களே, அவர்களிடம் இருந்து பெற்று வழங்கலாமே என்று எதிர்க் கட்சிகள் குரல் எழுப்புகின்றன.

‘நாட்டில் பணமில்லை என்கிறார்கள். ஆனால் 36 கோடிகளைச் செலவழித்து வாகனங்களை இறக்குமதி செய்கிறார் பசில். நூறு நகரங்களை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்துள்ளார்கள், புதிய பாதைகளை அமைக்கிறார்கள்’ என்று ஆதங்கப்பட்டுள்ள பிக்கு ஒருவர், தான் வாக்களித்தமைக்காக ஆயிரம் முறை கவலைப்படுவதாகத் தெரிவித்துள்ளார். நாட்டில் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்தி, நிதியினைச் செலவு செய்யும் அரசாங்கம் அவற்றை நிறுத்தி அல்லது பிற்போட்டு அந்த நிதியினை கொவிட் கட்டுப்படுத்தலுக்குப் பயன்படுத்த வேண்டும். அதனை விடுத்து அரச ஊழியர்களின் சம்பளத்தில் கை வைப்பது தவறானது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

அரசாங்கத் தரப்பு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தத் தியாகத்தையும் செய்வதற்குத் தயார் என்றும், தமது ஓகஸ்ட் மாதச் சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்கவுள்ளனர் என்றும் திலும் அமுனுகம அறிவித்த பின்னர், தன்னால் சம்பளத்தை வழங்க முடியாது என சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த ஊடகங்களுக்குத் தெரிவித்தார். எனது சம்பளம் கடன் செலுத்தவே பயன்படுகிறது. அதனால் எனது சம்பளத்தை வழங்க முடியாது. ஆனால் எனது நண்பர்களிடம் பெற்று, இதை விடப் பெருந் தொகையை அரசாங்கத்துக்கு வழங்குவேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு அமைச்சருக்கே சம்பளப் பணத்தை வழங்க முடியவில்லை என்றால், சாதாரண அரச ஊழியர்களின் நிலை என்ன என்பதே முக்கியமானது. பல அரச ஊழியர்களின் சம்பளத்தின் பெரும் பகுதி கடன் தவணைப் பணம், காப்புறுதிக் கட்டணம், லீசிங் பணம் கட்டுவதற்கே பயன்படுத்தப்படுகிறது. மீதிப் பணத்திலேயே பலரது வாழ்க்கைத் தேர் ஓடுகிறது. இந்த நிலையில் பொருட்களின் விலை பெருமளவில் உயர்ந்து விட்டது. 96 ரூபா என விலை குறிக்கப்பட்ட சீனி இன்று இருநூறு ரூபா விற்கிறது. எரிபொருள் விலை உயர்வைத் தொடர்ந்து ஏனைய எல்லாப் பொருட்களின் விலைகளும் வானளாவ உயர்ந்து விட்டன.

இந்த நிலையில் சம்பளத்தை அர்ப்பணிக்க எத்தனை அரச ஊழியர்கள் தயாராக இருப்பார்கள் என்பது கேள்விக்குறியே. அரச ஊழியர்களின் சம்பளத்தில் கை வைத்துச் சுட்டுக் கொள்ளும் விசப் பரீட்சையில் அரசாங்கம் இறங்காது. எனினும், பொருட்களுக்கான வரி விதிப்புக்களைச் செய்வதன் மூலம் பொருட்களின் விலைகள் மேலும் எகிறும் நிலையை எதிர்பார்க்கலாம். அதற்கப்பால் மேலதிக கொடுப்பனவுகள், சலுகைகளில் வெட்டினை ஏற்படுத்தலாம். வரும் வரவு செலவுத் திட்டத்தில் சில தீர்க்கமான விடயங்கள் கட்டவிழலாம் என்ற நிலையே உள்ளது.

பொருளாதார நெருக்கடி என்பது மக்களின் உயிர்களை விடப் பெறுமதியானதா? என்று எதிர்க் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் கேள்வி எழுப்புகின்றன. ஆனால் அரசாங்கமோ உயிரை விடப் பெறுமதியானது நாட்டின் பொருளாதாரமே. அது இல்லாவிட்டால் ஒன்றுமே செய்ய முடியாது என்று பதில் சொல்கிறது. ஆக, பொருளாதார நெருக்கடி என்பது தனியே மக்களுக்கான நெருக்கடி அல்ல, அது அரசாங்கத்துக்கான நெருக்கடி. அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பக்கூடிய நெருக்கடி. எனவே, அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது.

வேலைவாய்ப்பு

- அலுவலக உத்தியோகத்தர்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
- Web designer
- உதவிக் கணக்காளர்
- கணனி இயக்குனர்
- Web developer

ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தகைமை: O/L, A/L, NVQ level - 4,5

நெல்லியடியில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு

தொடர்புகளுக்கு: 0212262564, 0771102395

mail. News@theempunal.com

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 28.08.2021 அன்று ஜெயபுரீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.